# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
# (மார்க்சிஸ்ட்)
# மத்தியக் குழு

## 24வது காங்கிரசுக்கான
## வரைவு அரசியல் தீர்மானம்

**கொல்கத்தாவில் 2025 ஜனவரி 17-19 தேதிகளில் நடைபெற்ற**
**மத்தியக் குழு கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது**

விலை : ரூ.15/-

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
# மத்தியக் குழு

ஏ.கே. கோபாலன் பவன், 27-29, பாய் வீர் சிங் மார்க், புதுதில்லி 110 001

வலைத்தளம்: http://www.cpim.org மின்னஞ்சல்: cc@cpim.org

## 24வது காங்கிரசுக்கான வரைவு அரசியல் தீர்மானம்

**கொல்கத்தாவில் 2025 ஜனவரி 17-19 தேதிகளில் நடைபெற்ற மத்தியக் குழு கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது**

சிபிஐ(எம்)

24 வது அகில இந்திய மாநாடு

2–6 ஏப்ரல் 2025, மதுரை, தமிழ்நாடு

# அறிமுகம்

0.1 கட்சியின் 23வது காங்கிரசுக்குப் பிந்தைய காலகட்டம், மோடி அரசாங்கம் பிரதிநிதித்துவம் செய்கிற இந்துத்துவ-கார்ப்பரேட் ஆட்சியின் சக்திகளுக்கும், அதனை எதிர்த்த மதச்சார்பற்ற-ஜனநாயக சக்திகளுக்கும் இடையே வளர்ந்து வந்த போராட்டத்தினால் குறிக்கத்தக்கதாக உள்ளது. ஒரு பிற்போக்குத்தனமான இந்துத்துவ நிகழ்ச்சி நிரலைத் திணிக்கும் அழுத்தமும், எதிர்க்கட்சிகளையும் ஜனநாயகத்தையும் ஒடுக்கும் எதேச்சதிகார உந்துதலும் அதன் நவீன-பாசிச குணாம்சங்களைக் காட்டுகின்றன. ஒன்றிய அரசின் வகுப்புவாத கார்ப்பரேட் கொள்கைகளை சி.பி.ஐ(எம்) கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும் தொடர்ந்து எதிர்த்து வந்தன. தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களின் பிற பகுதியினர் தங்கள் வாழ்வாதாரங்களையும் பொருளாதார உரிமைகளையும் பாதுகாக்க ஒன்றுபட்ட போராட்டங்களை நடத்தினர்.

0.2 மே 2024 மக்களவைத் தேர்தல் பாஜகவுக்கு ஒரு பின்னடைவை ஏற்படுத்தியது; அது மக்களவையில் பெரும்பான்மையை இழந்தது மற்றும் நாடாளுமன்றத்தில் வலுவான எதிர்ப்பை எதிர்கொள்கிறது. இருப்பினும், மோடி அரசாங்கத்தின் மூன்றாவது பதவிக்காலத்திலும், பாஜக/ஆர்.எஸ்.எஸ் உடைய இந்துத்துவா நவ-தாராளவாத நிகழ்ச்சி நிரல்தொடர்வதை பார்க்கிறோம். இந்த முடிவுகள், நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் மோடி அரசாங்கத்தின் கார்ப்பரேட் இந்துத்துவா சார்பு கொள்கைகளை எதிர்ப்பதற்கான மேலும் விரிந்த வெளியினை உருவாக்கியுள்ளன.

0.3 கடந்த மூன்று ஆண்டுகளில், மோடி அரசாங்கம் அமெரிக்காவுடனான – ரணுவ சூழ்ச்சிகள் நிறைந்த திட்டங்களுனான தனது கேந்திரமான உறவுகளை வலுப்படுத்தியுள்ளது. இராணுவ கூட்டுக்கு அடித்தளமிடும் உடன்படிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்பதோடு, “குவாட்”அணியில் பங்கேற்கும் முடிவிலும்,காசா மீது இஸ்ரேல் நடத்தும் இனப்படுகொலைப் போருக்கு தரப்பட்ட வெட்கக்கேடான ஆதரவிலும் கண்டதைப் போல, ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்க புவிசார் அரசியல் நலன்களுடன் அதன் கூட்டு அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சிப் போக்குகள் அனைத்தும் நமது தேசிய நிலைமையுடன் நேரடித் தாக்கம் கொண்ட உலகளாவிய வளர்ச்சிப் போக்குகளோடும், புவிசார் அரசியல் உறவுகளோடும் இணைத்துப் பார்க்கப்பட வேண்டும்.

# சர்வதேச நிலவரம்

1.1 ***23 ஆவது காங்கிரசுக்குப் பிந்தைய சர்வதேச சூழலின் பிரதான போக்குகள்:***

(அ) 23 வது காங்கிரசுக்குப் பின்னர் உலகில் நடந்து வரும் இரண்டு பெரிய மோதல்களில் அமெரிக்க ஏகாதிபத்தியம் சம்பந்தப்பட்டிருக்கிறது. பத்தாயிரக் கணக்கான மக்களின் உயிரிழப்புக்கு வழிவகுத்துள்ள– காசாவின் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பினை செயலூக்கத்துடன் ஆதரிக்கிறது. மேலும் அது ரஷ்யாவுடனான போரில் உக்ரைனுக்கு கொடும் ஆயுதங்களை அளித்து ஆதரித்து வருகிறது;

(ஆ) அமைப்பு சார்ந்த நெருக்கடியின் விளைவாக, உலகப் பொருளாதாரம் மந்தமான வளர்ச்சியைக் காண்கிறது, சமத்துவமின்மையும், வறுமையும், வேலையின்மையும், பசியும், ஊட்டச்சத்துக் குறைபாடும் அதிகரித்து வருகிறது;

(இ) வளர்ந்த நாடுகள் உட்பட பல நாடுகளில் தங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், பொருளாதார இன்னல்களுக்கு எதிராகவும் தொழிலாளி வர்க்கப் போராட்டங்கள் நடந்து வருகின்றன;

(ஈ) எனினும் முன்னர் குறிப்பிட்டபடி, அரசியலில் வலதுசாரி திருப்பம் தொடர்கிறது, பல நாடுகளில் அதிதீவிர வலதுசாரி அரசியல் கட்சிகள் அதிகார நாற்காலிகளுக்கு

தேர்ந்தெடுக்கப்படுவதை பார்க்க முடிகிறது. இருப்பினும், இந்த காலகட்டத்தில், கொலம்பியா, பிரேசில், மெக்சிகோ, உருகுவே மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இடதுசாரிகள் வெற்றிகளைப் பெற்றனர்;

(உ) அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான மோதல் தீவிரமடைந்து வருகிறது;

(ஊ) சோசலிச நாடுகள் ஏகாதிபத்தியத் தாக்குதல்களை திறம்பட எதிர்த்து நிற்கின்றன;

(எ) ஏகாதிபத்தியத்திற்கும், போருக்கும், ஆக்கிரமிப்புக்கும் எதிராக போராட்டங்கள் எல்லா இடங்களிலும் நடந்து வருகின்றன;

(ஏ) காலநிலை மாற்றத்தை சமாளிப்பதற்கான வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கங்கள் தவறியிருப்பது கடுமையான நிலைமைகளுக்கு வழிவகுப்பதுடன், மக்களுக்கு கடும் இழப்புகளையும் குறிப்பாக தெற்கு உலக நாடுகளில் ஏற்படுத்துகிறது.

(ஐ) தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த தீவிர மக்கள் போராட்டங்களை அண்டைநாடுகளில் கண்டோம்;

(ஒ) அண்டை நாடுகளிடமிருந்து இந்தியா தனிமைப்படும் போக்கு தொடர்கிறது.

## பாலஸ்தீனத்தில் இஸ்ரேலிய இனப்படுகொலை

1.2 அக்டோபர் 7, 2023 அன்று ஹமாஸ் தாக்குதலுக்குப் பிறகு, காசா மீதான இஸ்ரேலின் இனப்படுகொலைத் தாக்குதல், பதினைந்து மாதங்களுக்கு தொடர்ந்தது. போர் நிறுத்தம் அறிவிக்கப்படும் வரை இஸ்ரேல் முன்னெடுத்த கொடூரமான தாக்குதலில் 47,035 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதுடன்.ஒரு லட்சம் பேர் காயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் 60 சதவீதம் பேர் பெண்களும், குழந்தைகளும் ஆவர். பள்ளிகள், மருத்துவமனைகள், ஐ.நா அகதிகள் தங்குமிடங்களிலும், ஆயுதமற்ற பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்திய இஸ்ரேல் சர்வதேச சட்டங்களை மீறியதில் எந்த தண்டனைக்கும் உள்ளாகவில்லை. மேலும் ஆளில்லா விமானங்கள், தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தியதோடு, இலக்கு வைத்த படுகொலைகளையும் மேற்கொண்டது. அமெரிக்க நிர்வாகத்தின், அதன் கூட்டாளிகளின் உடந்தையோடு இஸ்ரேல் மேற்கு கரை பகுதியை ஆக்கிரமிக்க முனைகிறது.

1.3 பாலஸ்தீனத்தை அழிப்பதற்கும், மேற்கு ஆசியாவில் பல நாடுகளை தாக்குவதற்கும் இஸ்ரேலுக்கு சாத்தியமாவது, அமெரிக்காவின் ஆதரவால்தான். 2023 முதல் இஸ்ரேலுக்கு அமெரிக்கா தனது ஆயுத ஏற்றுமதியை அதிகரித்துள்ளது. அமெரிக்கா வழங்கிய பண உதவியும் 360 கோடி டாலரில் இருந்து 1790 கோடி டாலராக ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது. உடனடியாக போர் நிறுத்தம் செய்யக் கோரி ஐ.நா.வில் கொண்டு வரப்பட்ட அனைத்து தீர்மானங்களையும் அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி நிராகரித்தது. இஸ்ரேலின் நடவடிக்கைகள் இனப்படுகொலைக்கு வழிவகுக்கும் என்று தீர்ப்பளித்த சர்வதேச நீதிமன்றத்தை (ஐ.சி.ஜே) அவர்கள் ஒருசேரப் புறக்கணித்தனர். இந்த மோதலின் மூலம் இஸ்ரேல் தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டு வெளிப்படுவதை உறுதிசெய்வதுஅமெரிக்க நலன்களுக்கு உகந்தது, ஏனெனில் அது மேற்கு ஆசியாவில் அதன் மேலாதிக்கத்தை தக்க வைக்க இது உதவியாக அமைந்திடும்.

1.4 போர் நிறுத்தம் அறிவிக்கப்படுவதற்கு முன்னர், லெபனானை தாக்கி 3,700 க்கும் அதிகமானோரை கொன்றதன் மூலம் இஸ்ரேல் மோதல்பகுதியை விரிவுபடுத்தியது. சிரியா, ஏமன், ஈரான், ஈராக் ஆகிய நாடுகள் மீது குண்டு வீசியுள்ளது. ஏமன் மீது இணைந்து தாக்குதல் நடத்திய அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு ஆதரவும் தெரிவித்துள்ளன. ஈரான் மற்றும் சிரியா ஆகிய நாடுகளுக்குள்ளே உயர்மட்ட ஈரானிய தளபதிகள் கொல்லப்பட்டனர்.

1.5 மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும் போர் நிறுத்த அறிவிப்புடன் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு வெளியான 24 மணி நேரத்திற்குள், காசா மீது எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தும் உரிமை தனக்கு இருப்பதாக இஸ்ரேல் மேற்கொண்டிருக்கும் அறிவிப்பு, போர் நிறுத்த உடன்பாட்டிற்குள்ள ஆபத்தை அம்பலப்படுத்தியது.

## சிரியா: அசாத்தின் வீழ்ச்சி

1.6 சிரியாவில் பஷார் அல்-அசாத்தின் ஆட்சி வீழ்த்தப்பட்டிருப்பது பெரும் விளைவுகளை ஏற்படுத்தும். மேற்கு ஆசியாவில் எஞ்சியிருக்கும் கடைசி மதச்சார்பற்ற அரசின் முடிவு அந்தப் பிராந்தியத்தை சீர்குலைத்து, குறுங்குழுவாத மோதல்களை அதிகரிக்கப் போகிறது. அசாத்துக்கு எதிரான ஆயுதத் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய இஸ்லாமியவாத ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் (HTS) என்றஅமைப்புஅரசாங்கத்தை அமைத்துள்ளது. பல்வேறு மத சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதாக அது உறுதியளித்த போதிலும், சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் நடந்து வருவதான செய்திகளில் இருந்து உண்மை வேறுவிதமாக இருப்பது தெரிகிறது. அவர்களில் பலர் மேலதிக தாக்குதல்களுக்கு அஞ்சி சிரியாவிலிருந்து புலம்பெயர்ந்து வருகின்றனர். எச்.டி.எஸ். அமைப்பும், இஸ்ரேலும், துருக்கியும் சிரியாவை தத்தமது செல்வாக்குக்குள் கொண்டுவருவதற்கான வழிகளில் ஈடுபட்டுள்ளன. இஸ்ரேல் கோலன் குன்றுகளில் உள்ள இடைப்பகுதியைக் கடந்து தனது துருப்புகளை நிறுத்தியது. துருக்கி எல்லைப் பகுதிகளைக் கட்டுப்படுத்தவும், குந்து இனமக்கள் ஒடுக்கப்படுவதை உறுதி செய்யவும் விரும்புகிறது. மறுபுறம், குர்திஷ்களை ஆதரித்து வந்த அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் தங்கள் ஏகாதிபத்திய நலன்களுக்கு சேவை செய்வதற்காக எச்.டி.எஸ் அமைப்பினுடனான உறவுகளை இயல்பாக்க முயற்சிக்கின்றன. மதச்சார்பற்ற நாடுகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் மத அடிப்படைவாத, தீவிரவாத சக்திகளை ஊக்குவித்து வந்துள்ள அமெரிக்க வரலாற்றைப் பார்க்கும்போது, இது எதிர்பாராதது அல்ல.

## உக்ரைனில் போர்

1.7 ரஷ்யா-உக்ரைன் போர் காரணமாக இரு தரப்பிலும் தாக்குதல்கள்அதிகரித்தன. ரஷ்யாவின் எல்லைக்குள் நீண்ட தூர ஏவுகணைகளைப் பயன்படுத்த உக்ரைனுக்கு அமெரிக்கா அனுமதி அளித்ததும் இத்தோடு இணைந்ததாகும். இத்தகைய தாக்குதல்கள் நேட்டோ நாடுகளின் நேரடி தாக்குதல் என்று கருதுவதாகவும், அணு ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதாகவும் ரஷ்யா அச்சுறுத்தியது. ஆயுதங்கள் என்ற வகையிலும், நிதியாகவும் அமெரிக்காவும் நேட்டோவும் அனைத்து ஆதரவையும் வழங்கிய போதிலும், கிழக்கு உக்ரைனில் இருந்து ரஷ்ய துருப்புகளை பின்னுக்குத் தள்ளவோ, உக்ரைன் தனது முன்னணி நிலைகளை தக்கவைக்கவோ முடியவில்லை. ரஷ்யா டோன்பாஸ் பகுதியில் தனது பிராந்திய பிடியை அதிகரித்துள்ளதுடன், உக்ரைனின் கிழக்கு பிராந்தியங்களில் படிப்படியாக முன்னேறி வருகிறது. ரஷ்யாவை பலவீனப்படுத்தி கட்டுப்படுத்தும் அமெரிக்க நோக்கத்தை முன்னெடுக்க அது உக்ரைனைப் பயன்படுத்துகிறது.

1.8 அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ரஷ்யா மீது விதித்த பொருளாதாரத் தடைகள் அனைத்தும் ரஷ்ய பொருளாதாரத்தை முடக்குவதில் தவறிவிட்டன. பல வளரும் நாடுகளுடன், குறிப்பாக சீனாவோடும் இந்தியாவோடும் நெருக்கமான உறவுகளும், வர்த்தகமும் கொண்டிருப்பதன் காரணமாக ரஷ்யா பொருளாதாரத் தடைகளின் வலையில் இருந்து தப்பிக்க முடிந்தது. உள்நாட்டு செலாவணிகளில் வர்த்தகம் செய்வதும், மலிவான விலையில் எரிபொருளை வழங்குவதும் ரஷ்யாவிற்கு அதன் சந்தைப் பங்கைத் தக்க வைத்துக் கொள்ளவும், பொருளாதாரத் தடைகளின் தாக்கத்தை சமாளிக்கவும் உதவியது. இந்த காரணிகள் அனைத்தும் ரஷ்யா போன்ற ஒரு பெரிய பொருளாதாரத்தை எதிர்கொள்வதற்கான ஆயுதம் என்ற வகையிலான பொருளாதாரத் தடைகள் தோல்வியுற்றதையே அம்பலப்படுத்தின. மறுபுறம், ரஷ்யாவிடம் இருந்து

எரிபொருள் வாங்குவதற்கு விதிக்கப்பட்ட தடை ஐரோப்பிய நாடுகளை மோசமாக பாதித்துள்ளது. எரிவாயு விலைகளும், உணவு தானியங்களின் விலைகளும் உயர்ந்தது மக்களின் சுமையை அதிகரித்தது.

## ஆசிய-பசிபிக் பிராந்தியம்: – அதிகரிக்கும் பதட்டங்கள்

1.9 ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில் சீனாவை கட்டுப்படுத்தி தனிமைப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக அமெரிக்கா தனது கடற்படையின் இருப்பையும் இராணுவ பயிற்சிகளையும் அதிகரித்துள்ளதால் பதற்றங்கள் உருவாகியுள்ளன. அமெரிக்கா இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடனான தனது இராணுவக் கூட்டணிகளை (பாதுகாப்பு ஒப்பந்தங்கள்) வலுப்படுத்த முயற்சிக்கிறது. அமெரிக்கா இப்பிராந்தியத்தில் புதிய, தாக்குதல் தன்மை கொண்ட இடை தூர நில அடிப்படையிலான ஏவுகணை அமைப்பினை நிறுவத் தொடங்கியது. அமெரிக்கா தைவானுக்கு ஆயுதங்கள் வழங்குவதன் மூலமும், பிரிவினைவாத சக்திகளுக்கு வெளிப்படையான ஆதரவை வழங்குவதன் மூலமும் சீனாவின் உள்விவகாரங்களில் வெளிப்படையாகத் தலையிடுகிறது.

1.10 கொரிய தீபகற்பம்: அமெரிக்காவால் தூண்டப்பட்ட கொரிய தீபகற்பத்தின் பதட்டநிலைமை தொடர்கிறது. இது அந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்பை கடுமையாக பாதிக்கிறது. அமெரிக்கா, ஜப்பான்,தென் கொரியா ஆகியவை முத்தரப்பு இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தியுள்ளதோடு தீவிர கூட்டு இராணுவ பயிற்சிகளையும் நடத்தி வருகின்றன. வட கொரியா (கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு) தென் கொரியாவுடனான உறவுகள் குறித்த தனது கொள்கையை மாற்றிக் கொண்டுள்ளது, வட கொரியாவும் தென் கொரியாவும் இனி ஒரே தேசத்தின் மக்கள் அல்லவென்றும், மாறாக எதிரிகள், சண்டையிடும் தரப்பினர் என்றும் அறிவித்துள்ளது. இரு தரப்புக்கும் இடையிலான உறவு வரலாறு காணாத அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

1.11 இந்த பிராந்தியத்தில் அமெரிக்காவின் பிரதான இலக்குகள் தெளிவாக சீனா, வடகொரியா, ரஷ்யா ஆகும், இந்த நாடுகளை அதிகாரப் பூர்வமாகவே “திருத்தல்வாத சக்தி” (சீனா), ஒரு “தீங்கு விளைவிக்கும் அரசு” (ரஷ்யா) மற்றும் “போக்கிரி அரசு” (வடகொரியா) என்று பெயரிட்டு அழைக்கிறது.

1.12 தனது பொருளாதாரம் பலவீனமடைந்தபோதிலும், முழு உலகத்தின் மீதும், அமெரிக்கா தனது மேலாதிக்கத்தை திணிக்க முயற்சிக்கிறது. உக்ரைனிலும், மேற்கு ஆசியாவிலும் அதன் தலையீடு அதன் இராணுவ வலிமையின் வரம்புகளைக் காட்டுகிறது. மறுபுறம், ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான வலுவான கூட்டும், அவற்றின் பின்னால் பல வளரும் நாடுகள் அணிதிரள்வதும் அமெரிக்காவின் படைக்கலங்களில் உள்ள பலவீனங்களை மேலும் அம்பலப்படுத்தியுள்ளது. ரஷ்யா, சீனாவின் அதிகரித்துவரும் தாக்கத்தை எதிர்கொள்ள, அமெரிக்கா தன்னுடைய ஜி–7 மற்றும் நேட்டோ போன்ற கூட்டணிகளை வலுப்படுத்துவதன் மூலமும், பல புதிய கூட்டணிகளை உருவாக்குவதன் மூலமும் முயற்சிக்கிறது. உலகம் படிப்படியாக இரண்டு முரண்பட்ட குழுக்களுக்குள் தள்ளப்பட்டு, மற்றொரு பனிப்போருக்கான திரைச்சீலைகளை உயரச் செய்துள்ளது.

1.13 23வது காங்கிரசில், ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் எதிராக தன் கூட்டாளிகளை ஒன்றுதிரட்ட அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே வேறுபாடுகள் நீடிப்பதாக நாம் குறிப்பிட்டோம். இக்காலகட்டத்தில், நேட்டோ மற்றும் ஜி–7 ஆகியவற்றை பயன்படுத்தி, அமெரிக்கா தனது கூட்டாளிகளை ரஷ்யாவிற்கும், சீனாவிற்கும் எதிராக ஒன்றுதிரட்ட முடிந்தது, ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான வேறுபாடுகளைத் தீர்க்கும் திசையில் நகர்ந்தது. சீனாவும், ரஷ்யாவும் கட்டுப்படுத்தப்பட வேண்டிய கவலைக்குரிய நாடுகள் என நேட்டோவும் ஜி–7 உம் அறிவித்தன. இவ்வாறாக, ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் தொடர்ந்து மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளன. டிரம்ப் அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்றதால், காலநிலை

மாற்றம், ஐரோப்பிய கூட்டணி மற்றும் நேட்டோ குறித்த அவரது கொள்கைகள் காரணமாக ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே மீண்டும் பதற்றங்கள் உருவாகும் வாய்ப்பு உள்ளது.

## அதிகரிக்கும் இராணுவச் செலவு

1.14 2023 இல் உலகளாவிய இராணுவச் செலவினம் தொடர்ந்து ஒன்பதாவது ஆண்டாக அதிகரித்து 2.44 லட்சம் கோடி டாலராக உள்ளது. மிக அதிக ராணுவச் செலவு செய்யும் நாடாக அமெரிக்காவே தொடர்ந்து இருந்து வருவதுடன், அதன் நேட்டோ நட்பு நாடுகளுடன் சேர்ந்து, உலக இராணுவச் செலவுகளில் பாதிக்கும் மேலாக உள்ளது. கால முதிர்வு பெறும் அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தங்களில் மீண்டும் கையெழுத்திட அமெரிக்கா தயக்கம் காட்டுகிறது. அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான அணு ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்களில் கடைசியான, புதிய ராணுவ கேந்திர ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் (New START), உக்ரைன் போருக்குப் பின்னர் இடை நிறுத்தப்பட்டுள்ளது. பல்வேறு ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்கள் காலாவதியாகிவிட்டதாலும், பேரழிவு ஆயுதங்களை உருவாக்கும் செலவுகளில் ஏற்பட்ட உயர்வும் உலகம் முழுவதையும் ஆபத்தில் ஆழ்த்தியது.

1.15 ஆப்பிரிக்க கண்டத்தில் இராணுவக் கலகங்களும், உள்நாட்டு மோதல்களும் காரணமாக பெருமளவிலான மக்கள் இடம் பெயர நேரும் நிலைமை அதிகரித்துள்ளது. 2022 முதல், ஆப்பிரிக்காவில் எட்டு ஆட்சிக் கவிழ்ப்புகள் நடந்து அதில் 3 வெற்றியடைந்தன. மோதல்களும், சமூக அமைதியின்மையும் காரணமாக 4.5 கோடிக்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். அடுத்தடுத்த பகுதிகளான சஹேல் பிராந்தியம், கிரேட்லேக்ஸ் மற்றும் ஹார்ன் ஆப் ஆப்ரிக்கா ஆகியவற்றில் அமைந்த 15 நாடுகள் இந்த மோதல்களால் முக்கியமாக பாதிக்கப்படுகின்றன. அவற்றில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நாடு சூடான் ஆகும், அங்கு உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. ஆப்பிரிக்காவின் பல நாடுகளின் உள் விவகாரங்களிலும், அமெரிக்கா தனது ராணுவ கட்டுப்பாட்டு மையமான AFRICOM மூலம் தொடர்ந்து தலையிடுகிறது. பிரான்ஸ் தனது முன்னாள் காலனி நாடுகளாக இருந்த மாலி, புர்கினாபாசோ, நைஜர், சாட், செனகல் மற்றும் ஐவரிகோஸ்ட் ஆகியவற்றிலிருந்து தனது துருப்புக்களை திரும்பப் பெற வேண்டிய கட்டாயம் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்டது. தமது நிலங்களில் நிலை கொண்டுள்ள வெளிநாட்டுப் படைகளை திரும்பப் பெறுமாறு கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆப்பிரிக்காவில் உள்ள பல நாடுகளும் பன்முக உறவை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறார்கள். ஆனால் ஏகாதிபத்திய நாடுகள் இதனை வெறுக்கிறார்கள்.

1.16 ஐ.நா.வின்பங்கு: காஸா, உக்ரைன், சூடான், காங்கோ போன்ற நாடுகளில் எதிர்கொள்ளப் படும் மிகவும் வன்முறையான மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஐ.நா தவறிவிட்டது. அரசியல், இராணுவம், நிதி மற்றும் வீட்டோ அதிகாரத்தைக் கொண்டிருப்பவர்களிடம்தான் உண்மையான அதிகாரம் இருக்கிறது என்பது மென்மேலும் தெளிவாகி வருகிறது. ஐ.நா. விற்கான நிதியில் தங்கள் பங்கைக் கொடுக்க மறுப்பதுடன், சர்வதேச சட்டத்தை நிலை நிறுத்த நியமிக்கப்பட்டுள்ள ஐ.நா. அமைப்புக்களையே சட்டவிரோதமாக அறிவித்தல் உட்பட தாங்கள் விரும்பியதையெல்லாம் அமெரிக்காவும், இஸ்ரேலும் செய்து வருகின்றன. உலக அமைதியையும், பாதுகாப்பை பராமரிப்பதிலும் ஐ.நா.வின் தோல்வி அதன் உறுப்பினர்களிடம் நிலவும் அதிகார ஏற்றத்தாழ்வின் வெளிப்பாடாகும். இது ஐ.நாவையும், அதன் பல்வேறு அமைப்புகளையும் ஜனநாயகப்படுத்த வேண்டிய அவசரத்தை சுட்டிக்காட்டுகிறது.

1.17 பல்துருவ முனைப்பைநோக்கி நகர்வு: பிரிக்ஸ் அமைப்பில் உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஐந்து புதிய உறுப்பினர்களைச் சேர்த்ததன் மூலம் அது விரிவுபடுத்தப்பட்டது. இந்த புதிய பிரிக்ஸ் +, உலகின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் பாதிக்கு மேலும், மொத்த உலக உள்நாட்டு உற்பத்தியில் 37 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்த நாடுகள் தங்கள் சொந்ததேச செலாவணிகளில் வர்த்தகத்தை ஊக்குவிக்க முடிவு செய்துள்ளன, இதன் மூலம் டாலர் சார்ந்த வர்த்தகத்தை குறைக்கின்றன. இது

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் டாலர் மேலாதிக்கத்திற்கும் ஒரு அடியாக இருக்கும். இந்த குழுவில் சேரும் ஆர்வத்தை பலநாடுகளும் வெளிப்படுத்தியுள்ளதோடு விண்ணப்பித்துள்ளன. அத்தகைய சில நாடுகள் "கூட்டாளி நாடுகளாக" அனுமதிக்கப்படு வது, இக்குழுவை விரிவுபடுத்தும் நோக்கில் மேலும் ஒரு படியாகும். பிரிக்ஸ் என்பதுஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு மேடை அல்ல, ஆனால் அமெரிக்கா தலைமையிலான ஒற்றை துருவ முனைப்புக்கு சவால் விடுவதோடு பல் துருவமுனைப்பை வலுப்படுத்தும் இலக்கில் செயல்படக்கூடிய ஒரு பலதரப்பு அமைப்பாக உருவாக முடியும்.

## உலகப் பொருளாதாரம்

1.18 மந்தமான வளர்ச்சித் தன்மையிலிருக்கும் ஒரு புதிய இயல்பிற்கு உலகப் பொருளாதாரம் வந்திருக்கிறது. 2024, 2025 ஆண்டுகளில் உலகப்பொருளாதார வளர்ச்சி 3.2 சதவீதம் என்ற அளவில் மாறாமல் நிலையாக இருக்கும் என்று ஐ.எம்.எப் மதிப்பிட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்றுக்கு முந்தைய ஆண்டுகளில், வளர்ந்த நாடுகளிலும், வளரும் நாடுகளிலும் பதிவான விகிதங்களை விடவும் இந்த விகிதம் குறைவு. பொருளாதாரத்திலும், சமூகத்திலும் வளர்ச்சியை ஏற்படுத்தவும், சூழலியல் சவால்களை எதிர்கொள்ளவும் இந்த விகிதம் போதுமானதாக இருக்காது. குறிப்பாக, குறைந்த வளர்ச்சியே கண்டிருக்கும் 46 நாடுகளுக்கு இது கவலையை ஏற்படுத்தும் பிரச்சனையாகும். அவர்கள் நிலையான வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கு அவசியமான 7 சதவீத வளர்ச்சியை விடவும் குறைந்த வளர்ச்சியையே கொண்டிருக்கிறார்கள்.

1.19 விலைவாசி உயர்வும், வாங்கும் சக்தி வீழ்ச்சியும் : உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு பணவீக்கம் ஒரு பெருங்கவலையாக உள்ளது. 2024 ஆம் ஆண்டில் உலகளவில் நுகர்வோர் விலைவாசி 4.3 சதவீதம் உயர்ந்துள்ளது. அதிகரித்துவரும் நுகர்வோர் விலைவாசி முன்னேறிய நாடுகளிலும், வளரும் நாடுகளிலும் மக்களின் வாங்கும் சக்தியை பாதித்து சரித்துள்ளன. 2023 ஆம் ஆண்டில், உணவுப் பொருட்களின் விலைகள் அதிகமாக இருந்தன, டிசம்பர் 2023 இல் மட்டுமே UNCTAD உணவுக் குறியீடு அதன் பிப்ரவரி 2022 நிலைக்குக் கீழே சரிந்தது. அதுவும் கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு முந்தைய நிலையைவிட சுமார் 20 சதவீதம் அதிகமாகும். எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய்கள் போன்ற விவசாய பொருட்களின் விலைகள் இதேபோன்ற ஏற்ற இறக்கங்களை கண்டன. அதேநேரத்தில் அரிசியின் விலை அதன் பிப்ரவரி 2022 நிலைக்கு கீழே குறையவில்லை. உரங்களின் விலையும் கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு முந்தைய நிலைகளைவிட உயர்ந்தது.

1.20 பல காரணிகளின் கலவையான விளைவு காரணமாக பணவீக்கம் அதிகரித்துள்ளது. உக்ரைன் போர் போன்ற பிராந்திய மோதல்கள், வணிகப் பொருட்களின் விலையேற்றம், சந்தைத் திரட்சி உச்சமடைதல், பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களின் (குறிப்பாக வேளாண்–உணவு மற்றும் எரிசக்தி துறைகளைச் சேர்ந்தவை) விலை நிர்ணயப் போக்குகள் போன்றவை இந்தக் காரணிகளில் அடங்கும். போட்டிச் சூழலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள், முக்கியத் துறைகளில் சந்தையில் ஆதிக்கம் செலுத்தும் நிலையை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் முக்கியமான தொழில்களில் கார்ப்பரேட் நிறுவனங்களின் குவிப்பு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகள், விவசாய விளைபொருட்கள் ஊக நிதி வணிகத்திற்குள் ஈடுபடுத்தப்படுவது தடுக்கப்படுவதுடன் இணைந்து மேற்கொள்ளப்படாவிட்டால் வணிகப் பொருட்களின் விலையேற்றத்திலிருந்து எந்தவகையிலும் தப்பிக்க முடியாது.

1.21 தொழிலாளர் வர்க்கத்தின் மீதான தாக்கங்கள்: வணிகப்பொருட்களின் விலை உயர்வின் விளைவுகள் தொழிலாளர் வர்க்கத்தினை கடுமையாக பாதிக்கின்றன. ஏனெனில், அவர்களின் உண்மையான ஊதியங்கள் அதிகரிக்கவில்லை. மொத்தம் 79.1 கோடி தொழிலாளர்களின் ஊதியங்கள் பணவீக்கத்திற்கு ஈடு செய்ய இயலாமல் பின்தங்கியுள்ளன. இதன் விளைவாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர்கள் 1.5 லட்சம்

கோடி டாலர் இழப்பை சந்தித்துள்ளனர். இது ஒவ்வொரு தொழிலாளருக்கும் கிட்டத்தட்ட ஒரு மாதம் (25 நாட்கள்) ஊதியம் இழக்கப்பட்டிருப்பதற்கு சமமானது. ஊதியங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, தொழிலாளர் வருமான பங்கின் சரிவிலும் தெரிகிறது. 2019 ஆம் ஆண்டில் தொழிலாளர் வருமான பங்கு 52.9 சதவிகிதமாக இருந்தது. 2022 ஆம் ஆண்டில் இது 52.3 சதவிகிதமாக குறைந்து பின்னர், இந்த விகிதம் அப்படியே நீடிக்கிறது. இந்தக் குறைவு சதவிகித அடிப்படையில் சிறியதாகத் தோன்றினாலும், 2004 ஆம் ஆண்டில் தொழிலாளர் வருமான பங்கு நிலையாக இருந்திருந்தால் கிடைத்திருக்கும் தொகையோடு ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டில் (நிலையான வாங்கும் சக்தி விகித அடிப்படையில் 2.4 லட்சம் கோடி டாலர் அளவுக்கான வருடாந்திர இழப்பாக உள்ளது. மேலும், ஊதியங்களில் நிலவும் பாலின ஏற்றத்தாழ்வு காரணமாக, பெண் தொழிலாளர்கள் இன்னும் கடுமையான சூழ்நிலைகளை எதிர்கொள்கிறார்கள். ஒரு ஆண் சம்பாதிக்கும் ஒவ்வொரு டாலருக்கும் ஒரு பெண் வெறும் 51.8 சென்ட் மட்டுமே (88 ரூபாய்க்கு வெறும் 3.21 ரூபாய் மட்டுமே) சம்பாதிக்கிறார்.

1.22 வளர்ந்த பொருளாதாரங்களிலும், வளரும் பொருளாதாரங்களிலும் தொழிலாளர் பங்கில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியும், பிரமிடின் உச்சியில் அதிகரித்து வரும் வருமானக் குவிப்பும், அடித்தட்டில் உள்ள தொழிலாளர்களே பங்கு குறைப்பின் சுமையால் அழுத்தப்படுகிறார்கள் என்ற உண்மையை சுட்டிக்காட்டுகிறது. இதுவே ஏற்றத்தாழ்வுகள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகும், மேலும் மூலதனத்திற்கும் உழைப்புக்கும் இடையிலான முரண்பாடு தீவிரமடைவதற்கும் இட்டுச் செல்கிறது.

1.23 அதிகரித்து வரும் வேலையின்மை: உலகளாவிய வேலையின்மை விகிதம் சமீபத்திய ஆண்டுகளில் சுமார் 5 சதவீதமாக உள்ளது, 2024 ஆம் ஆண்டில் கூடுதலாக 20 லட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். 2023 ஆம் ஆண்டில் உலகளாவிய இளைஞர் வேலையின்மை விகிதம் 13 சதவீதம் அல்லது 6.49 கோடி ஆகும். வேலை கிட்டும் இளை ஞர்களில் கிட்டத்தட்ட ஐந்தில் நான்கு பங்கினர், குறைந்த சம்பளம் கொண்ட, தகுதிக் குறைவான, பாதுகாப்பற்ற, தற்காலிக வேலைவாய்ப்பில் உள்ளனர். மீதமுள்ள ஒருபங்கினரில் பலர் ஒப்பந்த வேலைகளில் உள்ளனர். வேலைவாய்ப்பு, கல்வி அல்லது பயிற்சியில் இல்லாத இளைஞர்களின் விகிதம் உலக அளவில் 2024 ஆம் ஆண்டில் 20.4 சதவிகிதமாக உள்ளது. உலகில் 2.76 கோடி மக்கள் கட்டாய உழைப்பில் ஈடுபட்டுள்ளனர், மேலும் இந்த கட்டாய உழைப்பிலிருந்து முதலாளிகள் ஒவ்வொரு ஆண்டும் 23,600 கோடி டாலர் லாபமாக சம்பாதிக்கின்றனர். கட்டாய உழைப்பில் 86 சதவிகிதம் தனியார் துறையில் உள்ளது. தொழிலாளர்களின் உழைப்பை ஒட்டச் சுரண்டும் நிலையில் வைக்க மூலதனம் விரும்புவதும்,உழைப்புச் சக்தி முழுவதையும் கசக்கிப் பிழியக் கூடிய உழைப்பு வடிவங் களில் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகிறது என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

1.24 பெரும் அசமத்துவம்: 2023 ஆம் ஆண்டின் தரவுகளின்படி, உலக மக்கள் தொகையில் சுமார் 46 சதவிகிதமான மக்கள், அதாவது மூன்று பில்லியனுக்கும் அதிகமானோர், 6.85 டாலர் (2017 வாங்கும் சக்தி சமநிலை) என்ற உலக வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர். புவிக்கோளத்தின் வடக்கில் உள்ள நாடுகளுக்கும், தெற்கில் உள்ள நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்திருப்பது கடந்த 25 ஆண்டுகளில் முதல்முறையாகும். உலக அளவில் சுமார் 70 கோடி மக்கள் கடும் வறுமையில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 2.15 டாலருக்கும் குறைவாக செலவழித்து வாழ்கின்றனர். 2023 ஆம் ஆண்டில், உலக மக்கள் தொகையில் 10.7 சதவிகிதமானோர் (86.41 கோடி மக்கள்) கடுமையான உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். பசியால் பாதிக்கப்படும் மக்களில் கிட்டத்தட்ட 60 சதவிகிதம் பேர் பெண்களும், சிறுமிகளும் ஆவர். காலநிலைச் சீர்குலைவும் உலகளாவிய சமத்துவமின்மையை அதிகரிப்பதற்கு பங்களிக்கிறது.

1.25 ஏகபோகங்களுடைய செல்வக் குவிப்பு: மறுபுறம் அபாயகரமான வேகத்தில் செல்வக்

குவிப்பு நடந்து வருகிறது. உலகின் 1 சதவீதமே உள்ள பெரும் பணக்காரர்கள், ஒட்டுமொத்த மனித குலத்தின் 95 சதவீதமானவர்களிடம் உள்ள சொத்துக்களை விடவும் அதிகமான செல்வத்தை உடமையாக்கிக் கொண்டுள்ளார்கள். 2020 ஆம் ஆண்டு முதல் உருவான புதிய செல்வங்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கை ஒரு சதவீத பெரும் பணக்காரர்களே கைப்பற்றியுள்ளார்கள். 99 சதவிகிதமான மற்றவர்கள் அனைவரும் சேர்த்து பெற்றதை விட இரண்டு மடங்கு செல்வ உருவாக்கத்தைப் பெற்றிருக்கிறார்கள். பில்லியனர்களின் செல்வ வளம் நாளொன்றுக்கு 270 கோடி டாலர் அளவுக்கு அதிகரித்து வருகிறது, அதே நேரத்தில் 170 கோடி தொழிலாளர்களின் ஊதியம் பணவீக்கத்தை விட பின்தங்கி வருகிறது.

1.26 ஏகபோகங்களிடம் குவிந்துவரும் அதிகாரமும், செல்வ வளத்திரட்சியும் பின்னிப் பிணைந்த போக்காக உள்ளது. மருந்துகள், விவசாயம், தொழில்நுட்பம் போன்ற முக்கியமான சந்தைகளில் வெகுசில நிறுவனங்களே உலகளாவிய ஆதிக்கத்தை செலுத்துகிறார்கள். சமூக ஊடகம், தொழில்நுட்பம், செமிகண்டக்டர் உற்பத்தியில் ஈடுபடும் முதல் ஏழு நிறுவனங்களின் சந்தை மதிப்பு 12 லட்சம் கோடி டாலர்களாக உள்ளது. அதே நேரத்தில் மற்ற 493 பெருநிறுவனங்கள் தேக்கநிலையாலும், வீழ்ச்சியாலும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த ஏகபோகங்கள் அரசாங்கத்தின் கொள்கைகளில் தலையிடுவதற்காக தமது அதிகாரத்தை உயர்த்திக் கொள்ள முயற்சிக்கிறார்கள். குறுக்கு வழிகளில் தருவது (Lobbying), அரசியல் நன்கொடைகள், நீதிமன்றங்களை பயன்படுத்துவது, ஊடகங்கள் மீதான கட்டுப்பாடு, முதலீட்டை கட்டுப்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளும் அச்சுறுத்தல் ஆகிய பல்வேறு வழிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகைகளில் நவீன தாராளமய கொள்கைகளுக்கான நிர்ப்பந்தம் தரப்படுகின்றன. அரசாங்கங்களும் பெருநிறுவனங்களின் நலன்களை காக்கும் நோக்கில் கார்ப்பரேட் வரிகளை குறைக்கிறார்கள், தொழிலாளர் பாதுகாப்பை பலவீனப்படுத்துகிறார்கள், பொதுத்துறைகளை தனியார்மயப்படுத்துகிறார்கள், கடுமையான சிக்கன நடவடிக்கைகளை யும் பின்பற்றுகிறார்கள். நவீன தாராளமயக் கொள்கைகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அதிகரிப்பது மட்டுமல்ல, ஜனநாயக நிறுவனங்களையும் அரித்து, தாராளவாத ஜனநாயகத்தின் வரம்புகளை பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்துகின்றன.

1.27 கடுமையான கடன் நெருக்கடி: 2024 ஆம் ஆண்டு நிலவரப்படி, 54 நாடுகள் கடன் நெருக்கடியில் உள்ளன. மேலும் வளரும் நாடுகளிலிருந்து வளர்ந்த நாடுகளுக்கு நிகர வள பரிமாற்றங்கள் ஆண்டுக்கு சராசரியாக 70 ஆயிரம் கோடி டாலர் என்ற அளவில் உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும், இலங்கை உள்ளிட்ட வளரும் நாடுகளில் 18 அரசுகள் கடன் திருப்பிச் செலுத்த முடியாத நிலை (SOVERIEGN DEFAULT) ஏற்பட்டுள்ளது. இது கடந்த இருபதாண்டுகளில் பதிவான எண்ணிக்கையை விட அதிகமாகும். பல நாடுகளில் அரசுகள் எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு தனியார் கடன் வழங்குநர்களின் ஆதிக்கம் அதிகரிப்பதும் ஒரு முக்கிய காரணமாக உள்ளது. குறைந்த, நடுத்தர வருமான நாடுகளின் வெளிநாட்டுக் கடனில் பாதிக்கும் மேல் வங்கிகளிடமிருந்து, ஹெட்ஜ் நிதி நிறுவனங்கள் போன்ற தனியார் கடன் வழங்குநர்களிடமும் பெறப்பட்டவை. 2022ஆம் ஆண்டில், வளரும் நாடுகள் தங்களது வெளிநாட்டு தனியார் கடன் வழங்குநர்களுக்கு, தாங்கள் பெற்ற கடன் தொகையை விட கிட்டத்தட்ட 9000 கோடி டாலர்கள் அதிகமாக திரும்பச் செலுத்தியுள்ளன.

1.28 சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களால் விதிக்கப்படும் தீய கடன் நிபந்தனைகளும், அதிக வட்டி விகிதங்களும் கடன் நெருக்கடிக்கு வழிவகுக்கும் வேறு சில காரணிகளாகும். வளர்ச்சி குறைந்த நாடுகளின் வளங்களை, வளரும் நாடுகளுக்கும், பணக்கார, ஏகாதிபத்திய நாடுகளுக்கும் மடை மாற்றுவதற்கான ஒரு வழிவகையாக இந்தக் கடன்கள் அமைந்துள்ளன.

1.29 செயற்கை நுண்ணறிவு: செயற்கை நுண்ணறிவுக் கருவிகளின் மூலம், உரைகள்,

படங்கள் மற்றும் காணொலிகள் உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க திறன்களை பார்க்க முடிந்துள்ளது. மனிதர்களைப் போல் அல்லாமல், செயற்கை நுண்ணறிவு கருவிகள் தாம் கையாளக்கூடிய தலைப்புகளை புரிந்துகொள்ளாமலேயே தரவுகளைப் பயன்படுத்தி உள்ளடக்கத்தை உருவாக்குகின்றன. இந்தக் கருவிகளும், அமைப்புகளும் இன்று மிகவும் வலிமையானதாக ஆகியிருப்பதால், இயந்திரங்களைக் கொண்டு மேற்கொள்ளவே முடியாதென்று கருதப்பட்ட பெருமளவு அலுவலகப் பணிகளையும் கூட இப்போது தானியங்கி முறையில் செய்ய முடியும் என்று ஆகியுள்ளது. பல துறைகளில் உள்ள உழைக்கும் மக்களும், தமது வேலைகளை பாதுகாத்துக்கொள்ள போராட வேண்டியிருக்கும். அரசின் சேவைகளைப் பெறவும், நலத்திட்டங்களை வழங்குவதற்கும் செயற்கை நுண்ணறிவு அமைப்பு பயன்படுத்தப்படுகிறது. இது மக்களின் வாழ்க்கையின் முக்கியமான முடிவுகளை அவர்களின் ஈடுபாடு ஏதுமின்றி மேற்கொள்வார்களோ என்ற கவலையை எழுப்பியுள்ளது. போர்க்களங்களில் ஒரு ஆயுதமாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் நமது அந்தரங்க தகவல்களை சேகரிக்கின்றார்கள். இது அடிப்படை உரிமையான அந்தரங்க உரிமை மீறப்படுவதற்கு வழிவகுக்கிறது. செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சிப் போக்கில், மக்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாத்திட வலுவான ஒழுங்குமுறை ஏற்பாடுகள் மிக அவசியத் தேவையாகும்.

## அதிகரிக்கும் போராட்டங்கள்

1.30 அதிகரிக்கும் சமத்துவமின்மை, வேலையின்மை, வறுமை ஆகியவை பரந்த அளவில் அதிருப்தியையும், கோபத்தையும் உருவாக்கியுள்ளன. அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் கிரீஸ் போன்ற பல வளர்ந்த நாடுகளிலும், போர்ச்சுகல், அர்ஜென்டினா, பிரேசில், கென்யா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளிலும் 2022 ஆம் ஆண்டு முதல் போராட்டங்களின் அலைகள் உருவாகி வருகின்றன. இப்போராட்டங்களில் பல தரப்பு மக்களும் இணைந்தனர். நமது அண்டை நாடுகளான இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகியவற்றையும் போராட்டங்கள் உலுக்கின. பல்வேறு நாடுகளில் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் பொருளாதார நெருக்கடி, சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் அரசியல் ஊழல் ஆகியவற்றை எதிர்த்து பெரிய போராட்டங்களை நடத்தியுள்ளனர். அவர்கள் நியாயமான ஊதியம், சிறந்த வேலை நிலைமைகள் மற்றும் கூடுதலான பொருளாதார நீதி ஆகியவற்றைக் கோருகின்றனர்.

## அதி தீவிர வலதுசாரி சக்திகளின் வளர்ச்சி

1.31 மக்களின் வாழ்க்கை நிலைமைகள் சீரழிந்து வருவதைப் பற்றிய கவலைகளைப் பயன்படுத்திக் கொண்டு நவீன-பாசிச சக்திகளும், அதிதீவிர வலதுசாரி கட்சிகளும் சில நாடுகளில் செல்வாக்குப் பெறுவதை பார்க்க முடிகிறது. இனவெறி, வெளிநாட்டவர் விரோத மனோபாவம், புலம் பெயர்ந்தோர் மீதான அச்ச உணர்வுகளைத் தூண்டுவதன் மூலம் அவர்கள் பலமடைந்திருக்கின்றனர். இடதுசாரி அரசியல் மாற்று சாத்தியம் இல்லாத சூழலிலேயே, மக்களின் அதிருப்தி தீவிர வலதுசாரிகளால் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது, போராட்டங்களில் ஒற்றுமையை பிளவுபடுத்த இது உதவுவதை காண முடிகிறது. சமூக ஜனநாயக கட்சிகளும், ஜனநாயக கட்சிகளும், பழமைவாதிகளும் தங்கள் ஆட்சிக் காலத்தில் நவீன-தாராளமய கொள்கைகளை அமலாக்குகிறார்கள். இதனால் இத்தகைய நிறுவனமான அரசியல் கட்சிகளின் மீது உருவாகும் கோபம் மக்களை தீவிர வலதுசாரிகளை நோக்கி நகர வழிவகுத்தது, மேலும் இது அதிதீவிர வலதுசாரி கட்சிகளுக்கு தேர்தல் வெற்றிகளை உறுதிப்படுத்தவும் உதவியது. இந்தக் கட்சிகள், அதிகாரத்திற்கு வந்தவுடன், நவீன தாராளமயக் கொள்கைகளைப் பின்பற்றுவது மட்டுமல்லாமல், சமூக ஒற்றுமைக்கு அச்சுறுத்தலான பிளவுவாத சக்திகளுடைய வளர்ச்சியையும் ஊக்குவிக்கிறார்கள். கட்சியின் 23வது காங்கிரசில் குறிப்பிடப்பட்ட வலதுசாரி அரசியல் திருப்பம் இவ்வகையில் தொடர்கிறது, ஒரு தீவிர அச்சுறுத்தலாக எழுந்துள்ளது.

1.32 பல்வேறு நாடுகளிலும், கொரோனா பெருந்தொற்றுக் காலத்தை நிர்வகித்த அரசாங்கங்கள், அதிகாரத்தை இழந்திருக்கின்றன. அனைவருக்கும் வாக்குரிமை தொடங்கிய காலத்திலிருந்து பார்க்கும்போது, வளர்ந்த நாடுகளில் ஆட்சியில் இருந்த அனைத்து கட்சிகளுமே தங்களுடைய வாக்கு சதவிகிதத்தை இழந்திருப்பது இதுதான் முதல் முறையாகும். ஒட்டுமொத்தமாக, இந்த தேர்தல்களில் மக்களிடையே பிளவுகள் அதிகரிப்பதையும், பிரிவினைகள் கூர்மையாவதையும் பார்க்க முடிகிறது. சமூக-ஜனநாயக, மத்தியவாத மற்றும் பசுமைக் கட்சிகள்தங்கள் தளத்தை வலதுசாரிகளிடம் இழக்கிறார்கள்.

1.33 கொலம்பியா, மெக்சிகோ, பிரேசில், இலங்கை, உருகுவே ஆகிய நாடுகளில், மக்கள் தம் வாக்குகளை மக்கள் விரோத அரசாங்கங்களுக்கு எதிராக செலுத்திய நிலையில் முற்போக்கு சக்திகளால் தேர்தல்களில் வெற்றுபெற முடிந்தது. இடதுசாரிகள் எங்கெல்லாம் வெகுமக்கள் போராட்டங்களில் செயலூக்கமான பாத்திரம் வகிக்க முடிந்ததோ, எங்கெல்லாம் நிறுவனமான அரசியல் கட்சிகளிடமிருந்து தம்மை வேறுபடுத்திக் காட்ட முடிந்ததோ, அங்கெல்லாம் இடதுசாரிகளால் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடிந்தது. மேலும் தம் தேர்தல் வெற்றிகளின் மூலம், அதி தீவிர வலதுசாரி சக்திகளின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தவும் முடிந்துள்ளது.

1.34 இருப்பினும், உலகின் பல பகுதிகளிலும், தீவிர வலதுசாரி சக்திகள் அரசாங்கத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டன. ஐரோப்பிய நாடாளுமன்றத்திற்கான தேர்தல்களில், பல நாடுகளில் அதிதீவிர வலதுசாரி கட்சிகள் கணிசமாக முன்னேறின. அர்ஜென்டினாவில் ஜேவியர்மிலே, இத்தாலியில் ஜியோர்ஜியா மெலொனி மற்றும் அமெரிக்காவில் டொனால்ட் டிரம்ப் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது ஒரு வலதுசாரி அரசியல் திருப்பத்தின் உலகளாவிய போக்கைப் பிரதிபலிக்கிறது. இது நிச்சயமற்ற பொருளாதார சூழல், ராஜ தந்திர சிக்கல்கள், சுற்றுச்சூழல் கொள்கை முரண்பாடுகள் நிறைந்த காலகட்டம் தொடங்கிவிட்டதை காட்டுகிறது. டொனால்ட் டிரம்ப் பதவியேற்ற உடனேயே, பனாமா கால்வாயை பனாமாவிடமிருந்து திரும்பப் பெறுவோம் என அறிவிப்புச் செய்ததன் மூலம் தனது நிர்வாகம், மூர்க்கத்தனமாக, விரிவாக்க நோக்கத்துடன் செயல்படும் விருப்பத்துடன் இருப்பதை வெளிப்படுத்தினார். மேலும்அவர் கியூபாவை பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளின் பட்டியலில் மீண்டும் வைத்தார். புதிய நிர்வாகம் சீனா போன்ற நாடுகள் மீது சுங்கவரிகளை அதிகரிக்கும் என்றும், உலகப் பொருளாதாரத்தை எதிர்மறையாக பாதிக்கின்ற வர்த்தகப் போர்களை புதுப்பிக்கும் என்றும் அறிவித்தார். டிரம்ப் அதிபராக உள்ள காலகட்டம் போர்களை முடிவுக்குக் கொண்டு வராது, ஏனெனில் அவர் இஸ்ரேலை முழுமையாக ஆதரிக்கிறார், மேலும் அமெரிக்க பொருளாதார சக்திக்கு சவால் விடக்கூடிய எந்தவொரு நாட்டின் எழுச்சிக்கும் அவர் எதிரானவரே. பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்தும், உலக சுகாதார அமைப்பிலிருந்தும் அமெரிக்கா விலகுவதாக டிரம்ப் அறிவித்தார், இது சர்வதேச ஒப்பந்தங்கள் மீதும், அமைப்புகள் மீதும் அவரின் அவமரியாதையைக் காட்டுகிறது. அவர் உள்நாட்டில் தனது தீவிர வலதுசாரி திட்ட நிரலை செயல்படுத்திடும் பல்வேறு நிர்வாக உத்தரவுகளையும் பிறப்பித்துள்ளார்.

## காலநிலை மாற்றம்

1.35 வளர்ந்த நாடுகளில் அதிகாரத்திற்கு வந்த பல தீவிர வலதுசாரி கட்சிகள் காலநிலைமாற்ற பிரச்சனையை கருத்தில் கொள்ள மறுக்கின்றன, இது காலநிலை சவால்களை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளை எதிர்மறையாக பாதிக்கும். 2024 ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டம், உலகளாவிய சராசரி வெப்பநிலை ஆலை உற்பத்திக் காலத்திற்கு முந்தைய சராசரியைவிட 1.5 டிகிரி செல்சியஸ் அல்லது அதற்குமேல் அதிகரித்த, ஓராண்டு ஆகும். 2014 பாரிஸ் ஒப்பந்தத்தின்படி, புவி வெப்பமாதலைக் கட்டுப்படுத்த நிர்ணயிக்கப்பட்ட கீழ் வரம்பு கூட மீறப்பட்டுள்ள அச்சுறுத்தும் நிகழ்வாகும். 1 சதவிகிதம் மேல்தட்டு வர்க்கத்தினர் நுகர்வு மற்றும் பயன்பாடுகளுக்காக வெளியிடப்படும்

கரியமில வாயுக் கழிவுகளின் அளவு, உலகின் மூன்றில் இரண்டு பங்காக உள்ள ஏழைகள் அல்லது 500 கோடி மக்கள் தொகைக்காக வெளியிடப்படும் கரியமில வாயுக் கழிவுகளின்அளவை விடவும் அதிகமாகும். புவிக்கோளத்தின் தெற்கு நாடுகளில் உள்ள ஏழைகளும், விளிம்பு நிலைமையில் வாழ்வோருமே மிக மோசமான பாதிப்பை தாங்க வேண்டியிருக்கும்.

1.36 காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதிலும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும் தங்கள் பொறுப்புகளை ஏற்க பணக்கார, வளர்ந்த நாடுகள் தயாராக இல்லை. வளர்ந்த நாடுகள் புதை படிம எரிபொருள்களைப் பயன்படுத்துவதில் பிடிவாதமாக உள்ளன, அவற்றின் பயன்பாட்டை மெதுவாகக் குறைக்கின்றன, அதே நேரத்தில் வளரும் நாடுகளை விலையுயர்ந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கின்றன. மேலும் வளரும் நாடுகளின் தொழில்துறை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், அவற்றில் வாழும் மக்கள் எரிசக்தி ஆற்றலை சமமாக அணுகுவதை கட்டுப்படுத்தவும் முயற்சிக்கின்றன. 2024 ஆம் ஆண்டில் பாகுவில் முடிவடைந்த COP29 மாநாட்டில், வளரும் நாடுகளுக்கான காலநிலை நிதியாக, வளர்ந்த நாடுகள் 30,000 கோடி டாலர் மட்டுமே முழுமையாக 2035 ஆம் ஆண்டுக்குள் வழங்க முன்வந்தனர். இந்த அற்பத்தொகையை ஏற்க வேண்டிய கட்டாயத்தில் உடன்பாடு என்ற பெயரால் ஏழை நாடுகள் நிறுத்தப்பட்டன. இந்த “ஒப்பந்தமானது”, புவி வெப்பமாதல் காரணமாக வெள்ளப் பேரழிவுகள், பட்டினி மற்றும் இடம்பெயர்வை எதிர்கொள்ளும் பூமிக்கு மேலும் ஒரு பேரழிவு அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது. வளர்ந்த நாடுகள் போதுமான நிதியை வழங்குவதற்கு பதிலாக, உமிழ்வைக் குறைத்துக் கொள்ளும் சுமையை சிறு விவசாயிகள், ஊரக மக்களின் மீது சுமத்துகின்றன. இயற்கை வளங்களை மேலும் வணிகமயமாக்க விரும்புகின்றன. உலகம் முழுவதும் உணவுப் பாதுகாப்பில் பெற்றுள்ள குறைந்தபட்ச முன்னேற்றங்களும் கூட, பயோ-எரிபொருள் மற்றும் ஆற்றல் உற்பத்தி நோக்கிலான பயிரிடலை நோக்கி மாறிட தரப்படும் அழுத்தங்களால் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளன. இது உணவு மற்றும் ஊட்டச்சத்துக்கான உற்பத்தியை ஒழித்துக் கட்டும் போக்காகும்.

1.37 ஆலை உற்பத்தியின் தொடக்கம் முதல், உலக அளவில் குவிந்திருக்கும் மொத்த கரியமில வாயுக் கழிவு உமிழ்வில் 75 சதவிகிதத்திற்கும் அதிகமான உமிழ்வுக்கு பொறுப்பான பணக்கார நாடுகளே, வளரும் நாடுகளுக்கு உதவ வேண்டிய கடப்பாடு கொண்டுள்ளன. காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தங்களை தகவமைத்துக் கொள்ளவும், காலநிலைப் பேரிடர்களால் ஏற்படும் இழப்புகளுக்கும், சேதங்களுக்கும், இழப்பீடு தர வேண்டும். புதை படிம எரிபொருள் சார்பிலிருந்து மாறுவதை நீதியான, சமத்துவ முறையில் மேற்கொண்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நோக்கியும், காலநிலை நெகிழ்திறன் அடிப்படையிலான சமூக அமைப்பை நோக்கியும் வளர்ந்து வருவதற்கு நிதியுதவி செய்ய வேண்டும். வளரும் நாடுகளுக்கான இழப்பீடாக, ஒவ்வொரு ஆண்டும் பல டிரில்லியன் டாலர் காலநிலைக் கடன்களை வழங்க வேண்டிய கடப்பாடு பணக்கார நாடுகளுக்கும், வளர்ந்த நாடுகளுக்கும் உள்ளது. முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் தம் உமிழ்வுகளை பலமடங்கு குறைப்பதற்கான உறுதிப்பாட்டினை வழங்கிடவும், காலநிலை நிதியுதவியும், தொழில்நுட்ப பரிமாற்றமும் செய்வதற்கான தம் உறுதிமொழிகளை நிறைவேற்றிடவும் உரிய அழுத்தம் கொடுப்பதற்கு இடதுசாரி சக்திகளும், முற்போக்காளர்களும் கைகோர்க்க வேண்டும்.

1.38 இவ்வாறு, புவி வெப்பமாதலுக்கு பொறுப்பேற்கவும், காலநிலை நீதியை உறுதி செய்யவும் மறுப்பது, வளரும் நாடுகளின் அதிகரிக்கும் கடன் சுமை, அதிகரிக்கும் சமத்துவமின்மை ஆகிய பிரச்சனைகள் பணக்கார, முன்னேறிய முதலாளித்துவ நாடுகளுக்கும் வளரும் நாடுகளின் மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டை தீவிரப்படுத்துகின்றன.

## அண்டை நாடுகள்

1.39 நமது அண்டை நாடுகளில் பல நாடுகள் தங்கள் அரசுகளுக்கு எதிராக மகத்தான மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றன. இந்த போராட்டங்களில் பல மாணவர்களாலும்,

இளைஞர்களாலும் தலைமை தாங்கப்படுகின்றன, அவர்களுடன் அனைத்து பிரிவு மக்களும் இணைந்துள்ளனர். ஊழல், வாழ்க்கைச் செலவினங்களின் அதிகரிப்பு, பொருளாதார நெருக்கடிகள், எதேச்சதிகாரப் போக்குகள் ஆகியவற்றை எதிர்த்த முழக்கங்களே பெரும்பாலான போராட்டங்களில் பொதுவான கோரிக்கைகளாகும். இந்த எதிர்ப்புகளை மிருகத்தனமான போலீஸ், ஆயுதப்படை அடக்குமுறைகளை பயன்படுத்தி நசுக்கிடவே பெரும்பாலும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை வெற்றி பெறவில்லை.

1.40 பங்களாதேஷில், அவாமி லீக்கின் தலைவராக இருந்த ஷேக் ஹசீனா வஜித்தின் எதேச்சதிகார ஆட்சி, மாணவர்கள் தலைமையிலான மக்கள் இயக்கத்தால் வீழ்ந்தது. சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டதற்கு எதிரான எதிர்ப்பாக இந்தப் போராட்டங்கள் தொடங்கி, விரைவிலேயே அரசாங்கத்தின் எதேச்சதிகார ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பாக ஒரு பரந்த தன்மையைப் பெற்றன. அவர்கள் மிருகத்தனமான அடக்குமுறையை எதிர்கொண்டனர், நூற்றுக்கணக்கானவர்கள் போலீஸ்துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். அரசுக்கு ஆதரவாக ராணுவம் தலையிட மறுத்ததால், ஷேக் ஹசீனா இந்தியாவுக்கு தப்பி ஓட வேண்டியதாயிற்று. கொந்தளிப்புக்கும், குழப்பங்களுக்கும் மத்தியில், இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகள் ஒரு வகுப்புவாத பிளவை உருவாக்க அந்நாட்டின் சிறுபான்மையினரை குறிவைத்து தாக்கின. மதச்சார்பற்ற எதிர்க்கட்சிகளும் இலக்குகளாக தாக்கப்படுகின்றன. கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட மத அடிப்படைவாதிகளும், தீவிரவாத சக்திகளும் இடைக்கால அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வுகள் அரசியலமைப்பிலும், அரசியல் முறையிலும் முன்மொழியப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து அச்சங்களை ஏற்படுத்துகின்றன.

1.41 அமெரிக்காவும் அதன் மேற்கத்திய நட்பு நாடுகளும் தலையீடு செய்வதன் மூலம் தங்கள் நலன்களை முன்னெடுக்க முயற்சிக்கின்றன. பங்களாதேஷின் புவி அரசியல் முக்கித்துவம் வாய்ந்த இருப்பிடமும், அந்த நாட்டின் மீதான அவர்களின் ஆர்வத்திற்கு ஒரு முக்கிய காரணம். சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை ஜனநாயக சக்திகள் உறுதி செய்ய வேண்டும். பங்களாதேஷின் ஜனநாயகமும், இறையாண்மையும் அனைத்து வித வெளிப்புற தாக்கங்கள், அழுத்தங்களில் இருந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதும் அவர்களின் பொறுப்பாகும். மக்களின் நியாயமான குறைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் மட்டுமே அவர்கள் நாட்டை பிரிவினையிலிருந்தும், ஏகாதிபத்திய தாக்கத்திலிருந்தும் பாதுகாக்க முடியும். இந்தியாவுடன் பரந்த நில எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு நாடு என்ற வகையில், பங்களாதேஷின் நிகழ்வுகள் நம் நாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

1.42 இலங்கையில் நடைபெற்ற அதிபர் தேர்தலிலும் அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்துக்கான தேர்தலிலும், இரண்டு பிரதான ஆளும் வர்க்க கட்சிகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஊழல் கும்பல்களால் வெறுப்படைந்த மக்கள், மாற்றத்திற்காக தீர்க்கமாக வாக்களித்தனர். தேசிய மக்கள் சக்தி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தலைமையிலான அணிக்கு வெற்றி கிடைத்தது. ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இலங்கையின் வரலாறு காணா வெற்றியின் மூலம் ஆட்சியின் தலைமையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். நாடாளுமன்றத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.க்களில் 70 சதவீதம் பேர் இந்த முற்போக்கான, இடதுசாரி கூட்டணியைச் சேர்ந்தவர்கள். இது நமது பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள மிகவும் குறிப்பிடத்தக்க,நேர்மறையான வளர்ச்சிப் போக்காகும்.

1.43 மியான்மரில், இராணுவ ஆட்சிக் குழுவின் ஆட்சி இன அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட ஆயுதமேந்திய போராளிகளால் சவாலுக்கு உட்படுத்தப்படுகிறது. நாட்டில் கிட்டத்தட்ட உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருக்கிறது, இராணுவ ஆட்சிக்குழு பல பகுதிகளில்

கட்டுப்பாட்டை இழந்துள்ளது. ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை கவிழ்த்தும், அமைதியான ஆர்ப்பாட்டங்களை மிருகத்தனமாக நசுக்கியும் வந்த இராணுவ நிர்வாகம் அதிகரிக்கும் பொருளாதார துயரங்களை புறந்தள்ளியதும், தற்போது இராணுவத்திற்கும், ஆயுதக் குழுக்களுக்கும் இடையில் நடந்துவரும் மோதலின் மையமாக உள்ளன. இந்த மோதல்களுக்குப் பின்னால் உள்ள ஏகாதிபத்திய முகமைகளின் இருப்பையும் ஆதரவையும் புறந்தள்ளிட முடியாது.

1.44 பாகிஸ்தானில், பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் (பி.டி.ஐ) தகுதி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் பாகிஸ்தான் முஸ்லீம் லீக்-என் (பி.எம்.எல்-என்),பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) ஆகியவற்றின் கூட்டணி அரசாங்கம் அமைக்கப்பட்டது. அரசின் செயல்பாடுகளில் ராணுவம் தலையிட்டு முக்கிய பங்கு வகிக்கிறது. நாட்டின் பொருளாதார துயரங்களை நிவர்த்தி செய்ய அரசாங்கம் தவறியதால், அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும், அணுகுமுறைக்கும் எதிராக மக்கள் மீண்டும் வீதிகளில் இறங்கி போராட வழிவகுத்துள்ளது . பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இம்ரான் கானை விடுவிக்கக் கோரி பரவலான போராட்டங்கள் நடத்தப்பட்டன.

1.45 ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறியது தலிபான் அரசாங்கத்தை உருவாக்க வழிவகுத்தது. இது படிப்படியாக பல்வேறு நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. இந்திய அரசு மெல்ல மெல்ல தலிபான்களுடன் உறவுகளை ஏற்படுத்தி வருகிறது. தலிபான்கள் தங்கள் பிற்போக்குத்தனமான, எவ்வித மாற்றங்களுக்கு எதிரான கொள்கைகளை, குறிப்பாக பெண்களுக்கு எதிராக தொடர்கின்றனர்.

1.46 மாலத்தீவின் புதியஅதிபர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் மாலத்தீவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் சீர்குலைந்தன. மாலத்தீவில் இந்திய இராணுவத்தின் விரிவாக்கப்பட்ட இருப்புக்கு எதிராக பிரச்சாரம் செய்து, அந்த நாட்டின் இறையாண்மைக்கு அவமதிப்பாகக் கருதப்பட்டதொரு இந்திய எதிர்ப்பு அடித்தளத்தில் இருந்தே அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியாவுடனான உறவை மீட்டெடுக்க மாலத்தீவு அரசு இப்போது முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

1.47 நேபாளத்தில், ஊஞசூ (UML) நேபாள காங்கிரசுடன் சேர்ந்து உருவாக்கப்பட்ட கூட்டணி அரசுக்கு தலைமை ஏற்றுள்ளது, முந்தைய ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் மூன்று வெவ்வேறு பிரிவுகளாக பிளவுபட்டுள்ளது. கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுகள், மக்களில் சிலரை இந்தக் கட்சிகளிலிருந்து விலக்கி வைத்துள்ளன. மன்னராட்சி ஆதரவு சக்திகள் மக்களின் அதிருப்தியைப் பயன்படுத்தி மீண்டும் அங்கீகாரத்தைப் பெற்று ஒரு மாற்று அரசியல் சக்தியாக உருவாக முயற்சிக்கின்றன. இந்துத்துவா ஆதரவு, ஆர்.எஸ்.எஸ் சக்திகள் இந்த சக்திகளை தீவிரமாக ஆதரித்து வருகின்றன, புதிதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மதச்சார்பற்ற அரசியலமைப்புக்கும், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் எதிராக பிரச்சாரம் செய்கின்றன.

## சோசலிச நாடுகள்

1.48 சீனா: சீனாவை ஒரு 'புவி அரசியல், பொருளாதார, ராணுவ ரீதியான எதிரி' என்று வகைப்படுத்தி, "சீனாவை கட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல், தனிமைப்படுத்துவதற்கும்" அமெரிக்கா தொடர்ச்சியான நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது என்று நமது 23வது காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானம்,குறிப்பிட்டது. "ஏகாதிபத்தியத்திற்கும் சோசலிசத்திற்கும் இடையிலான மைய முரண்பாட்டில் அமெரிக்க-சீன மோதல் தாக்கத்தை ஏற்படுத்தும்" (பத்தி 1.29) என்றும் கூடுதலாக குறிப்பிடப்பட்டது. இந்த காலகட்டத்தில், அமெரிக்கா சீனாவை கட்டுப்படுத்தி தனிமைப்படுத்தும் முயற்சிகளை தீவிரப்படுத்தியுள்ளது, ஆனால் அதில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை.

1.49 சீனாவின் உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள், முக்கிய தொழில் நுட்பங்களையும்

உபகரணங்களையும் அணுகுவதற்கு தடைகளை ஏற்படுத்தி தடுப்பதற்கு அமெரிக்கா அனைத்து முயற்சிகளையும் செய்கிறது. செமிகண்டக்டர் விநியோகத்தில் இருந்து சீனாவை ஒதுக்கும் முயற்சியில் அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான், தைவான் ஆகிய நாடுகளுக்கிடையில் 'நான்கு தரப்பு சிப் கூட்டணியை' உருவாக்கியது. பைடனின் நிர்வாகம் வர்த்தக உறவுகளை ஒரு ஆயுதமாக்கியது, கட்டணங்களை உச்ச நிலைக்கு உயர்த்தியது, வர்த்தகப் போரை அறிவித்தது. அமெரிக்கா தலைமையிலான ஜி-7 நாடுகளும், நேட்டோ நாடுகளும் தம்முடைய உலக ஆதிக்கத்திற்கு சீனா ஒரு பிரதான அச்சுறுத்தல் என்று பகிரங்கமாக அறிவித்தன. சீனாவை கட்டுப்படுத்தவும், தனிமைப்படுத்தவும், சீனாவோடு போட்டியிடவும் கூட்டணிகளைப் பலப்படுத்திடவும் கங்கணம் கட்டியுள்ளன.

1.50 இந்த அனைத்து தாக்குதல்களையும் மீறி, அவற்றைக் கடந்த, உலகப் பொருளாதாரத்தின் மிகப்பெரிய வளர்ச்சிப் பொறியாக சீனா இருக்கிறது. அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் ஆண்டுக்கு 4.8 சதவிகிதம் விரிவடைந்து வருகிறது, மேலும் ஆண்டு வளர்ச்சி இலக்கு சுமார் 5 சதவிகிதத்தை எட்ட முனைந்து வருகிறது. அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2023 இல் 126 லட்சம் கோடி யுவானைத் தாண்டியது, இது 5.2 சதவிகிதம் அதிகரித்துள்ளது. உலகளாவிய அந்நிய செலாவணி வருவாயில் சீன நாணயத்தின் பங்கு 20 ஆண்டுகளுக்கு முன்பு 1 சதவிகிதத்திற்கும் குறைவாக இருந்தது, இப்போது 7 சதவிகிதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது, இது நம்பகமான பொருளாதார சக்தி மையங்களில் ஒன்றாக சீனா உருவெடுத்ததைக் குறிக்கிறது. அரசுக்கு சொந்தமான துறையை வலுப்படுத்தவும், அரசு மூலதனத்தையும், அரசு நிறுவனங்களையும் வலிமையோடு, சிறப்பாக, பெரிதாக வளர்த்தெடுக்கவும், அவற்றின் பிரதான செயல்பாடுகளையும், போட்டித்திறனையும் மேம்படுத்த சீனா முடிவெடுத்துள்ளாது. மேலும் சீனா தனது பொருளாதாரத்தை மேலும் புத்துயிர் பெறச் செய்ய கிட்டத்தட்ட 900 பில்லியன் டாலர் ஊக்க திட்டங்களையும் அறிவித்தது.

1.51 150க்கும் அதிகமான நாடுகளும், 30 க்கும் மேற்பட்ட சர்வதேச அமைப்புகளும் சீனாவின் பெல்ட் மற்றும் ரோடு எனப்படும் உலகளாவிய வணிக வட்டப்பாதை திட்டத்தில் (பிஆர்ஐ) இணைந்துள்ளன. சமமான,பரஸ்பர நன்மை அடிப்படையில் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஒரு முக்கியமான தளமாக பிஆர்ஐ பார்க்கப்படுகிறது. சர்வதேச உறவுகள் பற்றிய சீனாவின் அணுகுமுறையிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு திட்டத்தை முன்மொழிவது, ஈரான் – சவுதி அரேபியா உறவுகளை மீட்டெடுக்க உதவுவது,இஸ்ரேலுக்கு எதிராக போராடும் பாலஸ்தீனிய அமைப்புகளின் பல்வேறு பிரிவுகளையும், குழுக்களையும் ஒன்றிணைப்பது போன்ற பல்வேறு வளர்ச்சிப்போக்குகளிலும், மோதல்களை தீர்ப்பதிலும் சீனா தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

1.52 வியட்நாம்: வியட்நாம் உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாகும், அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 2024 ஆம் ஆண்டில் 6.8-7 சதவிகிதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2024 இல் 4900 டாலரினை எட்டியுள்ளது, இது முப்பதாண்டுகளுக்கு முன்பு 200 டாலர்களாக இருந்தது. பல பரிமாண வறுமை விகிதம் சுமார் 1 சதவிகிதமாகக் குறைந்துள்ளது, அதே நேரத்தில் வேலையின்மை விகிதம் சுமார் 4 சதவிகிதமாக உள்ளது. வீண் விரயத்தையும், ஊழலையும் ஒழிக்கவும் நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லவும், அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி (சிபிவி) முடிவு செய்துள்ளது.

1.53 கியூபா: கொரோனா பெருந்தொற்றினால் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவுகளில் இருந்து கியூபாவின் பொருளாதாரம் இன்னும் மீளவில்லை. கியூபாவுக்கு பணம் அனுப்பப்படுவது நின்றிருப்பதால், முக்கிய வருமான ஆதாரம் தடைபட்டுள்ளது, எரிபொருள் விநியோகம்

செய்யும் நாடுகளின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் காரணமாக, எரிபொருள் பற்றாக்குறையாகியுள்ளது. இந்த நெருக்கடிகள் அனைத்தையும் குறிப்பாக உணவு, எரிபொருள், மின்சாரப் பற்றாக்குறையை சமாளிக்கும் நடைமுறைகளில் கியூபா ஈடுபட்டு வருகிறது. ஆட்சி மாற்றத்தை செயல்படுத்த இதுவே சரியான நேரம் என்று நம்பும் அமெரிக்க ஏகாதிபத்தியம், பொய்களைப் பரப்புவதன் மூலம் அமைதியின்மையைத் தூண்டிவிட முயல்துமான, ஏகாதிபத்தியத்தின் தீவிர தாக்குதலை கியூபா எதிர்கொள்கிறது.

1.54 வடகொரியா: தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக சுருங்கிய வட கொரியாவின் பொருளாதாரம், சீனாவுடனான வர்த்தகம் அதிகரித்ததால், 2023 ஆம் ஆண்டில் கணிசமாக வளர்ந்தது. அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.1 சதவிகிதமும், தொழில்துறை உற்பத்தி 4.9 சதவிகிதமும் (ஏழு ஆண்டுகளில் மிக விரைவானது), கட்டுமானத் துறை 8.2 சதவிகிதமும், (2002க்குப் பிறகு இது மிக அதிகம்) விவசாயத் துறை 1.0 சதவிகிதமும் வளர்ந்தன. வடகொரியாவும் ரஷ்யாவும் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் வர்த்தகம், பொருளாதாரம்,முதலீட்டில் ஒத்துழைப்பை விரிவுபடுத்த ஒப்புக்கொண்டன.

1.55 லாவோஸ்: லாவோசின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2024 ஆம் ஆண்டில் 4.6 சதவீதம் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது அதன் இலக்கை விஞ்சும். சுற்றுலா, போக்குவரத்து, தளவாடங்கள், எரிசக்தி துறைகளின் ஊக்கத்துடன் பணவீக்கம், செலாவணி வீத ஏற்ற இறக்கங்கள், பொருட்களின் விலை அதிகரிப்பு, வெளிநாட்டுக் கடன் சுமைகள், கடுமையான வெள்ளம் என கடந்த ஆண்டு குறிப்பிடத்தக்க சவால்கள் இருந்தபோதிலும், அரசாங்கத்தால் பொருளாதார வளர்ச்சியைத் தக்கவைக்க முடிந்தது. லாவோ மக்கள் புரட்சிக் கட்சி பொதுக் கடன், பணவீக்கம், பரிமாற்ற விகிதங்கள் மற்றும் உயரும் வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிக்க வேண்டியதன் அவசியத்திற்கு முன்னுரிமை அளித்துள்ளது.

1.56 இந்தக் காலகட்டம் முழுவதும் சீனா, கியூபா மற்றும் வடகொரியா மீது, ஏகாதிபத்தியம் தனது தாக்குதல்களை அதிகரித்துள்ளது. ஆட்சி மாற்றத்தை உறுதிப்படுத்தும் தன் நோக்கத்தை ஏகாதிபத்தியம் தெளிவாக அறிவித்துள்ளது. கம்யூனிஸ்ட் கட்சிகள், சோசலிசம், மார்க்சிசம்-லெனினிசம் ஆகியவை ஏகாதிபத்தியத்திற்கான அச்சுறுத்தல்களாக வெளிப்படையாக அடையாளம் காணப்படுகின்றன. கம்யூனிச சித்தாந்தத்தை இழிவுபடுத்தவும், இந்த சோசலிச நாடுகளை சீர்குலைக்கவும், எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுவது ஏகாதிபத்தியத்துக்கும் சோசலிசத்துக்கும் இடையிலான மைய முரண்பாட்டை தீவிரப்படுத்துவதாக உள்ளது.

## அனைத்துலக கம்யூனிச ஒத்துழைப்பும் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஒற்றுமையும்

1.57

அ) ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு, முதலாளித்துவ சுரண்டல், அதிதீவிர வலதுசாரி சக்திகளின் வளர்ச்சி ஆகியவை தீவிரமடைந்து வரும் பின்னணியில், கம்யூனிஸ்ட் கட்சிகள், தொழிலாளர் கட்சிகள் இடையிலான ஒற்றுமையும், ஒத்துழைப்பும் அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. ஒருங்கிணைந்த நடவடிக்கைகளும், ஒருமைப்பாட்டு இயக்கங்களும், ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடும் அனைத்து சக்திகளையும் அணிதிரட்டுவதும் நமது முன்னுரிமையாகும்.

ஆ) ஏகாதிபத்தியத்திற்கும், நவீன தாராளமய கொள்கைகளுக்கும் எதிராகவும்; சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், காலநிலை நீதிக்காகவும் போராடும் அனைத்து சக்திகளுடனும் சி.பி.ஐ(எம்) கைகோர்க்கும் .

இ) பாலஸ்தீன மக்களுடனான தனது ஒருமைப்பாட்டை சி.பி.ஐ(எம்) மீண்டும் வலியுறுத்துகிறது. 1967 க்கு முந்தைய எல்லைகளுடன் கிழக்கு ஜெருசலேமை தலைநகராக கொண்ட பாலஸ்தீன நாட்டை நிறுவுவதற்கு ஆதரவாக நிற்கிறது.

ஈ) சீனா, வியட்நாம், கியூபா, வடகொரியா, லாவோஸ் ஆகிய அனைத்து சோசலிச நாடுகளுடனும் சி.பி.ஐ(எம்) தனது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகிறது. தத்தமது நாடுகளில் சோசலிசக் கட்டுமானத்துக்கும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திலும் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை சி.பி,ஐ(எம்)உறுதியாக ஆதரிக்கிறது.

உ) ஏகாதிபத்திய முனைப்புகளை எதிர்த்தும், தங்கள் இறையாண்மையை அடிபணிந்து விட்டுக் கொடுக்க மாட்டோம் என்றும் போராடி வரும் வெனிசுலா, பொலிவியா, நிகரகுவா, கொலம்பியா, உருகுவே, பிரேசில் மற்றும் பிற லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்களுடன் சி.பி.ஐ(எம்) துணை நிற்கிறது.

ஊ) அனைத்து வகையான நவீன-பாசிசம், பயங்கரவாதம், மத அடிப்படைவாத வெறித்தனம், இனவாதம், ஆணாதிக்கம், இனக்குழு ஆதிக்க வாதம் மற்றும் அனைத்து வகையான பிற்போக்கு சக்திகளையும் எதிர்த்துப் போராடும் அனைத்து மக்களுடனும் சி.பி.ஐ(எம்) நிற்கிறது.

# தேசிய நிலைமை

## தேசிய நிலைமையின் முக்கிய அம்சங்கள்

2.1 கட்சியின் 23 வது காங்கிரசுக்கு பிறகான மூன்று ஆண்டுகளில், தேசிய நிலைமையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

அ) ஜனவரி 2024ல் அயோத்தியில் ராமர் கோயில் திறப்பு விழா, உத்தரகண்ட் மாநிலத்தில் பாஜக மாநிலஅரசால் பொது சிவில் சட்ட தொகுப்பு நிறைவேற்றம், பாஜக ஆளும் மாநிலங்களில், வேறுபட்ட மத நம்பிக்கை கொண்டவர்களுக்கு இடையிலான திருமணங்களை தடைசெய்தல், நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வக்புவாரிய திருத்த சட்டம் போல முஸ்லிம் சிறுபான்மையினரை குறிவைக்கும் பல்வேறு சட்டங்கள் நிறைவேற்றம் போன்ற, அரசின் ஆதரவோடு நடைபெற்ற பல்வேறு நடவடிக்கைகளின் மூலம், இந்துத்துவ முன்னெடுப்புகளை பாஜக அரசாங்கம் முனைப்புடன் தொடர்ந்து வருவதை பார்க்க முடிந்தது. இந்து மத பண்டிகைகளை ஒட்டிய ஊர்வலங்கள் மற்றும் மசூதிகளை சொந்தம் கொண்டாடுவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு, முஸ்லிம் சிறுபான்மை மக்களுக்கு எதிரான வன்முறையைதூண்டிவரும் தொடர் நடவடிக்கைகளை, கள அளவிலும் பார்க்க முடிந்தது. நிரந்தரமான மதப்பிளவை ஏற்படுத்துவதன் மூலம், ஒரே இந்து அடையாளத்தை உறுதிப்படுத்துவதை எட்டும் நோக்கோடு இதனை அவர்கள் மேற்கொள்கிறார்கள்.

ஆ) பாஜக அரசின் பொருளாதாரக் கொள்கைகள், பெரு முதலாளிகளுக்கு வளங்களையும், சொத்துக்களையும் கைமாற்றுவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட சில பெரிய நிறுவனங்களுடைய குழுமங்களே, உள்கட்டமைப்பு திட்டங்களையும், ஆற்றல் உற்பத்தி திட்டங்களையும் பெற்று அதீத லாபத்தை பெற்றிருக் கின்றன. இந்தக் கொள்கைகள் வளர்ச்சியை மந்தமாக்கியதுடன், ஏற்றத்தாழ்வுகள், வேலையின்மை, பணவீக்கத்திற்கு வழிவகுத்துள்ளன.

இ) கடந்த மூன்று ஆண்டுகளில் ஜனநாயகத்தின் மீதும், குடிமக்களின் ஜனநாயக உரிமைகள் மீதும் தாக்குதல்கள் அதிகரிப்பதைக் கண்டோம். மத்திய முகைமைகள் பயன்படுத்தப்பட்டு சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் (யுஏபிஏ), கடுமையான பண மோசடி தடுப்புச்சட்டம் (பிஎம்எல்ஏ) ஆகியவற்றின் கீழ் வழக்குகளை பதிந்து, எதிர்க்கட்சி தலைவர்களை சிறையிலடைக்க முயற்சிக்கும் வெட்கக்கேடான செயல்கள் அப்பட்டமாக வெளிப்பட்டன, சுயேச்சையான ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் குறிவைக்கப்பட்டார்கள். நாடாளுமன்ற செயல்பாடுகள் மீதான கட்டுப்பாடுகள் மேலும் கடுமையாகின.

ஈ) மாநிலங்களின் உரிமைகள் மீதான தாக்குதல்கள்; எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு வளங்கள் மறுக்கப்படுவது; மாநில அரசுகளின் விவகாரங்களில் ஆளுநர்கள் மிகவும் அப்பட்டமாக தலையீடு ஆகியவற்றுடன் மத்திய அரசின் ஒற்றையாட்சிப் போக்கு தீவிரத்தோடு மேலும் அப்பட்டமாக வெளிப்பட்டது.

உ) அமெரிக்க-சார்பு வெளியுறவுக் கொள்கையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனான ராணுவ சூழ்ச்சிகள் நிறைந்த திட்டங்களுடனான உறவுகளும் பலப்படுத்தப்பட்டன. இருப்பினும், வளர்ந்து வரும் பல துருவ உலகின் யதார்த்தங்கள், பிரிக்ஸ் மற்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் (எஸ்சிஓ) இந்தியாவை ஒரு செயலூக்கமான பங்காளியாக மாற்றிட மோடி அரசாங்கத்தை கட்டாயப்படுத்தியுள்ளன.

ஊ) இந்தக் காலகட்டத்தில் தனியார்மயமாக்கலுக்கு எதிராகவும் திணிக்கப்பட்ட தொழிலாளர் சட்ட தொகுப்புகளுக்கு எதிராகவும், குறைந்தபட்ச கூலி, தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையை வலியுறுத்தியும் தொழிலாளி வர்க்கம் பல போராட்டங்களை நடத்தியது. ஒன்றுபட்ட விவசாயிகள் இயக்கம் குறைந்தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட பிற கோரிக்கைகளுக்கான சட்டப்பூர்வ அடிப்படையை பெறுவதற்கான போராட்டத்தை தொடர்ந்தது. மத்திய தொழிற்சங்கங்களுக்கும் ஐக்கிய விவசாயிகள் முன்னணிக்கும் (எஸ்.கே.எம்) இடையே கூட்டு நடவடிக்கைகள் அதிகரித்தன.

எ) 2024 மக்களவை தேர்தல் முடிவு பாஜகவுக்கு பின்னடைவாக அமைந்தது. அதனால் மக்களவையில் பெரும்பான்மையை பெற முடியவில்லை என்பதுடன் தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்து அரசாங்கத்தை நடத்த வேண்டியுள்ளது. இருப்பினும் பாஜக தனது இந்துத்துவ-கார்ப்பரேட் மற்றும் எதேச்சதிகார நிகழ்ச்சி நிரலை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதன் மூலம் இந்த பலவீனத்தை சமாளிக்க முயல்கிறது.

## பொருளாதார மந்த நிலை

2.2 அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி புள்ளி விபரங்கள் சந்தேகத்திற்குரியவை. இந்த கணக்கீடு நுகர்வோர் விலைக் குறியீட்டில் (CPI) தெரியவரும் உண்மையான பணவீக்க விகிதத்தை விட நான்கில் ஒரு பங்குக்கும் குறைவான மறைமுக பணவீக்க விகிதத்தை அடிப்படையாகக் கொண்டது ஆகும். இது போல புள்ளி விபரங்கள் திரிக்கப்பட்ட நிலைமையிலும் கூட, பொருளாதாரம் மந்த நிலையில் இருக்கும் உண்மையை மறைக்க முடியாது. 2024-25 ஆம் ஆண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியை பற்றிய மதிப்பீடுகள் இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 6.4 சதவிகிதமாக இருக்கும் என நிர்ணயித்துள்ளன. முந்தைய ஆண்டின் வளர்ச்சி சதவீதம் 8.2 உடன் ஒப்பிடும்போது இது குறைவாகும். கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட சரிவில் இருந்து, முதலாளித்துவம் அடைந்திருக்கும் மீட்சி, உழைக்கும் மக்களின் மீதான சுமையை அதிகப்படுத்தியதன் மூலம் அடைந்ததாகும். இந்த மீட்சி குறுகிய காலத்திற்கானது, மாயையான ஒன்று என நிரூபணமாகியுள்ளது.

2.3 பொருளாதாரத்தில் உற்பத்திப் பொருட்களுக்கான கிராக்கி குறைந்து வருவதுதான், தொடர்ச்சியான பொருளாதார நெருக்கடி நிலைக்கான காரணம் ஆகும். அதாவது மக்களின் கைகளில் போதிய வாங்கும் சக்தி இல்லை என்பதே இதன் பொருள். ஏனென்றால் இந்திய மக்களில் பெரும்பான்மையானவர்கள் சொற்ப வருமானத்தில் / ஊதியத்தில் வாழும் நிலைமையில் உள்ளார்கள். 2023-24 ஆம் ஆண்டுக்கான குடும்ப நுகர்வு செலவினம் குறித்த சமீபத்தில் வெளியிடப்பட்ட தரவுகள், நான்கு உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்தின் சராசரி மாதச் செலவு கிராமப்புறங்களில் ரூ. 8,079 மற்றும் நகர்ப்புறங்களில் ரூ. 14,528 மட்டுமே என்பதைக் காட்டுகிறது. இதனுடன் வேலையின்மை அதிகரிப்பும், பணவீக்கமும் - குறிப்பாக உணவுப் பொருட்களின் விலையேற்றமும் சேர்ந்து வருமானத்தை மேலும் அரித்தெடுக்கின்றன. கிராக்கி பலவீனமாக இருந்தால்,

உற்பத்தியானது திறனை விடக் குறைவாகவே நடக்கிறது, புதிய முதலீடுகள் மூலம் உற்பத்தி திறனை விரிவாக்குவதிலும் ஆர்வம் இல்லாது போகிறது. அரசாங்கம் தொடர்ந்து சுங்க வரிகளைக் குறைப்பது இறக்குமதியை அதிகப்படுத்த வழிவகுத்தது, இது உள்நாட்டு தொழில்களை அழிப்பதோடு, வர்த்தக பற்றாக்குறையை தொடர்ந்து அதிகரித்த நிலையில் வைக்கிறது. பொருளாதாரத்தின் பலவீனம், ரூபாயின் மதிப்பை அரிக்கும். இதனால் இறக்குமதிச் செலவு மேலும் அதிகரிக்கிறது. இவ்வாறாக, கார்ப்பரேட் துறைக்கு ஆதாயமளிக்கும் வகையில் கொள்கைகளை கொடூரமாக மாற்றியமைப்பதைத் தவிர, மோடி அரசாங்கத்திடம் வேறு திட்டம் ஏதும் இல்லை. இதற்கிடையில் மந்தமான பொருளாதாரம், குறைந்த வருமானம், அதிகரித்துவரும் செலவுகள், பரவலான வேலையின்மை ஆகியவை அரசாங்கத்தால் கைவிடப்பட்ட மக்களை தொடர்ந்து வேட்டையாடுகின்றன.

2.4 கார்ப்பரேட் நிறுவனங்களின் வரியைவிடவும் கூடுதலான வரி வருமானத்தை அரசு வருமான வரியின் மூலம் பெறுகிறது.2014-15ல் 20.8 சதவிகிதமாக இருந்த வருமான வரி வருவாய் 2024-25ல் 30.9 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. 2017-18 ஆம் ஆண்டில், கார்ப்பரேட் வரிகள் மொத்த வரி வருவாயில் கிட்டத்தட்ட 32 சதவிகிதமாக இருந்தன, ஆனால் அவை 2024-25 பட்ஜெட்டில் 26.5 சதவிகிதமாகக் குறைந்துள்ளன. கார்ப்பரேட் வரி குறைப்பால் ஒவ்வொரு ஆண்டும் அரசுக்கு ரூ.1.45 லட்சம் கோடி இழப்பு ஏற்படுகிறது. இது கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சாதகமான மோடி அரசாங்கத்தின் அப்பட்டமான போக்கை காட்டுவதோடு சமூக நலச் செலவினங்களை இதற்காக காவு வாங்குகிறது, கார்ப்பரேட் வரி குறைப்பு உள்ளிட்ட பல சலுகைகள் இருந்த போதிலும் உற்பத்திப் பொருட்களுக்கு கிராக்கி இல்லாத காரணத்தால், முதலீடுகளைச் செய்ய தனியார்கள் தயாராக இல்லை. கிராக்கி இல்லாததற்கான காரணம் தொழிலாளர்களின் உண்மை ஊதியத்தில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையே ஆகும்.

2.5 ஒன்றிய அரசு, சமூக நலச் செலவினங்களாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7 சதவிகிதத்திற்கு குறைவாகவே மேற்கொள்கிறது. ஒ.இ.சி.டி நாடுகள் தங்கள் ஜி.டி.பியில் 21 சதவீதம் இதற்காக செலவிடுவதுடன் ஒப்பிட்டு நோக்கினால் இந்தச் செலவுகள் மிகக் குறைவாகும். மொத்த பட்ஜெட் செலவுகளில் ஒரு பகுதியாக சமூக நலத் துறைக்கான செலவுகளை பார்க்கும்போது, 2024-25 செய்யப்பட்ட ஒதுக்கீடு, 2020-21 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்டதை விடவும் 40 சதவிகிதம் குறைவாக உள்ளது. மேலும் ஜி.டி.பியில் சதவீதம் என்ற அளவில் நோக்கினால் இந்தச் செலவினங்கள் சரி பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டம், உணவு மானியம், சமூக நலச் செலவுகள், கல்வி, சுகாதாரம், உரமானியம் ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகள் அனைத்தும் குறைக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் ஆதரவு குறைந்ததாலும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் காரணமாகவும், வாங்கும் சக்தி சரிந்துள்ளது, வறுமை அதிகரித்துள்ளது.

## வளங்களின் மாற்றமும் கார்ப்பரேட் கொள்ளையும்

2.6 இயற்கை வளங்களையும், பொதுச் சொத்துக்களையும் பெருமுதலாளிகளிடம் ஒப்படைக்கும் வகையில் ஒட்டுமொத்த பொருளாதார அமைப்பையும் மறுசீரமைக்கும் விதத்தில் மோடி அரசாங்கம் பல கொள்கைகளை வகுத்துள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள், ரயில்வே, விமான நிலையங்கள், குழாய்கள், மின்சார பாதைகள் போன்ற மேம்படுத்தப்பட்ட நிலத்துடனான சொத்துக்களுக்கான ஏகபோக உரிமையை நீண்டகால குத்தகையின் பெயரால் தனியார் முதலாளிகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் ஒப்படைப்பதற்காக 2021-22 பட்ஜெட்டில் தேசிய பணமாக்கல் பைப்லைன் (NMP) என்ற திட்டம் தொடங்கப்பட்டது. தேசிய உள்கட்டமைப்பு பைப்லைன் என்ற பெயரால் பெருமளவிலான அரசாங்க முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஐந்து பெரிய கார்ப்பரேட்டுகள் இந்த திட்டங்களிலிருந்து பெரும் தொகையை சம்பாதிக்கின்றன. நாட்டின் இயற்கை வளங்களை

வெளிநாட்டு,உள்நாட்டு தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கும், அபகரிப்பு முறைகள் இங்கே குறிப்பிட வேண்டிய மற்றொரு அம்சமாகும். இரும்புத் தாது, நிலக்கரி,பாக்சைட் போன்ற இயற்கை வளங்களைப் பிரித்தெடுப்பதற்காக கனிமத் தொகுதிகளை தனியாருக்கு ஏலம் விட தேசிய கனிமக் கொள்கை 2019 கொண்டுவரப்பட்டது. அண்மையில்,சுரங்கங்கள் தாதுக்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டதன் மூலம் லித்தியம்,கோபால்ட் போன்ற முக்கியமான தாதுக்களைத் தோண்டியெடுப்பதில் தனியாரை அனுமதித்தது. இறுதியாக, மூலதன முதலீட்டு ஊக்கத்தொகைகள், மாற்றியமைக்கப்பட்ட சிறப்பு ஊக்கத் தொகுப்புத் திட்டம் மற்றும் பல்வேறு துறை சார்ந்த உற்பத்தி சார்ந்த ஊக்கத் தொகைகள் மூலம், கார்ப்பரேட் கைகளுக்கு நிதியை நேரடியாக மாற்றித்தரும் வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் முக்கிய பயனாளிகள் பெரும் வணிக நிறுவனங்களே. அம்பானி, அதானி, டாடா, ஆதித்யா பிர்லா மற்றும் பார்தி டெலிகாம் ஆகிய ஐந்து பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள், நிதி அல்லாத துறைகளில் 20 சதவீதத்திற்கும் அதிகமான சொத்துக்களை வைத்துள்ளன. இது செல்வக் குவிப்பு, ஏகபோகத்தின் விரிவாக்கம் ஆகியவற்றின் அளவுகளை காண்பிக்கின்றன.

## தீவிரமடைந்த சமத்துவமின்மை

2.7 உலகின் மிகவும் சமத்துவமற்ற நாடுகளில் ஒன்றாக இந்தியா மாறியுள்ளது. உலக சமத்துவமின்மை அறிக்கையின்படி, 2022-23 காலகட்டத்தில் நாட்டின் அனைத்து வருமானத்திலும் 22.6 சதவிகிதத்தை, மக்கள் தொகையின் முதல் 1 சதவிகிதம் பேர் கைப்பற்றியதுடன், நாட்டின் மொத்த செல்வங்களில் 40.1 சதவிகிதத்தை வைத்திருந்தனர். இது இந்திய வரலாற்றில் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தை விடவும் அதிகமான சமத்துவமற்ற பங்காகும். இந்தியாவின் முதல் 1 சதவிகிதத்தினர் பெறக்கூடிய வருமானப் பங்கு உலகிலேயே மிக அதிகமாகும்.தென்னாப்பிரிக்கா, பிரேசில் மற்றும் அமெரிக்காவை விட அதிகம். மறுபுறம், இந்தியாவில் அடிமட்ட 50 சதவிகித மக்களிடம் நாட்டின் மொத்த சொத்துக்களில் 3 சதவிகிதம் மட்டுமே உள்ளது.

2.8 ஃபோர்ப்ஸ் பில்லியனர்கள் பட்டியலின்படி, மோடி பிரதமரான 2014 ஆம் ஆண்டில் நாட்டில் 100 பில்லியனர்கள் இருந்தனர், அந்த எண்ணிக்கை 2024 இல் 200 ஆக இரட்டிப்பாகியுள்ளது என்ற உண்மையிலிருந்து மோடி ஆட்சிக் காலத்தில் செல்வத்தின் அதீத குவிப்பினை விளங்கிட முடியும். மேலும், அவர்களில் 100 பெரும் பணக்காரர்களின் மொத்த சொத்து மதிப்பு முதல் முறையாக 1 லட்சம் கோடி டாலரைத் தாண்டியுள்ளது . இதுதான் மோடி அரசின் பத்தாண்டு கால ஆட்சியின் முத்திரை ஆகும்.

## விவசாய நெருக்கடி

2.9 மோடி தலைமையிலான பாஜக-தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் நவீன தாராளமய மற்றும் கார்ப்பரேட் சார்பு கொள்கைகளால் மிக மோசமாக பாதிக்கப்பட்டது விவசாயத் துறை. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (என்.சி.ஆர்.பி) தரவுகள், 2014 (மோடி ஆட்சியின் முதல் ஆண்டு) முதல் 2022 வரை (தரவுகள் கிடைக்கக் கூடிய கடைசி ஆண்டு), இந்தியாவில் 1,00,474 விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் தற்கொலைக்கு தள்ளப்பட்டதைக் காட்டுகிறது. 2024 உலகளாவிய பட்டினி குறியீட்டின்படி, 127 நாடுகளில் இந்தியா 105 வது இடத்தில் உள்ளது. இந்த கால கட்டத்தில் விவசாய நெருக்கடி மேலும் மோசமடைந்துள்ளதற்கு வழி வகுத்த சில அடிப்படைக் காரணங்கள்: (அ) அரசாங்க மானியங்களில் வெட்டு மற்றும் விவசாய இடு பொருள் உற்பத்தியில் கார்ப்பரேட்டுகளுக்கு ஊக்கமளிப்பதன் காரணமாக அதிகரிக்கும் சாகுபடிச் செலவுகள்; (ஆ) உற்பத்திச் செலவை முழுமையாகக் கணக்கில் கொண்டு, அதை விடவும் ஒன்றரை மடங்கு (C2+50%) லாபகரமான குறைந்தபட்ச ஆதரவு விலையை அமலாக்கிட மத்திய அரசு மறுத்ததன் காரணமாக பயிர்களின் விலையில் உயர்வு இல்லை, சில சமயங்களில் விலை வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. (இ) பருவநிலை மாற்றத்தால் தீவிரமடைந்து வரும் இயற்கை சீற்றங்களால் ஏற்படும் பெரும் இழப்புகளை ஈடு செய்ய போதுமான காப்பீடு

இல்லாமை; பிரதமர் பயிர் காப்பீட்டு திட்டம் (PMFBY) விவசாயிகளுக்கு ஒரு பாசாங்குத் திட்டமாகவும், காப்பீட்டு நிறுவனங்களுக்கு 2.5 சதவிகிதம் மொத்த லாபம் கால்வாசியை ஈட்டிக் கொடுக்கக்கூடிய திட்டமாகவும் மாறியுள்ளது. (ஈ) வங்கிகளின் கடன் கொள்கை சமநிலையற்றதாக உள்ளது, இது முதலாளித்துவ நிறுவனங்களுக்கு அதிகளவில் சாய்ந்தும், விவசாயிகளுக்கு எதிராகவும் உள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் கொடூரமான தனியார் கடன் வழங்குநர்களின் பிடியிலும் தள்ளி, கடன் வலையில் சிக்கவும் வைக்கிறது.

2.10 விவசாயத்திலும், அது தொடர்பான துறைகளிலும் அரசின் முதலீடு தொடர்ந்து குறைக்கப்படுவதும் விவசாய நெருக்கடியை தீவிரமாக்குகிற – விவசாயிகளின் பிரச்சனைகளை மேலும் மோசமாக்குகிற மற்றொரு அடிப்படைக் காரணமாகும். அண்மைய (2024–25) ஒன்றிய பட்ஜெட்டில் விவசாயம் மற்றும் தொடர்புடைய துறைகளுக்கான மொத்த ஒதுக்கீடு 2019 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 5.44 சதவிகிதத்தில் இருந்து, 3.15 சதவிகிதமாக சரிந்துள்ளது. உர மானியங்களும், உணவு மானியங்களும் குறைக்கப்பட்டன. மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்திற்கான ஒதுக்கீடு 86,000 கோடியாக உள்ளது. இது முந்தைய ஆண்டில் செலவிட்டதை விடவும் குறைவாகும். பிரதமர் கிசான் சம்மன் நிதி, பிஎம் ஃபசல் பீமா யோஜனா மற்றும் பிற திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் அனைத்தும் குறைக்கப்பட்டுள்ளன. விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க சேவைகளுக்கான நிதிகள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு உதவுவதற்காக வறண்டுவிட்டன.

2.11 ஒன்றிய அரசின் முக்கிய கவனம் கொள்ளையடிக்கும் விவசாய வணிகங்களுக்கு பயனளிக்கும் வகையில் விவசாயத்தை கார்ப்பரேட் மயமாக்குவதில் உள்ளது. மின்சாரம் தனியார்மயமாக்கப்பட்டு வருகிறது, இது மின்சார (திருத்த) மசோதா, ஸ்மார்ட் மீட்டர் நிறுவல் முயற்சி, அதானி பவர், ரிலையன்ஸ் பவர், டாடா பவர் போன்றவற்றின் செல்வாக்கு அதிகரிப்பு மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற நுகர்வோருக்கான மின்சார கட்டணங்கள் அதிகரிப்பு ஆகியவற்றில் தெரிகிறது.நீர்ப்பாசனத் துறையிலும் இதே நிலைதான். டிஜிட்டல் மயமாக்கல் என்ற பெயரில், அரசு கிராமப்புற ஏழைகளின் உரிமைகளுக்கு எதிராக முழுமையாக தாக்குதல் நடத்தியுள்ளது, இது நூறுநாள் வேலைத் திட்ட தொழிலாளர்களின் நிலையில் தெளிவாகத் தெரிகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில், பதிவு செய்யப்பட்ட 8 கோடி நூறுநாள் வேலைத்திட்ட தொழிலாளர்கள் பதிவு நீக்கம் செய்யப்பட்டு, சட்டத்தை மீறி அவர்களின் உரிமையான வேலை நலன்கள் மறுக்கப்பட்டன. கிராமப்புற நிலமற்றவர்களின் உரிமையிலும், விவசாயிகளின் நில உரிமையிலும் சமத்துவமின்மை கடுமையாக அதிகரித்துள்ளது. 2019–21ல் நடத்தப்பட்ட 5வது தேசிய குடும்ப ஆரோக்கிய கணக்கெடுப்பின்படி, 47.8 சதவிகிதம் கிராமப்புற குடும்பங்களுக்கு விவசாய நிலம் இல்லை; மேலும் கிராமப்புற குடும்பங்களில் மேல் 20 சதவிகிதத்தினர் 82 சதவிகிதம் விவசாய நிலத்தை உரிமையாக வைத்துள்ளனர்.

2.12 தொழிலாளர்கள் விவசாயத்திற்கு திரும்புகிற போக்கால் கிராமப்புற ஏழைகளின் நிலைமைகள் மோசமடைந்துள்ளன. உண்மையான கிராமப்புற ஊதியம் மைனஸ் 0.4 சதவிகிதம் என்ற அளவிற்கு சரிந்துள்ளது. விவசாயத்தில் உண்மையான கூலியானது 0.2 சதவிகிதம் என்ற நிலையிலிருந்து அதிகரிக்கவே இல்லை. கிராமப்புறங்களில் உண்மை ஊதியங்கள் சரிந்திருப்பது, கிராமப்புற செல்வந்தர்களின் கூட்டணியால் கிராமப்புற தொழிலாளர்கள் மீது நடத்தப்படும் சுரண்டல் தீவிரமடைந்து வருவதன் அறிகுறியாகும். ஏழை குத்தகை விவசாயிகளும் இந்தநெருக்கடியின் சுமையைத் தாங்கிக் கொண்டுள்ளனர். கிராமப்புற நெருக்கடி விவசாயத் தொழிலாளர்களின் தற்கொலைக்கு வழிவகுத்தது. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின்படி 2022 ஆம் ஆண்டில் 6,087 விவசாயத் தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டனர், இது 2021 இல் 5,563 தற்கொலைகள் என்ற நிலைமையை விட அதிகமாகும்.

## தொழிலாளி வர்க்கத்தின் மீது தீவிரமடையும் சுரண்டல்

2.13 உழைக்கும் வர்க்கங்கள் போராடிப் பெற்ற உரிமைகள் மீது ஒரு முழுமையான தாக்குதலை இந்த காலகட்டத்தில் பார்த்தோம். ஒன்றுபட்ட தொழிற்சங்கப் போராட்டத்தின் வலிமை காரணமாக, மோசமான நான்கு தொழிலாளர் சட்ட விதிகளின் அமலாக்கம் தடைபட்டிருந்தாலும், மோடி அரசாங்கமும் பல மாநில அரசாங்கங்களும் தங்கள் கொள்கைகள் மூலம் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் முறைகளில் சுரண்டலை தீவிரமாக்கும் மாற்றங்களை உறுதி செய்துள்ளன. தொழிலாளர்களை ஒப்பந்தமயமாக்கும் போக்கு நவீன தாராளமயக் கொள்கைகளின் தவிர்க்கமுடியாத பகுதியாகும். உற்பத்தித் தொழிலாளர் தொகுப்பில் ஒப்பந்தத் தொழிலாளர்களின் சதவிகிதம் 2018 ல் 36.38 சதவிகிதமாக இருந்தது. இந்த விகிதம் 2023 இல் 40.72 ஆக அதிகரித்துள்ளது. 2014-15 முதல் 2020-21 வரையிலான காலகட்டத்தில் அமைப்புசார் துறையில் ஊதிய வளர்ச்சி வெறும் 6 சதவிகிதமாகக் குறைந்திருக்கும் அதிர்ச்சியூட்டும் புள்ளி விவரத்தில், தொழிலாளர்கள் மீதான சுரண்டல் தீவிரமடைந்திருப்பதை உணரலாம். உயர் பணவீக்க விகிதங்களைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது தொழிலாளர்களின் உண்மை ஊதியம் வீழ்ச்சியடைந்துள்ளது. தொழில்துறையில் சுரண்டலை காட்டும் மற்றொரு வழி, நிகரமதிப்பு கூட்டலில் கூலிக்கு இருக்கும் பங்கு ஆகும். இது 2020 இல் 18.9 சதவிகிதத்திலிருந்து 2023 இல் 15.9 சதவிகிதமாக குறைந்துள்ளது. அதேகால கட்டத்தில் நிகரமதிப்புக் கூட்டலில் லாபத்தின் பங்கு 38.7 சதவிகிதத்திலிருந்து 51.9 சதவிகிதமாக அதிகரித்தது.

2.14 நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படுவதில்லை. சில மாநிலங்களில் வேலை நேரத்தின் அளவு தன்னிச்சையாக 12 மணி நேரமாகவும், அதற்கும் கூடுதலாகவும் அதிகரிக்கப்படுகிறது. மிகை நேர உழைப்புக்காக கூடுதல் ஊதியம் வழங்கப்படுவதில்லை. தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. தொழிலை எளிதாக்குவதை உறுதி செய்தல் என்ற பெயரில் பெரிய நிறுவனங்களின் பக்கமே அரசாங்கங்கள் நிற்கின்றன. ஒப்பந்தத் தொழிலாளர்கள் அணி திரளத் துணிந்தால் வேலையிலிருந்து நீக்கப்படும் சாத்தியங்கள் அதிகரிக்கின்றன. அதற்கு பேரம் பேசும் வலிமை குறைந்து வருவதும், வேலையின்மையின் இருள் கவிந்து வருவதும் காரணிகளாக உள்ளன.

2.15 'கிக் எகானமி' எனப்படும், மொபைல், இணைய செயலிகளின் வழியாக தரப்படும் சேவைகளுடன் சில்லரை வணிகத்தில் விரிவாக்கம் ஏற்பட்டுள்ளது. 77 லட்சம் தொழிலாளர்கள் ஒப்பந்த அல்லது தற்காலிக தொழிலாளர்களாக அமேசான், பிளிப்கார்ட், ஸ்விக்கி, ஜொமாட்டோ, உபெர் உள்ளிட்ட டிஜிட்டல் தளங்களில் பயன்படுத்தப்படுகின்றனர். இந்த தொழிலாளர்களுக்கென்று தனியான சட்ட உரிமைகள் கட்டாய மேதுமில்லை என்ற நிலைமை அவர்களை ஆபத்தான நிலைமையில் விட்டுள்ளது.

2.16 ஒன்றிய அரசு அதன் சொந்த ஊழியர்களான, பெரும்பாலும் பெண்களாக உள்ள திட்டத் தொழிலாளர்களை, தொழிலாளர் விரோத கட்டமைப்புக்குள் தள்ளுகிறது. பெண்களுக்கு உள்ள வருமானத் தேவையை பயன்படுத்திக் கொண்டு ஒன்றிய அரசு அங்கன்வாடி, மதிய உணவுத் திட்டம், ஆஷா போன்ற சேவைகளில் பணியமர்த்தப்படும் லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி, ஓய்வூதியம் போன்ற அடிப்படையான உரிமைகளைக் கூட மறுப்பது வெட்கக்கேடாகும். மோடி அரசு மிகவும் தொழிலாளர் விரோத அரசு என்பதை நிரூபித்துள்ளது.

2.17 இந்தியாவில் புலம் பெயர் தொழிலாளர்களின் துயரமான நிலைமை கொரோனா பெருந்தொற்று காலத்தில் முன்னுக்கு வந்தது. அப்போதைய மதிப்பீட்டின் படி 12 கோடி தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இருப்பினும் இந்தியாவில் புலம்பெயர் தொழிலாளர்கள் குறித்து நம்பகமான தரவுகள் ஏதும் இல்லை. சில அதிகாரப்பூர்வ மதிப்பீடுகள் அவர்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதாகக் கூறுகின்றன. உண்மையில்

விவசாய நெருக்கடியின் அளவும், விவசாய வேலையின்மை நிலைமையும் காரணமாக, கிராமப்புற இந்தியாவில் மாற்று வேலைகள் இல்லாததால் – குறுகிய கால சுழற்சி புலம்பெயர்வு, நீண்ட கால புலம்பெயர்வு என்ற அடிப்படைகளில் புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கொரோனா பெருந்தொற்று அனுபவத்திற்கு பின்னர் பல வாக்குறுதிகள் தரப்பட்ட போதிலும், அரசாங்க ஆதரவு மொத்தமாக இல்லாமல், அல்லது மிகக் குறைந்த ஆதரவை மட்டும் கொண்டு, காண்ட்ராக்டர்களை சார்ந்து நிற்க வேண்டிய புலம்பெயர் தொழிலாளர்கள் மீதான சுரண்டலின் துயரம் தணிக்கப்படவில்லை. புலம் பெயர் பெண் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## மக்களின் வாழ்நிலைமை

2.18 விலைவாசி ஏற்றத்தின் சுமை: தொடர்ந்து விலைவாசி உயர்வது, குறிப்பாகஅத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வு, ஏற்கனவே குறைந்த வருமானத்தின் காரணமாக தொழிலாளர்களின் மிகக் குறைவான வீட்டு வரவு-செலவுத் திட்டங்களை முற்றிலுமாக சீர்குலைத்துவிட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில், நுகர்வோர் விலைக் குறியீட்டின்படி பொதுவான விலை உயர்வு சுமார் 20 சதவிகிதம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது, அதேநேரத்தில் உணவுப் பொருட்களின் விலை 26 சதவிகிதம் உயர்ந்துள்ளது. பெரும்பாலான மக்கள் தங்கள் வருவாயில் பாதியை உணவுக்காக செலவிடுவதால், இந்த உயர்வுகள் வாழ்க்கைச் செலவை இரக்கமின்றி அதிகரித்துள்ளன. உணவைத் தவிர, பல்வேறு பிற அத்தியாவசியப் பொருட்களின் விலையும் மோடி அரசின் முடிவுகளால் உயர்த்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய அரசாங்க அமைப்பு, பல மருந்துகளின் விலைகளை உயர்த்திட அனுமதித்துள்ளது. அரசாங்கத்தால் ஏற்படுத்தப்படும் விலையேற்றத்தின் மிக மோசமான உதாரணம் பெட்ரோலியப் பொருட்கள் ஆகும். மோடி அரசால் விதிக்கப்பட்ட அதிக உள்நாட்டு கலால் வரி காரணமாக பெட்ரோல், டீசலின் சில்லறை விலைகள் உயர்ந்த நிலையிலேயே தொடர்கின்றன. கடந்த சில மாதங்களில் கச்சா எண்ணெய்யின் சர்வதேச விலை 18 சதவிகிதம் வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், இந்த விலையேற்ற நிலை தொடர்கிறது. எரிபொருள் விலை உயர்வு போக்குவரத்து செலவை அதிகரிக்கிறது, இது உணவுப் பொருட்கள் உள்ளிட்ட விலை உயர்வு மூலம் மக்கள் தலையில் ஏற்றப்படுகிறது. சமையல் எரிவாயு மானியமும் நிறுத்தப்பட்டது, அதனால் எரிவாயு விலை பெரிதும் உயர்ந்தது. சுருக்கமாக, வருவாயை அரசாங்கத்தின் கருவூலத்திற்கோ அல்லது பெரிய வணிகர்கள்/மொத்த வியாபாரிகளுக்கு மாற்றும் நோக்கில் விலைகளை மோசடி செய்வதன் மூலம் சாதாரண மக்களை கசக்கிப் பிழிந்து வருகிறது.

2.19 வேலையின்மை: கடந்த சில ஆண்டுகளில் வேலைவாய்ப்பு நெருக்கடி, நாட்டில் பல வகைகளில் மோசமடைந்துள்ளது. பெருந்தொற்றுக்கு பின் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மீட்சி நடைபெறவில்லை. வேலையின்மை பற்றிய அரசாங்க தரவுகள், எதிர்பார்த்தபடியே வேலையின்மை விகிதத்தை குறைத்து காட்டுகின்றன. 2023-24 ஆம் ஆண்டுகளில் மொத்த வேலையின்மை விகிதம் 3 சதவிகிதமாக பி.எல்.எப்.எஸ் தரவு காட்டுகிறது. ஆனால் சி.எம்.ஐ.இ போன்ற பிற மதிப்பீடுகளின்படி வேலையின்மை விகிதம் கடந்த பல மாதங்களாக 6-9 சதவிகிதமாக இருந்தது, செப்டம்பர் 2024 வாக்கில் இது கிட்டத்தட்ட 8 சதவிகிதமாக இருப்பதாக கூறுகின்றன. இளைஞர்களிடையே (15-29 வயது) ஒட்டுமொத்த வேலையின்மை விகிதம் 10 சதவிகிதத்திற்கும் அதிகமாக உள்ளது, நகர்ப்புறங்களில் கிட்டத்தட்ட 15 சதவிகிதமாக உள்ளது என்று அரசாங்கம் கூட பதிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. எவ்வாறிருப்பினும் இந்த தரவுகள், நிலைமையின் கடுமையை எடுத்துக் காட்டவில்லை. ஏனென்றால் உழைக்கும் வயதில் உள்ள பெரும்பாலான மக்கள், பிழைத்திருப்பதற்காக எந்தவொரு வேலையையும், மிகவும் மோசமான ஊதியத்திற்கும், மோசமான நிலைமையிலும் கூட செய்ய ஏற்றுக்கொள்கிறார்கள், இதனால் அவர்கள் “வேலைவாய்ப்பு” பெற்றவர்களாக கணக்கிடப்படுகிறார்கள். அவர்களின் நிலைமை

மறைமுகமான வேலையில்லாத் திண்டாட்டமே அன்றி வேறில்லை. சமீபத்திய ஆண்டுகளின் மற்றொரு கடுமையான போக்கு, இது கொரோனா பெருந்தொற்று காலத்திற்குப் பிறகு தீவிரமாகியுள்ளது. உற்பத்தி துறையில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கை சரியும் அதே நேரத்தில், விவசாயத்தில் பணியாற்றும் நபர்களின் பங்கு உயர்ந்துள்ளது. நிலையான, நல்ல ஊதியம் மற்றும் பாதுகாப்பான வேலைகளை வழங்குவதற்கு பதிலாக, அரசாங்க கொள்கைகள் பழைய நிலைமைக்கு திரும்புவதையே வேகமாக்கியுள்ளது. குறைந்த வருவாய் கொடுக்கும், பருவகால வேலை வாய்ப்பே கொண்ட –ஏற்கனவே நிரம்பி வழியும் விவசாயத் துறையை நோக்கி மக்களை மீண்டும் தள்ளியுள்ளது.

## இந்துத்துவ நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்வது

2.20 இந்துத்துவத்தை அரச சித்தாந்தமாக்குவதற்கும், மதச்சார்பற்ற–ஜனநாயகக் குடியரசை இந்து ராஷ்டிரமாக மாற்றுவதற்குமான ஆர்.எஸ்.எஸ் நிகழ்ச்சி நிரல் திட்டமிட்டு பின்பற்றப்பட்டு வருகிறது என்பதற்கு கடந்த மூன்று ஆண்டுகளில் நடந்த நிகழ்வுகள் போதுமான சான்றுகளையும் ஆதாரத்தையும் வழங்குகின்றன. இஸ்லாமியர்களை ‘அவர்கள்’ என்று குறி வைத்து ஒரு பரந்த இந்து அடையாளத்தை உருவாக்குவது இந்த திட்டத்தின் மையமாக இருக்கிறது. 2024 ஜனவரியில் அயோத்தியில் ராமர் கோயில் திறப்பு நிகழ்வு அரசு நிதியுதவிடன், பிரதமரே மத சடங்குகளை முன்னின்று நடத்திடும் நிகழ்வாக நடந்தது. அடுத்த கட்ட நடவடிக்கையாக, வாரணாசியில் அமைந்துள்ள கியான்வாபி மசூதியையும், மதுராவில் அமைந்துள்ள ஈத்கா மசூதியையும் குறிவைத்து, அங்கு இந்து கோயில்கள் இருந்ததாகக் கூறி, இந்த இரண்டு இடங்களிலும் சட்ட தகராறுகளை உருவாக்கிட வேண்டும் என்ற முயற்சி நடக்கிறது. அயோத்தி, காசி, மதுரா ஆகிய மூன்று இடங்களையும் இந்துக்களிடம் ஒப்படைத்து கோயில்களை எழுப்பிட வேண்டும் என்பதுதான் விஸ்வ இந்து பரிஷத்தின் தொடக்க கால முழக்கமாக இருந்தது. கீழமை நீதிமன்றங்கள் இத்தகைய வழக்குகளை ஊக்குவித்து, இந்த இடங்களில் இதற்கு முன்பு ஏதேனும் கோயில்கள் இருந்தனவா என்பதை உறுதிப்படுத்த மசூதிகளின் வளாகங்களை ஆய்வு செய்வதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்தன. இது, அப்போதைய இந்திய தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், 1991 வழிபாட்டுத் தலங்கள் சட்டத்தின் விதிகளை மீறுவதாகாது என்று கூறி, இந்த ஆய்வுகளை தொடர அனுமதித்த உயர்மட்ட நீதித்துறையின் உடந்தையான போக்கால் சாத்தியமானது. இது இப்போது சம்பல் மற்றும் அஜ்மீர் என தொடர் சட்ட வழக்குகளுக்கு வழி வகுத்து விட்டது.

2.21 ராம நவமி, அனுமன் ஜெயந்தி மற்றும் விநாயகர் பூஜை போன்ற பண்டிகைகளின் போது மத ஊர்வலங்களை முன்னெடுப்பதும், சிறுபான்மையினர் வசிக்கும் பகுதிகளுக்குள் நுழைந்து மோதல்களுக்கு வழிவகுக்கும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், குறிப்பாக பாஜக ஆளும் மாநிலங்களில் வழக்கமான அம்சமாகிவிட்டது, இந்த அனைத்து சம்பவங்களிலும், சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தான் காவல்துறையின் அடக்குமுறையை எதிர்கொள்கின்றனர். இஸ்லாமியர்களின் வீடுகளை இடிக்க புல்டோசர்களைப் பயன்படுத்துவது உத்தரப்பிரதேசத்தில் தொடங்கப்பட்டு, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், தில்லி போன்ற மாநிலங்களுக்கும் பரவியுள்ளது. இப்போது என்ன திட்டவட்டமாகியிருக்கிறது என்றால், இந்து பண்டிகைகளின் போது சிறுபான்மையினரைக் குறிவைப்பது என்பது ஏதோ அங்கொன்றும், இங்கொன்றுமாக நடைபெறும் நிகழ்வு அல்ல, மாறாக மதரீதியான பிரிவினையை உருவாக்குவதற்கும் வகுப்புவாத பிளவை நிரந்தரமாக்குவதற்குமான தொடர்ச்சியான அம்சம் அது என்பதும்தான். இந்துத்துவ தீவிரவாதக் குழுக்கள் சிறுபான்மையினருக்கு எதிராக தண்டனையின்றி வன்முறையில் ஈடுபடுகின்றன, அவர்களுக்கு அரசு ஆதரவு கிடைக்கிறது, பாதிக்கப்பட்டவர்களோ தண்டிக்கப்படுகிறார்கள்.

2.22 இந்தக் காலகட்டத்தில் பாஜக ஆளும் மாநிலங்கள் சிறுபான்மையினரை குறிவைத்து

சட்டங்களை இயற்றியுள்ளன, நடைமுறையிலுள்ள சில சட்டங்களை மேலும் கடுமையாக்கியுள்ளன. உதாரணமாக, உத்தரப்பிரதேசத்தில், ‘லவ் ஜிஹாத்’ என்று அழைக்கப்படும் இரண்டு மதத்தினருக்கு இடையிலான திருமணத்திற்கு தற்போது ஆயுள் தண்டனை விதிக்கப்படும். ‘நில ஜிஹாத்’, ‘உணவு ஜிஹாத்’ போன்ற புதிய சொற்கள் இஸ்லாமியர்களை சிக்கவைப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளன. அசாமில் ஆட்சியில் இருக்கும் பாஜக அரசாங்கம், இந்த விஷயத்தில் மற்ற அரசாங்கங்களை விட வெகுதூரம் சென்றுவிட்டது. உத்தரகண்ட் போன்ற இஸ்லாமியர்களுடைய மக்கள்தொகை குறைவாக இருக்கும் மாநிலங்களில் கூட, இஸ்லாமியக் கடைக்காரர்கள் கடைகளை மூடுவதற்கான உத்தரவுகளையும், இஸ்லாமிய வர்த்தகர்களை புறக்கணிப்பதற்குமான அழைப்புகளையும் விடுக்கும் செயல்கள் நடந்தேறியுள்ளன.

2.23 இந்துத்துவ சக்திகள் சிறுபான்மையினருக்கு எதிரான தங்களுடைய பிரச்சாரத்தில் கிறிஸ்தவர்களையும் குறிவைக்கின்றன. 2024 ஆம் ஆண்டில், கிறிஸ்தவர்களுக்கு எதிரான 834 வன்முறை சம்பவங்கள் நடைபெற்றன; இந்த எண்ணிக்கை 2023 இல் 734 ஆக இருந்ததை விட அதிகம். தேவாலயங்கள், பிரார்த்தனைக் கூட்டங்கள், மீதான தாக்குதல்கள், ஒதுக்கி வைத்தல் மற்றும் கடுமையான மதமாற்ற எதிர்ப்புச் சட்டங்களைப் பயன்படுத்தி கிரிமினல் வழக்குகளைப் பதிவு செய்வது ஆகியவை கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படும் சில வழிகள். ஆர்.எஸ்.எஸ் அமைப்புடன் இணைந்த அமைப்புகள், மதம் மாறிய அனைத்து ஆதிவாசிகளுடைய பட்டியலிலிருந்து வெளியேற்றி பழங்குடியினர் அந்தஸ்தையும் பறிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, கிறிஸ்தவ ஆதிவாசிகளுக்கு எதிராகப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

## வலுப்படுத்தப்பட்டுள்ள எதேச்சதிகாரம்

2.24 பல்வேறு ஜனநாயக விரோத நடவடிக்கைகள் மூலம் எதேச்சதிகாரம் வலுப்பெறுவதை 23 வது காங்கிரஸ் அரசியல் தீர்மானம் குறிப்பிட்டது. கடந்த மூன்று ஆண்டுகள் இந்தப் போக்குகள் தீவிரமடைந்ததைக் கண்டுள்ளன. நாடாளுமன்றத்தைக் கட்டுப்படுத்திடவும், உயர்மட்ட நீதியமைப்பை பலவீனப்படுத்திடவும், தேர்தல் ஆணையத்தின் சுதந்திர அந்தஸ்தை அழித்திடவும் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2.25 நாடாளுமன்றம், எதிர்க்கட்சிகள் கிட்டத்தட்ட நீக்கம் செய்யப்பட்ட சூழலைச் சந்தித்தது. மணிப்பூரில் நடந்த இனக்கலவரம் போன்ற முக்கியமான மக்கள் பிரச்சனைகள் விவாதிக்க அனுமதிக்கப்படவில்லை. முன்னெப்போதும் இல்லாத வகையில், 2023 குளிர்காலக் கூட்டத்தொடரின்போது இரு அவைகளிலும் சேர்த்து 146 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். முக்கியமான மசோதாக்கள் நாடாளுமன்றக் குழுக்களின் பரிசீலனைக்கு அனுப்பப்படாமல் நிறைவேற்றப்பட்டன. புதிய நாடாளுமன்ற கட்டடத்தை இந்து சமயச் சடங்குகளுடன் பிரதமர் திறந்து வைத்தார், சபாநாயகர் இருக்கைக்கு பின்னால் ‘செங்கோல்’ பொருத்தப்பட்டது.

2.26 யு.ஏ.பி.ஏ மற்றும் பி.எம்.எல்.ஏ போன்ற கொடூரமான சட்டங்கள் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிராக, ஒன்று அவர்களை பாஜகவுக்கு கட்சித்தாவ வைப்பதற்காக அல்லது சிறையில் அடைத்திடப் பயன்படுத்தப்பட்டன. நமது அரசியல் வரலாற்றில் முதன் முறையாக, மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக ஜார்க்கண்ட் மற்றும் தில்லியின் இரண்டு முதல்வர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஊடகவியலாளர்களைக் கைது செய்வது, தடுப்பது மற்றும் சுதந்திர ஊடகங்களைக் குறிவைப்பது போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்தன. முந்தைய குற்றவியல் சட்டங்களுக்குப் பதிலாக மூன்று குற்றவியல் சட்டங்களும், நாடாளுமன்றத்தில் விவாதமின்றி நிறைவேற்றப்பட்ட பின்னர் நடைமுறைக்கு வந்துள்ளன. இந்த மூன்று சட்டங்களும் விசாரணைக் காவலில் வைக்கும் காவல்துறையினரின் அதிகாரங்களை வலுப்படுத்தியுள்ளன, குற்றத்தைக் குறிப்பிடாமல் தேசத்துரோகம் போன்ற கடுமையான பிரிவுகளை விரிவுபடுத்தியுள்ளன. தொலைத்தொடர்பு சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது, இது குடிமக்களின் அந்தரங்க

உரிமையை மீறும் வகையில் கண்காணிப்பு அமைப்பை வலுப்படுத்துகிறது.

2.27 எதேச்சதிகார கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், உயர் நீதிமன்ற நீதிபதிகள் அல்லது உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளை நியமிப்பது தொடர்பான பல விஷயங்களில் உச்ச நீதிமன்ற கொலீஜியத்தின் பரிந்துரைகளை செயல்படுத்த மறுப்பதன் மூலம் உயர் நீதியமைப்பை கட்டுப்படுத்த அரசாங்கம் முயன்றுள்ளது. உயர் நீதியமைப்பு ஒரு 'நிர்வாக நீதித்துறை' போலவே மேன்மேலும் செயல்படுகிறது.

## சிதைக்கப்பட்ட தேர்தல் ஆணையம்

2.28 தேர்தல் ஆணையம் தன்னுடைய தன்னாட்சி அந்தஸ்து படிப்படியாக சிதைக்கப்பட்டு வருவதைக் கண்டுவருகிறது. தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்களை நியமிப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டம், உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலுக்கு முரணாக தேர்வுக் குழுவில் நிர்வாகத் துறைக்கு பெரும்பான்மையை வழங்குகிறது. பாஜக தலைமையின் வகுப்புவாத பிரச்சாரத்தைப் பொறுத்தவரையில் தேர்தல் ஆணையம் தன்னுடைய தலையீட்டை முற்றிலுமாக நிறுத்திவிட்டது. தேர்தல் தேதிகள் குறித்த நிர்வாகத் துறையின் கட்டளைகளுக்கு தேர்தல் ஆணையமும் வளைந்து கொடுக்கிறது. பதிவான வாக்குகளுக்கும் எண்ணப்பட்ட வாக்குகளுக்கும் இடையிலான பெரிய இடைவெளி; வாக்காளர் பட்டியலில் சேர்த்தல் மற்றும் நீக்கல்; மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடு போன்றவை தொடர்பான பல்வேறு விளக்கங்களற்ற விஷயங்களுடன், தேர்தல்கள் நடத்தப்படும் முறை வெளிப்படைத்தன்மையற்றதாக மாறியுள்ளது.

2.29 ஆளும் கட்சிக்கு வழங்கப்படுகிற – ஊழல் மலிந்த கார்ப்பரேட் நிதிக்கொடைகளை நிறுவனமயமாக்கிய தேர்தல் பத்திரங்கள் திட்டம், கடந்த 2024 இல் உச்ச நீதிமன்றத்தால் அரசியலமைப்பிற்கு விரோதமானது என்று தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தத் தீர்ப்பானது, தேர்தல் பத்திரங்களை நாங்கள் ஏற்கப் போவதில்லை என்று ஆரம்பத்திலேயே அறிவித்ததோடு மட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றத்தில் இந்தத் திட்டத்தை எதிர்த்து வழக்கு தொடர்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தனித்த உறுதியான அணுகுமுறையை நிலைநாட்டியது. தேர்தல் பத்திரங்கள் ரத்து செய்யப்பட்டாலும், வாக்காளர்களைக் கவரவும், வாக்குப்பதிவு செயல்முறையை சீர்குலைக்கவும் தேர்தல்களின் போது, பல்வேறு மட்டங்களில், பெரும் தொகை இறக்கப்படுகிறது. அரசியல்வாதிகள்–தொழிலதிபர்களின் கூட்டணிதான் இந்த சட்டவிரோத நிதிகளின் ஆதாரம். தேர்தல் முறையில் பண பலத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்க்கமான நடவடிக்கைகள் தேவைப்படுகிற இத்தகைய சூழ்நிலையில் தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்த கேள்வி அவசரமாகியுள்ளது.

## கூட்டாட்சி முறையை தகர்த்தெறிதல்

2.30 அனைத்து அதிகாரங்களையும் மையப்படுத்தி, கூட்டாட்சி கட்டமைப்பை அழித்து, கூட்டாட்சி கொள்கையை சட்ட–அதிகாரமற்றதாக்கி விடுகிற தனது முயற்சியை மோடி அரசாங்கம் தொடர்ந்தது. அரசியல், பொருளாதாரம் மற்றும் நிதி உள்ளிட்டவை மீதான கூட்டு நடவடிக்கைகளின் வாயிலாக, மோடி அரசாங்கம் ஒன்றிய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான அதிகார இயங்கியல் முறையை மறுவரையறை செய்துள்ளது. பகிர்ந்தளிக்க வேண்டிய நிதி தொகுப்புக்குரிய வரிகளைக் குறைப்பது, மாநிலங்களுக்கான வள–ஆதாரங்களை மறுப்பது மற்றும் ஜி.எஸ்.டி இழப்பீட்டைத் தொடராமல் இருப்பது போன்ற நடவடிக்கைகள் வாயிலாக, ஒன்றிய அரசு பல எதிர்க்கட்சிகள் ஆளும் பல மாநிலங்களுக்கு நிதி நெருக்கடியை உருவாக்கியுள்ளது. மத்திய வரியில் மாநிலங்களுக்கு உரிய பங்கை வழங்குவதில், மாநிலங்களின் பங்கு குறைந்துள்ளது. மத்திய பட்ஜெட்டுகளில் பகிர்ந்தளிக்கக்கூடிய தொகுப்பில் மாநிலங்களின் பங்கிற்கான நிதி ஒதுக்கீடு பல ஆண்டுகளாக குறைக்கப்பட்டு வருவதில் இது வெளிப்படுகிறது. 2016ல் இந்தத் தொகை 41.1 சதவிகிதமாக இருந்த நிலையில், 2023-ல் 35.1 சதவிகிதமாகக்

குறைந்துள்ளது. பகிரப்படாத மேல்வரி (செஸ்) மற்றும் கூடுதல் கட்டணங்களை (சர்சார்ஜ்) ஒன்றிய அரசு நம்பியிருக்கும் போக்கு அதிகரித்து வருவது, மாநிலங்களுடன் பகிரப்பட வேண்டிய வரி வருவாயின் ஒட்டுமொத்த தொகுப்பை குறைத்துள்ளது. ஆதார வளங்கள் குறைந்து வருகிற நிலையில், கடன் வாங்கும்போது அதிகப்படுத்தப்பட்டு வருகிற கட்டுப்பாடுகளையும் மாநிலங்கள் எதிர்கொள்கின்றன. இது வளர்ச்சிப் பணிகள் மற்றும் நலத்திட்ட நடவடிக்கைகளுக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதைத் தடுக்கிறது.

2.31 இரண்டாவது முறையாக மோடி அரசு பதவியேற்ற பிறகு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களின் தலையீடு படிப்படியாக அதிகரித்தது. மாநில அரசு மற்றும் சட்டமன்றத்தின் அதிகாரங்களை ஆளுநர்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கினர். தன்னிச்சையாக துணைவேந்தர்களை நியமனம் செய்வது, சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் மறுப்பது, மூத்த அதிகாரிகளுக்கு மாநில அரசுகளைக் கடந்து குறுக்கு வழியில் அழைப்பாணை விடுப்பது உள்ளிட்ட முயற்சிகள் வாடிக்கையாகி விட்டன. மத்திய-மாநில உறவுகளின் அடிப்படை கட்டமைப்பை சீர்குலைத்திட ஆளுநர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். மேலும் ஒன்றிய அரசின் குறைந்தபட்ச உதவி கொண்ட ஒரு திட்டத்தை மத்திய திட்டம் என்று முத்திரை குத்துவதற்கு வலியுறுத்துவதன் மூலமும், மற்ற திட்டங்களுக்கான நிதியை வெட்டுவதாக அச்சுறுத்துவதன் மூலமும், மாநிலங்களின் வளர்ச்சித் திட்டங்களை ஒன்றிய அரசு தனதாக்கிக் கொள்ள முயல்கிறது.

2.32 பாஜக தனது மையப்படுத்தும் நகர்வை தொடரும் என்பது ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ (ONOE) முறையைக் கொண்டுவரத் துடிப்பதிலிருந்து தெளிவாகிறது. மக்களவைக்கும், அனைத்து மாநில சட்டப்பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்திட அரசியல் சட்ட திருத்த மசோதா ஒன்றையும், மற்றொரு மசோதாவையும் ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. அத்தகைய முறை மாநிலங்களின் உரிமைகளையும், ஐந்தாண்டு ஆட்சிக் காலத்திற்கான அரசியலமைப்பு உத்தரவாதத்தையும் கடுமையாக பாதிக்கும். “ஒரு நாடு ஒரு தேர்தல்” எதேச்சதிகார மையப்படுத்தலுக்கு வழிவகுக்கும்.

2.33 இந்துத்துவம் மற்றும் பெரும் கார்ப்பரேட்டுகள் ஆகிய இரட்டை சக்திகள்தான் அதிகாரங்களை மத்தியில் குவிக்கிற – மையப்படுத்தல் என்ற போக்கிற்கு உந்துசக்தியாக இருக்கின்றன. எனவே, கூட்டாட்சி மற்றும் மாநில உரிமைகளைப் பாதுகாப்பதை எதேச்சதிகார எதிர்ப்பு, இந்துத்துவ எதிர்ப்புப் போராட்டத்தின் ஒரு பகுதியாக மாற்றுவது முக்கியம். மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாக்க ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்கி முன் நிறுத்திட பாஜக அல்லாத அனைத்து மாநில அரசாங்கங்களும் அணிசேர்க்கப்பட வேண்டும்.

## ஜம்மு-காஷ்மீர்: ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சி மீதான தாக்குதலின் சின்னம்

2.34 ஜம்மு-காஷ்மீரில் நடந்திருப்பது பாஜக அரசாங்கத்தின் தீவிர ஜனநாயக விரோத, கூட்டாட்சி எதிர்ப்பு அணுகுமுறையின் சின்னமாகும். 370 வது பிரிவு ரத்து செய்யப்பட்டு, 2019-ல் ஜம்மு – காஷ்மீர் மாநிலம் துண்டாடப்பட்ட பிறகு, அரசு அடக்குமுறையும், யூனியன் பிரதேச குடிமக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதும் வழக்கமாகிவிட்டது. நிரந்தர குடியிருப்பாளர்களுடைய வசிப்பிட அந்தஸ்தையும் அவர்களின் நில உரிமைகளையும் பறிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய சட்டமன்றத்தில் பள்ளத்தாக்கின் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் வகையில் தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. உச்ச நீதிமன்றம், 370 வது பிரிவை ரத்து செய்ததற்கும் ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தை துண்டாடியதற்கும் எதிரான மனுவைத் தள்ளுபடி செய்ததன் மூலம், கூட்டாட்சி மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சட்டமன்றங்களின் உரிமைகளுக்கு எதிரான பலத்த அடியைத் தந்துள்ளது.

2.35 இறுதியாக, 2024 செப்டம்பரில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றபோது, பாஜகவின் அனைத்து சூழ்ச்சிகளையும் மீறி, தேசிய மாநாட்டுக் கட்சி தலைமையிலான கூட்டணி

தெளிவான பெரும்பான்மையைப் பெற்றது; உமர் அப்துல்லா அரசாங்கம் மிகக் குறைந்த அதிகாரங்களுடன் பதவியேற்றுள்ளது. இருப்பினும், உச்சநீதிமன்றத்தில் மாநில அந்தஸ்து வழங்குவதாக ஒன்றிய அரசு அளித்த உத்தரவாதம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இதற்கிடையில், லடாக்கில், ஆறாவது அட்டவணை அந்தஸ்து மற்றும் சுயாட்சியைப் பெறுவதற்கான மக்கள் இயக்கம் செயல்பட்டு வருகிறது. சிறப்பு அந்தஸ்தை மீட்டெடுப்பதற்கான போராட்டத்தைத் தொடரும் அதே வேளையில், உடனடியாக மாநில அந்தஸ்தை அடைவதே மதச்சார்பற்ற–ஜனநாயக சக்திகளின் நோக்கம்.

## மணிப்பூர்: ஆழமடையும் பிளவு

2.36 மே 3, 2023 அன்று மணிப்பூரில் இனக்கலவரம் வெடித்து இருபது மாதங்களுக்குப் பிறகும், நிலைமை மோசமாகவே உள்ளது. தீ வைப்பு, பாலியல் பலாத்காரம், கடத்தல், அப்பாவி மக்களைக் கொலை செய்தல் போன்ற கொடூரமான செயல்கள் அரங்கேற்றப்பட்டன. இந்த மோதலில் இதுவரை 250 பேர் கொல்லப்பட்டுள்ளனர், 60,000 இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் முகாம்களில் வாழ்கின்றனர். ஒன்றிய, மாநில பாஜக அரசுகள், இயல்பு நிலையை மீட்டெடுக்கவும், மாநிலத்தில் அமைதியை நிலைநாட்டவும் தவறிவிட்டன. பிரதமர் மோடி ஒரு முறை கூட மணிப்பூருக்கு விஜயம் செய்யவில்லை, இந்த இனமோதலில் முதலமைச்சர் பைரேன் சிங்குடைய பாரபட்சமான பங்கு குறித்த பரவலான கோபம் நிலவியபோதிலும், அவர் நீக்கப்படவில்லை. பாதுகாப்புப் படைகள் தாமதமாக நிறுத்தப்பட்டதைத் தவிர, மோதலில் ஈடுபட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு இனக் குழுக்களுடன் பேச்சுவார்த்தையை தொடங்குவதற்கு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. ஒன்றிய அரசின் செயல்படாத தன்மை, மக்களிடையே நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கும், அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்குத் தேவையான நிலைமைகளை உருவாக்குவதற்கும் தடையாக உள்ளது.

2.37 மணிப்பூரில் இனமோதலை அதிகரிக்கக்கூடிய மற்றும் மொத்த வடகிழக்கு பிராந்தியத்திலும் அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய, தன்னுடைய செயலற்ற போக்கின் ஆபத்தான விளைவுகளை ஒன்றிய அரசு உணர்ந்தறியாமல் இருப்பது தெரிகிறது. மத்திய அரசு உடனடியாக தலையிட்டு, பைரேன் சிங்கை முதல்வர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, அனைத்து சமூகங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படுவதையும், அமைதியையும், இயல்பு நிலையையும் மீட்டெடுப்பதையும் உறுதிசெய்யும் பொருட்டு, மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தையைத் தொடங்க வேண்டும்.

## வெளியுறவுக் கொள்கையும் அமெரிக்காவுடனான கேந்திர உறவுகளும்

2.38 அமெரிக்காவுடனான நெருக்கமான ஒருங்கிணைப்பு, மோடி அரசாங்கத்தின் இரண்டாவது பதவிக்காலத்தில், அதன் வெளியுறவுக் கொள்கையின் குறியீடாக இருந்தது; இந்தப் போக்கு டிரம்ப் ஜனாதிபதி பதவியேற்புக்குப் பிறகு மேலும் தொடரும். உக்ரைன்–ரஷ்யா மோதலில், இந்தியா நடுநிலை வகிக்க முயன்ற பிரச்சனை தவிர, இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது அமெரிக்காவின் புவிசார் அரசியல் வியூகத்தோடு பரந்தளவில் இணைந்துள்ளது. ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில் சீன எதிர்ப்பு கூட்டணியில் இந்தியாவுடைய பங்கிற்கு அமெரிக்கா கொடுக்கும் அதிக முக்கியத்துவத்தால், உக்ரைன் மீதான இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு அமெரிக்கா வேண்டா வெறுப்போடு ஒப்புதலளிக்க வேண்டிவந்தது. குவாட் அமைப்பு, அதன் உறுப்பு நாடுகளது தலைவர்களின் உச்சிமாநாடுகள் நிலைக்கு உயர்த்தப்பட்டது; மேலும், குவாட் அமைப்பை ஒரு பாதுகாப்பு மற்றும் ராணுவ சூழ்ச்சிக் கூட்டணியாக மாற்றுவதற்கான அமெரிக்க முயற்சிகளுக்கு மோடி அரசாங்கம் இணங்கியது. சிக்கலான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பம் (2022) மற்றும் விநியோக ஏற்பாடுகளின் பாதுகாப்பு மற்றும் பரஸ்பர பாதுகாப்பு கொள்முதல் ஏற்பாடு (2023) ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதன் மூலம் அமெரிக்காவின் இராணுவ மற்றும் பாதுகாப்பு சுற்றுப்பாதையின் ஒரு முக்கிய பகுதியாக இந்தியா மாறிவிட்டது. கடந்த ஏழு ஆண்டுகளில், இந்தியா அமெரிக்காவிடமிருந்து 1500 கோடி

டாலர் மதிப்புள்ள ஆயுதங்களை வாங்கியுள்ளது.

2.39 அமெரிக்கா-இந்தியா-இஸ்ரேல் அச்சு, காஸாவுக்கு எதிரான இனப்படுகொலைப் போரில் இஸ்ரேலுக்கு வெட்கக்கேடான வகையில் ஆதரவு அளிப்பதில் போய் முடிந்துள்ளது. ஐ.நா. பொதுச் சபையில் பாலஸ்தீனத்தை ஆதரித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பில் இந்தியா கலந்துகொள்ளவில்லை. அனைத்திற்கும் மேலாக, காசாவில் போர் நடத்துவதற்கு இஸ்ரேலுக்கு இந்தியா ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் ஏற்றுமதி செய்து வருகிறது. I2U2 (இந்தியா, இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம்) மற்றும் IMEC (இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார தடவழி) ஆகியவை இந்திய வெளியுறவுக் கொள்கையை அமெரிக்காவுடன் இணைப்பதற்கான, அதிலும் குறிப்பாக மேற்கு ஆசிய விவகாரங்களில் இணைப்பதற்கான அமெரிக்க சார்பு குழுங்களாகும். பிரிக்ஸ் மற்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இந்தியா உறுப்பினராக இருப்பது உலகில் வளர்ந்து வரும் பன்முகத்தன்மையை உணர்ந்திருப்பதன் காரணமாக கிடைத்த அங்கீகாரமாகும். ஆனால் அமெரிக்காவுடனான அதன் புவி அரசியல் பொருளாதார ராணுவம் சார் உறவுகள், வளர்ந்து வருகிற பல்துருவப் போக்கு வழங்கக்கூடிய அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்துவதற்குத் தடையாக நிற்கும்.

## கல்வி வாய்ப்புகள் குறைந்து வருதல்

2.40 கடந்த மூன்று ஆண்டுகளில் கல்வி மிகக் கடுமையான தாக்குதலைச் சந்தித்துள்ளது. இந்த தாக்குதலுடைய மிகவும் நிர்ணயகரமான அம்சம் என்னவென்றால், கல்வி பெறுவதற்கான வாய்ப்பைக் கடுமையாக அரிப்பது தான். கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் கோருகிற அருகமைப் பள்ளிகள் என்பதற்கு முற்றிலும் முரணாக, ஆயிரக்கணக்கான அரசுப் பள்ளிகள் 'சாத்தியமின்மை' என்ற பெயரால் மூடப்பட்டுள்ளன. கேரளா போன்ற குறிப்பிடத்தக்க விதிவிலக்குகளைத் தவிர, தனியார்மயமாக்கத்திற்கான உந்துதலால் மாணவர்கள் அரசு பள்ளிகளில் இருந்து தனியார் பள்ளிகளுக்கு திரளாக வெளியேறுவதற்கு வழிவகுத்து இருக்கிறது. இதே கோட்பாடு இளங்கலைப் பட்டப்படிப்பு நிறுவனங்களுக்கும் பொருத்தப்பட்டுள்ளது, இதன் விளைவாக கல்லூரி இடைநிற்றல் விகிதங்கள் கூர்மையாக அதிகரித்துள்ளன. வழங்கி வந்த நிதியை நிறுத்துவது மற்றும் நிதியைக் குறைப்பதன் மூலமாக, சமூகத் துறைக்கான ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்களைக் குறைப்பதில் அரசாங்கத்துடைய ஒட்டுமொத்த ஆர்வம், இந்த வளர்ச்சி குன்றிய பாதகமான போக்கிற்கு ஒரு முக்கிய காரணியாக உள்ளது. கோவிட் -19 பெருந்தொற்று காலத்திற்குப் பிறகு, கல்வி நிறுவனங்கள் பெருமளவில், நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த நிலை, இந்த புதிய கொள்கைக்கான வேகத்தை எளிதாக்கியுள்ளது.

2.41 இந்த தாக்குதலின் மற்றொரு அம்சம், அறிவியல், அறிவியல் மனப்பான்மை மற்றும் பகுத்தறிவு சிந்தனை ஆகியவை இலக்குகளாகி இருப்பது தான்.எதேச்சதிகார மற்றும் பாசிசத் தன்மைகொண்ட கோட்பாடுகளை நோக்கிய நகர்வுகளின் சின்னமாக, நம்பிக்கை அடிப்படையிலான பாடத்திட்டம் உள்ளடக்கம் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இந்த திசைவழி, வகுப்புவாத, அடையாள அடிப்படையிலான வெறுப்பை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், குடியரசு மற்றும் குடிமக்களின் ஜனநாயக மற்றும் மதச்சார்பற்ற அடையாளத்தை இந்துத்துவ அடிப்படையிலான வழிகளில் மறுவரையறை செய்கிறது. இந்த மாற்றம், குறிப்பாக பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற உயர் கல்வி நிறுவனங்கள் வரையில் நீண்டுள்ள, பிரத்யேக கொள்கை அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் நியமனம் மற்றும் கைப்பற்றப்படுவதில் தெளிவாகத் தெரிகிறது.

2.42 அரசாங்க நிதியுதவி பெருமளவில் திரும்பப் பெறப்பட்டதால் ஏற்பட்ட பெரிய அளவிலான நிதி ஆதார இடைவெளி, தற்போது லாபத்திற்கான பரந்த பெருநிறுவன முதலீடுகளால் நிரப்பப்பட்டு வருகிறது. இதன் விளைவாக ஆசிரியர்-மாணவர்களுக்கு இடையிலான நேரடியான தொடர்பானது, டிஜிட்டல் கற்பித்தல் முறையால் மாற்றப்பட்டு, கார்ப்பரேட் கல்வி நிறுவனங்களால் ஊக்குவிக்கப்பட்ட டிஜிட்டல் தளங்களின் கருணையில் முற்றிலும்

விடப்பட்டுள்ளது.

2.43 2020 தேசிய கல்விக் கொள்கையின் அமலாக்கம், கல்வித்துறை நிர்வாகத்தின் தீவிர மையப்படுத்தலோடு இணைந்து, நிர்ணயகரமான வகையில் கூட்டாட்சி கொள்கைகளை சிதைக்கிறது. இந்த மையப்படுத்தலின் ஒரு முக்கிய அம்சம் வேந்தர் பதவியை தவறாகப் பயன்படுத்துவதாகும், ஆளுநர்கள் மத்திய அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கான கருவிகளாக செயல்படுகிறார்கள், இது அரசியலமைப்பு சட்டத்திற்கு வெளிப்படையான முரணாக இருக்கிறது. யுஜிசி வரைவு வழிகாட்டுதல்கள் மாநில பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை தேர்வு செய்யும் அதிகாரத்தை வேந்தருக்கு வழங்க முற்படுகின்றன. மேலும், பல மாநிலங்களில், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் மாணவர் பேரவைகளுக்கு அனுமதி இல்லை.

## சுகாதாரத் துறையை தனியார்மயமாக்கல்

2.44 இந்தியா சமீப காலங்களில் பொது சுகாதாரம் தொடர்பான பல இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகிறது. அனைத்து முக்கிய பொருளாதாரங்களிலும் சுகாதார நிதி ஒதுக்கீட்டில் ஏற்கனவே மிகக் குறைந்த அளவில் இருக்கும் அரசின் பங்கு மேலும் குறைக்கப்பட்டுள்ளது; மக்களின் சொந்த செலவுச்சுமை அதிகரித்துள்ளது. மருத்துவ நலம் மற்றும் மருத்துவக் கல்வியை கார்ப்பரேட்மயமாக்குவதும், லாபமீட்டுவதும், நம்ப முடியாத அளவுக்கு வளர்ந்துள்ளது. பொது சுகாதார உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள் பலவீனமடைந்திருக்க, பி.எம்.ஜே.ஏ.ஒய் (PMJAY) போன்ற காப்பீட்டுத் திட்டங்கள் வாயிலாக, ஊழலை நிறுவனமாக்குவது; பொதுச்செலவில் தனியார் மருத்துவ சேவை என்பது விதியாகிவிட்டது. பொதுத்துறை மருந்து உற்பத்தி மற்றும் மருத்துவ தொழில்நுட்பத் துறை திட்டமிட்டு பலவீனப்படுத்தப்பட்டுள்ளன, அதேசமயம் முறையாக ஒழுங்குபடுத்தப்படாத பெரு நிறுவன சங்கிலிகள் ஏகபோகத்தை எட்டி வருகின்றன. தடுப்பூசிகள் உட்பட ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு பணிகள் – திட்டங்கள் தனியார் துறை கூட்டுக்களவு முதலாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கிக் பொருளாதாரம் உள்ளிட்டு பணிசார் மருத்துவ பிரச்சனைகள் அதிகரித்து வருகின்றன. டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் அது தொடர்புடைய தொழில்நுட்பத்தை மையப்படுத்திய சீர்திருத்தங்கள் ஏற்கனவே விளிம்புநிலையில் இருக்கிற மக்களை மேன்மேலும் ஓரங்கட்டுகின்றன. பொது சுகாதார அமைப்பு கூர்மையாக சீர்குலைந்து வருகின்ற நிலையில், மக்களின் உடல்நலம், குறிப்பாக ஏழைகளின் உடல்நலம் மோசமடைந்து வருகிறது. பொது சுகாதார அமைப்பின் திவால்நிலையை முழுமையாக அம்பலப்படுத்திய கோவிட் தொற்றுநோயின் போது இந்தியாவுக்கு ஏற்பட்ட பேரழிவு அனுபவம் உள்ளபோதிலும் இவை எல்லாம் தொடர்ந்து நடக்கின்றன.

2.45 பொது சுகாதாரம் என்பது, மாநில அதிகாரங்களுக்கு உட்பட்டதாக இருந்தபோதிலும், நிதி கூட்டாட்சியை சிதைப்பதன் மூலம், பொது சுகாதார கட்டமைப்புகளை வலுப்படுத்த முயற்சிக்கும் மாநிலங்களுக்கு தடைகள் உருவாக்கப்படுகின்றன. பாஜக அரசு சுகாதார நிலை மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு குறித்த தவறான உரிமைகோரல்களையும் பிரச்சாரங்களையும் கட்டவிழ்த்து விடுகிற அதே நேரத்தில் பொறுப்பேற்பைக் கோருகிற வழிகளை மூடுகிறது. மிகவும் அவசியமான, அவ்வப்போதான சுகாதார ஆய்வுகள் தவறாக திரிக்கப்பட்டு சமரசம் செய்யப்பட்டுள்ளன. மருந்து உற்பத்தித் துறையில் காப்புரிமை பெறாத அத்தியாவசிய மருந்துகளின் விலையை பெருமளவில் உயர்த்த அனுமதிப்பதன் மூலமும், காப்புரிமை பெற்ற மருந்துகளுக்கு பன்னாட்டு நிறுவனங்கள் வசூலிக்கும் அதிக விலைக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருப்பதன் மூலமும் கார்ப்பரேட்டுகளுடைய அதீத லாபத்தை ஊக்குவிக்கும் கொள்கைகளை அரசாங்கம் தொடர்கிறது. மாற்றுக் கொள்கைகளின் ஒரு பகுதியாக மக்களுடைய சுகாதார உரிமைக்காகவும், அரசு செலவிலான பொது மருத்துவ, சுகாதார வசதிகள் அனைவருக்கும் கிடைப்பதற்கான போராட்டமும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

## பண்பாட்டின் மீதான தாக்குதல்

2.46 கலாச்சார மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் தன்னுடைய ஆட்களை ஊடுருவச் செய்வதன் மூலம் ஆர்.எஸ்.எஸ் தனது பிடியை அதிகரித்துள்ளது. அவர்கள் இந்திய வரலாற்றை வகுப்புவாத கண்ணோட்டத்தில் மாற்றி எழுதவும், புராணங்களை உண்மையான வரலாறாக முன்வைக்கவும் முயல்கிறார்கள். இந்திய வரலாறு மற்றும் பண்பாட்டுத் துறையில், இந்துக்கள் அல்லாதவர்களின் பங்கும், பங்களிப்பும் குறைமதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்றன, மறுக்கப்படுகின்றன. சமூக சீர்திருத்தம் மற்றும் தேசிய இயக்கத்தின் மதச்சார்பற்ற மற்றும் முற்போக்கான பாரம்பரியம் களங்கப்படுத்தப்படுகிறது. போலியான கதைகளைப் பயன்படுத்தி ஒரு தவறான பெருமித உணர்வு ஊக்குவிக்கப்படுகிறது. இந்துத்துவ வகுப்புவாத நிகழ்ச்சி நிரல் ஒட்டுமொத்த மக்களின் பொது புத்தியின் ஒரு பகுதியாக மாறும் வரை வெற்றி பெற முடியாது. இதற்கு, வெகுஜன கலாச்சாரத்தின் வாயிலாக பரப்புதல் அவசியமாக இருக்கிறது. இதனால்தான், திரைப்படத் துறை, தொலைக்காட்சி சேனல்கள், ஓடிடி தளங்கள், வெகுஜன இசை மற்றும் சமீப காலமாக உயர்நுண் கலைகளில் கூட ஊடுருவி கட்டுப்படுத்த அவர்கள் இடைவிடாத முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். பிராந்திய அல்லது உள்ளூர் அளவிலான மத விழாக்களை அகில இந்திய அளவில் முன்னிறுத்துவதும் 'இந்து' அடையாளத்தை உருவாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாகும். பகுத்தறிவின் மீதான தாக்குதல்களும், பகுத்தறிவை பலவீனப்படுத்துவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பிற்போக்குத்தனம், மூடநம்பிக்கை, நிலப்பிரபுத்துவ விழுமியங்கள், ஆணாதிக்கம், பெண் வெறுப்பு, சாதி 'தூய்மை', 'தீட்டு' போன்ற சிந்தனைகள் இந்துத்துவ வகுப்புவாத சித்தாந்தம் செழித்து வளர்வதற்கான ஆதாரமாக உள்ளன. பகுத்தறிவுக்கு ஒவ்வாத மற்றும் அறிவியலுக்குப் புறம்பான கோட்பாடுகளும் சொற்பொழிவுகளும் இன்று அரசின் ஆதரவைப் பெற்று கலாச்சார மற்றும் அறிவார்ந்த நிறுவனங்கள் மூலம் ஊக்குவிக்கப்படுகின்றன. பண்பாட்டுத் தளத்தில் இந்துத்துவ நிகழ்ச்சி நிரலை எதிர்கொள்வதற்கு அனைத்து மதச்சார்பற்ற மற்றும் முற்போக்கு கலாச்சாரக் குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் நீடித்த மற்றும் ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படுகிறது.

## கைப்பற்றப்பட்ட ஊடகம்

2.47 சில விதிவிலக்குகள் தவிர்த்து, மைய நீரோட்ட ஊடகங்கள் தற்போது ஆளுங்கட்சி மற்றும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. கார்ப்பரேட் ஊடகங்களின் உடமையாளர்கள் அரசோடு சேர்ந்து நின்று அவர்களது சேனல்களில் வகுப்புவாத பிரச்சாரத்தை செய்கிறார்கள். சுதந்திர ஊடகங்கள், நவீன தொழில் நுட்ப ஊடகங்கள் அச்சுறுத்தப்படுகின்றன. "நியூஸ் க்ளிக்" காவல்துறை மற்றும் ஒன்றிய அரசின் முகமைகளின் இலக்காக மாற்றப்பட்டது ஓர் எச்சரிக்கை விடுப்பே ஆகும். தகவல் தொழில் நுட்ப விதிகள் திருத்தம் 2023 போன்ற தொடர் முயற்சிகள் ஊடகத்தை வரைமுறைப்படுத்தவும், தணிக்கைக்கு உள்ளாக்கவும் செய்யப்பட்டன. அதன் சில அம்சங்கள் மும்பை உயர்நீதிமன்றத்தில் இடைக்காலத் தடைக்கு உள்ளாக்கப்பட்டன. 2024 ஊடக சுதந்திர குறியீட்டில் இந்தியா 180 நாடுகளில் 159வது இடத்தில் உள்ளது.

## பெண்கள்: பாஜக ஆட்சியில் அவல நிலை

2.48 மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் நாடகத்தை நடத்திவிட்டு, அதை அமல்படுத்துவதை காலவரையின்றி தாமதப்படுத்தி மோடி அரசு இந்திய பெண்களை ஏமாற்றியிருக்கிறது. மிகவும் காலம் தாழ்த்தப்படுத்தப்பட்டு வருகிற மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் நீண்டகாலமாக திட்டமிடப்பட்டுவரும் தொகுதி மறுசீரமைப்பு செயல்முறையுடன் இதை தவறாகவும், தேவையின்றியும் இணைப்பதன் மூலம் இது இழுத்தடிக்கப்படுகிறது. இதன் விளைவாக, இந்தியாவில் சட்டமன்றங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் பெண்களின் எண்ணிக்கை இப்பிராந்தியத்திலேயே மிகக் குறைவாக உள்ளது.

2.49 இந்த காலகட்டத்தில், பல மாநில அரசுகள் பெண்களின் வங்கிக் கணக்குகளில் 1000 முதல் 1500 ரூபாய் வரை பணம் செலுத்திடும் திட்டத்தின் மூலம் பெண்கள் ஆதரவு தளத்தை உருவாக்கிட முயற்சித்தன. இத்தகைய சிறிய தொகைகள் கூட பெண்களின் வாழ்க்கையில் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்தும் அளவுக்கும், பெண்களுடைய வாக்களிக்கும் முறைகளில் அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்கும், ஒரு சராசரி பெண்ணின் கடுமையான பொருளாதாரத் துயரம் இருக்கிறது. நமது தலையீடுகள் பெருந்திரளான பெண்களிடையே இத்தகைய திட்டங்களுக்கு இருக்கிற நேர்மறையான தாக்கத்தை உணர்ந்து, கூர்உணர்வு கொண்டதாக இருக்க வேண்டும். பாஜகவின் அணுகுமுறை என்னவெனில், அரசியலமைப்பு சட்டத்தின்படி சம குடிமக்களாக இருப்பது என்ற நிலையில் இருந்து, பெண்களை இதுபோன்ற திட்டங்களை நம்பியிருக்கும் வெறும் 'பயனாளிகளாக' மாற்றுவதாகும். இதுபோன்ற திட்டங்களின் பயன்களைப் பெறுவதற்காக நாம் பெண்களுக்கு உதவிடும் அதே வேளையில், அவர்களுடைய குடும்பம் வாழ்வதற்கு அவசியமான அவர்களுடைய வேலைக்கானஅங்கீகாரம் உள்ளிட்டு, பெண்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை நாம் வலுப்படுத்துவது அவசியம்.

2.50 உண்மையில், கொடுமையான எதார்த்த நிலை என்னவென்றால், இந்திய பெண்கள் ஊதியமில்லா வீட்டு வேலைகளிலும், குடும்ப நிலம் அல்லது சிறுதொழில் நிறுவனங்களில் ஊதியம் பெறாத விவசாய வேலைகளிலும் ஈடுபடுகிறார்கள். ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் சமீபத்திய ஈகோராப் (ECOWRAP) அறிக்கையின்படி, "மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெண்களின் ஊதியம் பெறாத வீட்டு வேலைகளின் மொத்த பங்களிப்பு 22.7 லட்சம் கோடி ரூபாயாக இருக்கும், இது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.5 சதவிகிதமாகும்." விலைவாசி உயர்வு, பெண்களின் வேலையின்மை அதிகரிப்பு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான நிதிக் குறைப்பினால் வேலை நாட்கள் இழப்பு ஆகியவை, பெண்கள் மீது பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. இதனால் அவர்கள் அதிக வட்டிக்கு கடன் வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டு. பேராசை பிடித்த நுண்நிதி நிறுவனங்களின் கருணையில், கடன் வலையில் சிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

2.51 மோடி அரசின் பத்தாண்டு கால ஆட்சியில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 28 சதவிகிதம் அதிகரித்துள்ளன. 2022 ஆம் ஆண்டில், சராசரியாக, ஒவ்வொரு மணி நேரத்திற்கும் பெண்களுக்கு எதிராக 50 குற்றங்கள் நிகழ்ந்ததாகவும், ஒவ்வொரு நாளும் 88 பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாகவும் தேசிய குற்றப்பதிவு ஆணையம் (NCRB) தெரிவிக்கிறது. அவர்களில் 11 பேர் தலித் பெண்கள். தண்டனை விகிதங்கள் மோசமாக இருக்கின்றன, ஒவ்வொரு 100 பாலியல் வன்புணர்வு வழக்குகளிலும் 75 குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். மல்யுத்த வீராங்கனைகள் வழக்கு போன்ற பல முக்கிய வழக்குகளில், பாஜக அரசாங்கங்கள் குற்றம் சாட்டப்பட்டவர்களை வெளிப்படையாகவே ஆதரித்துள்ளன. பா.ஜ.க. ஆட்சி செய்யும் இந்தியா, பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பற்ற நாடுகளில் ஒன்றாக இருக்கிறது.

2.52 பன்னிரண்டு 'இரட்டை எஞ்சின்' மாநில அரசாங்கங்கள், ஒரு பெண், பிற மதம் சார்ந்தவரை தனது துணையாக தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பறிக்கிற சட்டங்களைக் ஏற்றுக்கொண்டுள்ளன. உத்தரகாண்டில் நிறைவேற்றப்பட்டு, பாஜகவால் முன்மாதிரியென முன்வைக்கப்படும் பொது சிவில் சட்டம், திருமணம் இன்றி இணைந்து வாழும் உறவுகளைப் போலவே கருத்துடன்பாடுடனான பாலியல் உறவுகளையும் கிரிமினல் குற்றமாக்கி, 18 வயதுக்கு மேற்பட்ட ஒரு பெண் தனது வாழ்க்கையை எவ்வாறு வாழ வேண்டும் என்பதை தீர்மானிக்கும் அடிப்படை உரிமைக்கே எதிரானதாக இருக்கிறது. பழங்குடி சமூகங்கள் இந்த சட்ட வரம்புக்கு வெளியே வைக்கப்படும் என்று பாஜக தொடர்ந்து வலியுறுத்தி வருவது, இதன் மூலம் பொது சிவில் சட்டம் பெண்களின் உரிமைகளுக்காக அன்றி, இஸ்லாமிய சமூகத்தை குறிவைக்கிறது என்பதை நிரூபிக்கிறது. பாஜக ஆணாதிக்கத்தை வலுப்படுத்துகிற தனது கருத்தியல் அணுகுமுறை மற்றும் நடைமுறை ஆகிய இரண்டிலுமே பெண்களின் உரிமைகளுக்கு வலுவான எதிரி என்பதை நிரூபித்துள்ளது.

## இளைஞர்கள்: ஈடேறாத நம்பிக்கைகள்

2.53 மொத்த மக்கள் தொகையில் 65 சதவீத இளைஞர்கள் இருக்கும் நிலையில், அவர்களின் தேவைகள் மற்றும் கனவுகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றன என்பது நாட்டின் எதிர்கால திசையை தீர்மானிக்கும். குறைந்த அளவே கல்வி கற்ற பெருவாரியான இளைஞர்கள், மேம்பட்ட வாழ்க்கை குறித்த தங்களுடைய கனவுகளை நிறைவேற்று வதற்கான வேலை வாய்ப்புகளும், தரமான வேலைகளும் இல்லாமையால், தங்களின் எதிர்கால வாய்ப்புகள் அழிக்கப்பட்டுவிட்டதைக் காண்கின்றனர். சிவில் சர்வீஸ் தேர்வுகள் பிரச்சனைகளுடன் நடத்தப்படுவது குறித்தும், வினாத்தாள்கள் கசிவு ஏற்படுவது குறித்தும் படித்த இளைஞர்கள் சமீப காலமாக பெரும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இராணுவத்தில் தங்களுக்கு முறையான வேலைவாய்ப்பு மறுக்கப்படுவதற்கு எதிராக பல்லாயிரக்கணக்கானோர் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் இறங்கியது, அக்னி வீர் திட்டத்திற்கு எதிராக இளைஞர்கள் கொந்தளித்ததைக் காட்டியது. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் கீழ்மட்ட வேலைவாய்ப்புகள் கிடைப்பதில் கவனம் செலுத்துவதற்குக் காரணம், வேறு இடங்களில் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதே. பெரும்பாலான வேலைவாய்ப்புகள் வருமானமோ அல்லது சமூகப் பாதுகாப்போ இல்லாத முறைசாரா துறையில் உள்ளன. பெரும்பாலான இளைஞர்களுக்கு கிடைக்கக்கூடிய கல்வி வாய்ப்புகளும் தரமற்றதாக, பயனுள்ள வேலை அல்லது தொழில் வாய்ப்புக்கு எவரையும் தயார்படுத்தக் கூடியதாக இல்லை.

2.54 இளைய தலைமுறையினரின் சமூக, பண்பாட்டு வாழ்வில் வெற்றிடம் உருவாகியுள்ளது. ஆரோக்கியமான மற்றும் முற்போக்கான சமூக மற்றும் கலாச்சார விழுமியங்களை உள்வாங்குவதற்குப் பதிலாக, அவர்கள் தீய வணிக-நுகர்வு மற்றும் தன்முனைப்பு மதிப்பீடுகளால் வளர்த்தெடுக்கப்படுகிறார்கள். இந்துத்துவா ஆட்சியின் கீழ், தீவிர வகுப்புவாத மற்றும் பிளவுவாத உணர்வு தொடர்ந்து ஊட்டப்படுகிறது. சிறந்த கல்வி, தரமான வேலைவாய்ப்பு மற்றும் நிறைவான சமூக மற்றும் கலாச்சார வாழ்க்கை ஆகியவற்றிற்கான மாற்றுத் திட்டங்களை இளைஞர்களுக்கு வழங்குவது இன்றியமையாததாகும். அத்தகைய அரசியல் மேடையை முன்வைக்கும் அதே வேளையில், சமூகத்தில் ஒரு அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தவல்ல, சோசலிச லட்சியத்தையும் இளைஞர்கள் முன் இடதுசாரிகள் வைக்க வேண்டும்.

## தலித்துகள்: தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகும் நிலைமைகள்

2.55 ஆர்.எஸ்.எஸ்-பா.ஜ.க.-இந்துத்துவ சக்திகள் சனாதன தர்மம் என்ற போர்வையில் மனுதர்ம கருத்தியல்களை திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றன. சாதிய படிநிலைகளைத் தக்க வைத்துக் கொண்டே சாதிய அடையாளங்களைக் கையாளுவதன் மூலம் தலித்துகளையும் விளிம்புநிலை சாதிகளையும் இந்துத்துவச் சட்டகத்திற்குள் இழுக்க அவர்கள் முயற்சி செய்கிறார்கள். ஒடுக்கப்பட்ட சாதிகளைப் பிளவுபடுத்தவும், அவர்களின் செல்வாக்கைப் பெருக்கவும் உட்சாதி அடையாளங்களை கெடு நோக்கோடு பயன்படுத்துகின்றனர். ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த சமூகங்களை வகுப்புவாத அடிப்படையில் சிறுபான்மையினருக்கு எதிராகப் பயன்படுத்தும் முயற்சிகள் அவர்களுடைய சூழ்ச்சிகர உத்தியின் உள்ளார்ந்த பகுதியாகும். இத்தகைய சூழ்ச்சிகளை எதிர்கொள்வதற்கு சாதிய அமைப்புக்கு எதிராகவும், சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும், சமூக நீதிக்காகவும், சமூக சீர்திருத்தத்தை பின்னோக்கி இழுத்துச் செல்வதைத் தடுப்பதற்காகவும் பெரும் அணிதிரட்டல் அவசியமாகும்.

2.56 பாஜக மற்றும் இந்துத்துவா சக்திகளால் உருவாக்கப்பட்ட மனுதர்மக் கோட்பாட்டுச் சூழலில் சாதி அடிப்படையிலான வன்கொடுமைகள் அதிகரித்துள்ளன. 2021-2022 இடையிலான காலகட்டத்தில் பட்டியல் சாதியினருக்கு (எஸ்சி) எதிரான குற்றங்கள் 13 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக என்.சி.ஆர்.பி (தேசிய குற்ற ஆவணக் காப்பகம்) தரவு

சுட்டிக்காட்டுகிறது. உத்தரபிரதேசம் 26 சதவிகித வழக்குகளுடன் முன்னணியில் உள்ளது, ராஜஸ்தான் (15 சதவிகிதம்) மற்றும் மத்தியப் பிரதேசம் (14 சதவிகிதம்).

2.57 மோடி அரசாங்கத்தின் கீழ் தனியார்மயமாக்கலின் விரைவு, தனியார் துறையில் இடஒதுக்கீடு இல்லாதது மற்றும் வேலைவாய்ப்பில் முறைசாரா தன்மை ஆகியவை இடஒதுக்கீட்டிற்கான அரசியலமைப்பு கடமையை பலவீனப்படுத்தியுள்ளன. 2022 ஆம் ஆண்டு நிலவரப்படி, எஸ்.சி பிரிவினரின் வேலையின்மை விகிதம் 8.4 சதவிகிதமாக உள்ளது. எஸ்.சி பிரிவினரில் 84 சதவீதம் முறைசாரா வேலைவாய்ப்பிலும் உள்ளனர், இதுவே பிற சமூகக் குழுக்களோடு ஒப்பிடுகையில் மிக அதிகம். மோடி அரசாங்கம் சிறப்பு உட்கூறு திட்டத்தைக் கைவிட்டுவிட்டது, 2019 – 2024 க்கு இடையில் மத்திய திட்ட நிதியில் 10.6 சதவிகிதத்தை மட்டுமே எஸ்.சி., பிரிவு மக்களுக்கு ஒதுக்கியது, இது கட்டாயமாக்கப்பட்ட 15 சதவீதத்தைவிட மிகக் குறைவு. இதில், 3.3 சதவிகிதம் மட்டுமே இலக்கு திட்டங்களுக்கு சென்றது, அதில் 80 சதவிகிதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. ஒட்டுமொத்தமாக, இந்தக் காலகட்டத்தில் தலித்துகளின் சமூகப் பொருளாதார நிலைமைகள் மேலும் சீர்குலைந்துள்ளன.

## ஆதிவாசிகள் மீது தாக்குதல்

2.58 பாஜக அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையைப் பயன்படுத்தி திருத்தங்களைக் கொண்டு வந்த பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகள், ஆதிவாசிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அரை குறைப் பாதுகாப்பு அம்சங்களைக் கூட கடுமையாக பாதித்துள்ளது, மிக முக்கியமாக, சுய நிர்ணய உரிமையை பாதித்துள்ளது. வனப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் அதன் விதிகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், கிராம சபை என்ற சொல்லையே நீக்கியது; வன உரிமைகள் சட்டம், சுரங்கம் மற்றும் கனிம மேம்பாட்டுச் சட்டங்களின் விதிகளில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள், தாங்கள் வசிக்கும் பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு ஆதிவாசி மக்களின் சுதந்திரமான, தகவல் தெரிவித்து பெறப்பட்ட ஒப்புதல் அவசியம் என்கிற கட்டாயத் தேவையை நீக்கியது ஆகியவை இதில் அடங்கும்; கிராம சபையின் ஒப்புதல் இல்லாமல் சுரங்க ஆய்வு என்ற பெயரில் சுரங்க நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும் திருத்தங்கள்; ஆதிவாசிகள் அனுபவத்தில் உள்ள நிலங்களை கையகப்படுத்துவதற்காக, நிலக் கொள்கைகளை நீர்த்துப்போகச் செய்கிற, மீறுகிற திருத்தங்கள் போன்றவை இவற்றில் ஒரு சில. ஆதிவாசிகளுடைய நிலத்தைப் பாதுகாக்கும் அரசியலமைப்பின் ஐந்தாவது மற்றும் ஆறாவது அட்டவணைகள் மற்றும் ஞநுளுஹ போன்ற தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் விதிகளை அப்பட்டமாக மீறுவதைத் தாண்டி, இது கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு, ஜல், ஜங்கல், ஜமீன் (நீர், வனம், நிலம்) மீதான ஆதிவாசிகளுடைய முதற்படியான, அடிப்படையான உரிமை கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகிறது. இந்தக் கொள்கைகள் காரணமாக ஏராளமான ஆதிவாசிகள் இடப்பெயர்வை எதிர்கொள்கின்றனர். நாட்டின் இயற்கை வளத்தின் பெரும்பகுதி ஆதிவாசிகள் வசிக்கும் பகுதிகளில் இருப்பதால், இந்த பகுதிகளில் ஆதிவாசி உரிமைகளை உத்தரவாதம் செய்யும் சட்டங்களில் உள்ள எந்தவொரு விதிகளும் கார்ப்பரேட்டுகளின் நலன்களைக் கடுமையாகப் பாதிக்கின்றன. அந்த அடிப்படையில், இது கார்ப்பரேட்டுகள் – ஆதிவாசிகள் இடையிலானது, இதில் அரசாங்கம் தெளிவாக கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவாக நிற்கிறது.

2.59 பாதுகாப்பு, சுரங்கம், மின்சாரம், நீர்ப்பாசனம் போன்ற பல முக்கிய மற்றும் கேந்திரமான துறைகளில் தனியார்மயமாக்கல் காரணமாக, சக்திவாய்ந்த, நேர்மையற்ற, ஒழுங்குபடுத்தப்படாத தனியார் நிறுவனங்கள் பல்வேறு திட்டங்களுடன் ஆதிவாசி மக்களுடைய பகுதிகளுக்கு வருகின்றன. பல ஆதிவாசி பகுதிகளில், தனியார் சந்தையாளர்களால் சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் அரசாங்கங்கள் சுற்றுலா ஓய்வு விடுதிகளை ஊக்குவிக்கின்றன. தனியார்மயமாக்கல் கொள்கைகள் நிலம் கையகப்படுத்துவதை நியாயப்படுத்துவதற்காக, “பொது நல நோக்கம்” என்ற

கருத்தாக்கத்தை வெளிப்படையான கார்ப்பரேட் நிறுவன நோக்கக் கொள்கையாக மாற்றியுள்ளன. மேலும், தனியார்மயமாக்கல் கொள்கையானது கட்டுப்பாடுகளை தளர்த்துவதுடன் இணைந்துள்ளதால், இது வேலைவாய்ப்புகளில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது, ஏனெனில் தனியார் நிறுவனங்கள் முன்பு கடைப்பிடித்ததைப் போல, திட்டத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு உத்தரவாதம் அளிப்பதில்லை. இவ்வாறு, தனியார் நிறுவனங்களின் புதிய சுரங்கம் மற்றும் பிற திட்டங்களில், பழங்குடி நிலம் மற்றும் வன இழப்பீட்டு தொகுப்புகளுக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இந்த நிறுவனங்களாலேயே தீர்மானிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. சுரங்க நடவடிக்கைகளுக்கு மட்டும், 2019 முதல் மார்ச் 2024 வரை 18,922 ஹெக்டேர் வன நிலம் மடைமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2.60 தனியார்மயக் கொள்கைகள் காரணமாக, கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இது அதிகரித்து வரும் இடஒதுக்கீடு நிலுவைக் காலிப்பணியிடங்கள் தவிர்த்த கூடுதல் பாதிப்பு ஆகும்.. மத்திய அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களில் எஸ்.டி., பிரிவு ஊழியர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியை சமீபத்திய தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. பொதுத்துறையில், எஸ்.டி., பிரிவினருக்கு ஒதுக்கப்பட்ட 25,000 வேலைவாய்ப்புகள் ஒழிக்கப்பட்டுள்ளன; பள்ளிக் கல்வியில், 2018ல் இருந்ததை விட, 35,000 எஸ்.டி., பிரிவு ஆசிரியர்கள் குறைவு. அனைத்து ஒப்பந்த அல்லது அவுட்சோர்சிங் பணிகளுக்கும் இடஒதுக்கீட்டை நீட்டிப்பதற்கு ஒன்றிய அரசு மறுத்துவிட்டது.

## மாற்றுத்திறனாளிகள் தொடர்ந்து அவதிப்படுகின்றனர்

2.61 நவீன தாராளமயக் கொள்கைகள் உடல் குறைபாடுகள் உடைய மக்களை, ஏற்கெனவே உள்ள துயரகரமான வாழ்நிலைமையை மேலும் பாதிக்கிற விளைவை ஏற்படுத்தியுள்ளன. ஒருங்கிணைக்கும் துறை மற்றும் மனநலத் துறைக்கான நிதி ஒதுக்கீடானது, கடந்த பல ஆண்டுகளாக ஏறத்தாழ தேக்க நிலையில் உள்ளது மட்டுமின்றி, ஒதுக்கப்பட்ட நிதியும் குறைவாகவே பயன்படுத்தப்படுகிறது. இது உரிமைகள் அடிப்படையிலான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அமல்படுத்துவதில் கடுமையான தடையை ஏற்படுத்துகிறது.

## சுற்றுச்சூழல் பேரழிவை நோக்கி செல்கிறது

2.62 அடுத்தடுத்த பாஜக தலைமையிலான அரசாங்கங்களின் கீழ், இந்தியாவின் சுற்றுச்சூழல் மற்றும் தொடர்புடைய மக்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன. கூட்டுக்களவு முதலாளிகளும், பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்கள் உள்ளிட்ட பெரு நிறுவனங்களும், சுரங்கப் பணிகள், அகழ்வாராய்ச்சி மற்றும் பிரித்தெடுக்கும் பணிகள், உட்கட்டமைப்பு மற்றும் வணிக நடவடிக்கைகளை, வனங்கள் மற்றும் வன உயிரின வாழ்விடங்கள் உள்ளிட்ட சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் விரிவுபடுத்தி, சுற்றுச்சூழல் அமைப்புகளை சேதப்படுத்துவதுடன், பழங்குடியினர், வனத்தில் வசிப்பவர்கள் மற்றும் இயற்கை வளங்களை நம்பியுள்ள மற்றவர்களின் வாழ்க்கை, வாழ்விடங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை சேதப்படுத்துகின்றன. வனவிலங்குகளின் வாழ்விடங்கள் சுருங்குவதால் மனிதர்கள்–வனவிலங்குகளுக்கு இடையிலான மோதல்கள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய மோதல்களைத் தணிப்பதற்கான நடவடிக்கைகள் திட்டமிட்ட மற்றும் முழுமையான முறையில் செய்யப்படுவதில்லை. “எளிதாக வர்த்தகம் செய்யும்” கொள்கையை பாஜக பின்பற்றுவது என்பது, சுற்றுச்சூழல் நெறிமுறைகளை அகற்றுதல், இதுவரை பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் திட்டங்களை அனுமதித்தல் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புக்கள் மற்றும் இயங்குமுறைகளை பலவீனப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. தரமான காடுகள் பெரிய அளவில் இழக்கப்பட்டு வருகின்றன, இதை அரசாங்கம் தவறான மற்றும் தவறாக சித்தரிக்கப்பட்ட தரவுகள் மூலம் மறைக்கிறது. வளர்ச்சி மற்றும் சுற்றுலா என்ற பெயரில் பலவீனமான மேற்கு மற்றும் கிழக்கு இமயமலைப் பகுதிகளில் பிரம்மாண்ட உட்கட்டமைப்புகள், புனல் மின்சாரம் மற்றும் சாலைத் திட்டங்கள்

தீவிர மழைப்பொழிவு போன்ற காலநிலை தாக்கங்களை மோசமாக்கி, மேலும் இந்தப் பிராந்தியங்களை நிலச்சரிவுகள், நகரங்கள் மூழ்குதல் மற்றும் தொடர்ச்சியான வெள்ளம் ஆகியவற்றால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளாக ஆக்கியுள்ளன, இது ஒவ்வொரு ஆண்டும் அதிக உயிர் மற்றும் வாழ்வாதார இழப்புகளுக்கு வழிவகுக்கிறது. திட்டமிடப்படாத நகரமயமாக்கல் சுற்றுச்சூழல் பிரச்சனைகளை அதிகரித்துள்ளது.

2.63 காலநிலை மாற்ற தாக்கங்கள் நாடு முழுவதும் மக்களுக்கும் உள்கட்டமைப்புக்கும் பெரும் தீங்கு விளைவிக்கின்றன, இதன் விளைவாக சுகாதாரத்திற்கு சேதம் மற்றும் மீண்டும் மீண்டும் பெரிய அளவிலான பொருளாதார இழப்புகள் ஏற்படுகின்றன. இந்தியா மிகவும் தீவிரமான மற்றும் நீண்ட கால வெப்ப அலைகளை அனுபவித்து வருகிறது. கட்டுமானம் மற்றும் பிற வெளிப்புற தொழிலாளர்கள், சாலையோர வியாபாரிகள், பண்ணை தொழிலாளர்கள், வீட்டு உதவியாளர்கள், கிக் தொழிலாளர்கள் மற்றும் முறைசாரா குடியிருப்புகளில் வசிப்பவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் உள்ள பொது சுகாதார அமைப்புகள் தேவையான உதவிகளை வழங்க தயாராக இல்லை மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் சிந்திக்கப்படவில்லை. கான்கிரீட் செய்யப்பட்ட நகர்ப்புற உள்கட்டமைப்பின் வெப்ப-பொறி விளைவுகளால் நகர்ப்புறங்கள் மோசமாக பாதிக்கப்படுகின்றன. அதீத மழைப்பொழிவு, பொருந்தாத வடிகால் அமைப்புகள் மற்றும் தாறுமாறான நகரமயமாக்கல் ஆகியவற்றால் நகர்ப்புற வெள்ளப்பெருக்கு, பெருநகரங்களில் கூட ஒவ்வொரு ஆண்டும் ஏற்படுகிறது, இதனால் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது. ஒன்றிய அரசின் அதிகப்படியான நிதி மையப்படுத்தல் காரணமாக மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் இந்த பிரச்சனைகளை சமாளிக்க இயலா நிதி பற்றாக்குறையில் உள்ளன.

## போராட்டங்களும் எதிர்ப்புகளும்

2.64 சம்யுக்த கிசான் மோர்ச்சா (எஸ்.கே.எம்) மற்றும் மத்திய தொழிற்சங்கங்கள் இணைந்து தில்லியில் ஏற்பாடு செய்த, ஆகஸ்ட் 24, 2023 தொழிலாளர் – –விவசாயிகளின் நாடுதழுவிய மாநாடு, கண்ணூர் காங்கிரஸுக்குப் பின்னர் எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க முன்முயற்சியாகும். இந்த மாநாட்டில் இந்திய தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் கூட்டு கோரிக்கை சாசனம் நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாட்டின் அழைப்பின் படி, 2023 நவம்பர் 26 முதல் 28 வரை மூன்று நாட்கள் அனைத்து மாநிலத் தலைநகரங்களிலும் நடைபெற்ற போராட்டத்தில் லட்சக்கணக்கான தொழிலாளர்களும் விவசாயிகளும் பங்கேற்றனர். பிப்ரவரி 16, 2024 அன்று, மத்திய தொழிற்சங்கங்கள் நாடு தழுவிய துறை/ஆலை வேலைநிறுத்தத்திற்குஅழைப்பு விடுத்தது. இந்த போராட்டத்திற்கு ஆதரவாக எஸ்.கே.எம் ஊரக முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்தது. மார்ச் 14, 2024 அன்று, எஸ்.கே.எம் நாடுதழுவிய விவசாயிகள் பேரணியை நடத்தியது. மீண்டும், நவம்பர் 26, 2024 அன்று, எஸ்.கே.எம் மற்றும் மத்திய தொழிற்சங்கங்கள் இணைந்து நாடு முழுவதும் மாவட்ட அளவில் கூட்டுப் போராட்டங்களை நடத்தின.

2.65 தொழிலாளர்–விவசாயிகளின் விரிவான ஒன்றுபட்ட கூட்டு முயற்சியுடன் தொழிற்சங்கங்கள், விவசாய சங்கங்கள், விவசாய தொழிலாளர் சங்கங்கள் பல கூட்டு நடவடிக்கைகளில் சிறப்பாக இணைந்து செயல்பட்டு வருகின்றன. 2022 ஆம் ஆண்டிலும் அதன் பிறகும் அவர்கள் பல ஆயிரக்கணக்கான மக்களைத் திரட்டி, விரிவான கூட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இதில் செப்டம்பர் 5, 2022 தில்லியில் நடந்த தேசிய கூட்டு மாநாடு, ஏப்ரல் 5, 2023 தில்லியில் நடைபெற்ற பேரணி, ஆகஸ்ட் 9-14 வரையில் மாநில அளவில் நடந்த மாநாடுகளும் மற்ற நடவடிக்கைகளும் அடங்கும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டு நடவடிக்கைகள் அனைத்தும் தொழிலாளர் – விவசாயி ஒற்றுமையை ஊக்குவிக்க உதவியாக அமைந்தன.

2.66 இக்காலகட்டத்தில் பல தொழிற்சங்கப் போராட்டங்கள் நடைபெற்றன. தமிழ்நாட்டில்

தொழிற்சங்கம் அமைக்கவும், அதற்கு அங்கீகாரம் பெறவும் உரிமை கோரி சாம்சங் தொழிலாளர்கள் 37 நாட்கள் நடத்திய போராட்டம் வெற்றியில் முடிந்தது. மின்சார விநியோகத்தை தனியார்மயமாக்குவதை எதிர்த்து உத்தரப்பிரதேசம், ஹரியானா, மகாராஷ்டிரா, ஜம்மு – காஷ்மீர், சண்டிகர் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மின்சாரத் தொழிலாளர்களும்,ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். அவை ஓரளவு வெற்றி பெற்றன. அங்கன்வாடி, ஆஷா, மதிய உணவு திட்டப் பணியாளர்களின் நீடித்த போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள், மாபெரும் பேரணிகள் பல மாநிலங்களில் நடந்தன, அவற்றில் பல ஓரளவு வெற்றியைப் பெற்றன. வங்கி, இன்சூரன்ஸ், ஒன்றிய, மாநில அரசு, தபால், நிலக்கரி, தொலைத் தொடர்புத் துறைகளிலும், மருத்துவப் பிரதிநிதிகளிடையேயும் வேலை நிறுத்தங்களும் போராட்டங்களும் நடைபெற்றன.

2.67 விவசாய சங்கங்கள் பயிர் வகை அடிப்படையிலான போராட்டங்களும், கொள்முதல் மையங்களுக்கான போராட்டங்கள், பயிர் காப்பீடு, நில உரிமைகள், வன உரிமைகள் மற்றும் வன விலங்குகளின் அச்சுறுத்தலுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்தன. ரப்பர் விவசாயிகளுக்கு ஆதரவாக டயர் கார்ட்டலுக்கு எதிராக அரசியல் ரீதியிலும்,சட்டப் போராட்டமும் நடந்து வருகிறது. தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், ஊதியம், நிலம், வீட்டுவசதி மற்றும் சாதி பாகுபாடு போன்ற பிரச்சனைகளை முன்வைத்து விவசாயத் தொழிலாளர்களின் முன்னணி பல போராட்டங்களை நடத்தியது. அக்டோபர் 11, 2023 அன்று, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மீதான பாஜக ஒன்றிய அரசு முன்னெடுக்கும் கொள்கை அடிப்படையிலான தாக்குதல்களைக் கண்டித்த அகில இந்திய எதிர்ப்பு தினத்தில் லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் பங்கேற்றனர். விலைவாசி உயர்வு, பொது விநியோக முறையை வலுப்படுத்துதல், பெண்களுக்கு எதிராக அதிகரித்து வரும் குற்றங்களுக்கும், வன்முறைகளுக்கு எதிராக பல போராட்டங்களை மாதர் அரங்கம் நடத்தியது. அக்டோபர் 5, 2023 அன்று, தில்லியில் ஆயிரக்கணக்கான பெண்கள் பங்கேற்ற நாடு தழுவிய பேரணி நடைபெற்றது. தேசிய கல்விக் கொள்கை, கல்வியை வணிகமயமாக்குதல், கட்டண உயர்வு, பள்ளிகளை மூடுதல் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டங்களில் மாணவர் அரங்கம் முன்னணியில் உள்ளது. இந்திய மாணவர் ஒருங்கிணைப்பு என்ற கூட்டு மேடை உருவாக்கப்பட்டது. அது தில்லி, சென்னை, கொல்கத்தா ஆகிய நகரங்களில் பெரிய பேரணிகளை நடத்தியது. வேலையின்மை, அக்னிவீர் திட்டம் மற்றும் பிற பிரச்சனைகளில் இளைஞர் அமைப்பு தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

2.68 மேற்கு வங்கத்தில் ஆர்.ஜி.கர் மருத்துவமனையில் பயிற்சி பெண் மருத்துவர் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதற்கு எதிரான போராட்டம்; தெலுங்கானாவில் வீட்டு மனைகளுக்கான உள்ளூர் போராட்டங்கள்; பீகாரில் நிலப் போராட்டங்கள்; விசாகப்பட்டினம் எஃகு ஆலை தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்தல்,புனரமைப்பு கோருதல், ஆந்திராவில் போலாவரம் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள்; ராஜஸ்தானில் பயிர் காப்பீட்டுக்காகவும்; ஜார்க்கண்டில் இடப்பெயர்ச்சிக்கு எதிராகவும்; வன நிலங்களை ஆதிவாசிகளின் பெயரில் ஒப்படைக்க கோரியும் ; மற்றும் தமிழ்நாட்டில் வீட்டு மனைகளுக்கு பட்டாக்கள் ஆகிய போராட்டங்கள் இந்த காலகட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்களை அணிதிரட்டிய சில பெரிய, நீடித்த போராட்டங்களில் அடங்கும்.

## அரசியல் கட்சிகளின் நிலை குறித்து

2.69 **பா.ஜ.க:** பாசிசத் தன்மை கொண்ட ஆர்.எஸ்.எஸ்சின் அரசியல் முன்னணியாக உள்ள பா.ஜ.க, கடந்த பத்து ஆண்டுகளில், பிரதான அரசியல் கட்சியாக உருவெடுத்துள்ளது. அது பெருமுதலாளி – நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் முதன்மையான பிரதிநிதியாகி அந்த வர்க்கங்களின் ஆதரவை குறிப்பாக பெரும் கார்ப்பரேட்டுகளின் ஆதரவை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது. இந்துத்துவ சித்தாந்தத்தின் செல்வாக்கும், கார்ப்பரேட் கூட்டணியும் இணைந்து முன்னெப்போதும் காணாத பணபலத்தையும், ஊடக பலத்தையும்

பயன்படுத்திக் கொண்டு தனது வலதுசாரி தலத்தை பாஜக வலுப்படுத்திக் கொண்டுள்ளது.

2.70 மொத்தத்தில், தேர்தல்களை எதிர்கொள்வதற்கு பாஜக மும்முனை உத்தியைக் கடைப்பிடித்து வருகிறது: (அ) ஒரே-இந்து அடையாளத்தை பலப்படுத்தவும், பிரிவினையை வேகப்படுத்தவும் இந்துத்துவா பிரச்சனைகளை மூர்க்கமாக முன்னெடுத்தல் (ஆ) தேர்தல் ஆதாயங்களுக்காக சாதி, துணைச் சாதி கூட்டுக்களை உருவாக்குதல் இ) அரசு நிதியில், நேரடி பணம் பட்டுவாடா திட்டங்களைக் கொண்டு பயனாளர்களை உருவாக்குதல். கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற மாநில சட்டமன்றத் தேர்தல்களில், ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசாங்கங்களை வெளியேற்றிவிட்டு, பாஜக ஆட்சியை கைப்பற்ற முடிந்தது. சட்டமன்றத் தேர்தலில் தீர்மானகரமான வெற்றிக்கு பின் மத்தியப் பிரதேச அரசாங்கத்தை அது தக்க வைத்துக் கொண்டது . அதன் அரசாங்கங்கள் இருந்த கர்நாடகா மற்றும் இமாச்சலப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தல்களில் பாஜக தோல்வியடைந்தது. மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு ஜம்மு-காஷ்மீர் மற்றும் ஜார்க்கண்ட் சட்டமன்றத் தேர்தல்களிலும் தோல்வியடைந்தது.

2.71 நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் பாஜக 240 இடங்களை மட்டுமே பெற்று பின்னடைவை சந்தித்தது. எனினும், இந்த தோல்வியை சரியான முறையில் பார்க்க வேண்டும். பாஜகவுக்கு 2019 தேர்தலில் இருந்த வாக்கு விகிதத்தில் 1.1 சதவிகிதம் மட்டுமே குறைந்துள்ளது. ஒடிசா போன்ற மாநிலங்களில் பாஜக புதிய வெற்றிகளை பெற்றது. அங்கு அது மக்களவைத் தேர்தலில் வெற்றிப்பெற்றதுடன் (21 இடங்களில் 20 இடங்களை வென்றது) முதல் முறையாக மாநில சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்தது. முக்கியமாக தென் மாநிலங்களில் அக்கட்சி தனது வாக்கு சதவீதத்தை அதிகரித்ததன் மூலம் ஆதாயம் அடைந்தது. மக்களவைத் தேர்தலுக்குப் பிந்தைய காலகட்டத்தில் ஹரியானாவில் பாஜகவின் வெற்றியும், மகாராஷ்டிராவில் பாஜக தலைமையிலான கூட்டணியின் வெற்றியும், நாடாளுமன்றத் தேர்தலின் போது ஏற்பட்ட இழப்புகளை கடந்து பாஜகவினால் மீண்டும் ஒருங்கிணைக்கவும் மீட்டெடுக்கவும் முடிந்திருப்பதை காட்டுகிறது.

2.72 பாஜக ஒரு அரசியல் கட்சியாக செயல்படுவதற்கு ஆர்.எஸ்.எஸ் அடித்தளத்தை வழங்குகிறது, மேலும் இந்த காலகட்டத்தில் தாய் அமைப்புக்கும் அதன் அரசியல் முன்னணிக்கும் இடையிலான ஒருங்கிணைப்பும், கூட்டுச் செயல்பாடுகளும் வலுப்படுத்தப்பட்டுள்ளன. மோடி-ஷா இரட்டையர் மேலாதிக்கம் தொடர்கிறது. கட்சி அமைப்பின் அனைத்து அதிகாரங்களும் அவர்களிடம் குவிந்துள்ளன.

2.73 **காங்கிரஸ்:** காங்கிரஸ் கட்சி மக்களவையில் தனது பலத்தை 44ல் இருந்து 100 ஆக உயர்த்த முடிந்தது, இந்தியா அணிச்சேர்க்கை மூலம் அது பயனடைந்தது. நாடு முழுவதும் முஸ்லிம் சிறுபான்மையினரின் ஆதரவை கணிசமான அளவில் பெற முடிந்தது. காங்கிரசின் அடித்தளம் அதிகம் விரிவடையவில்லை. ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ஹரியானா ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் படுதோல்வி அடைந்துள்ளது. பஞ்சாப், ஒடிசா மற்றும் அசாம் போன்ற மாநிலங்களில், கணிசமாக பலவீனமடைந்துள்ளது. கர்நாடகா மற்றும் தெலுங்கானா சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததன் மூலம் தெற்கில் மட்டுமே காங்கிரஸ் பலன் அடைந்துள்ளது.

2.74 காங்கிரஸ் தனது பொருளாதாரக் கொள்கை திசையை மாற்றிக் கொள்ளவில்லை. அது கூட்டுக்களவு முதலாளித்துவத்திற்கு எதிராகப் பேசினாலும், அத்தகையவர்களை உருவாக்குகிற அதே நவீன-தாராளமய கொள்கைகளையே கடைப்பிடிக்கிறது. காங்கிரசின் தேசியத் தலைமை இந்துத்துவ நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக மிகவும் வெளிப்படையான நிலைப்பாட்டை எடுத்தாலும், பாஜக மற்றும் அதன் இந்துத்துவ கூட்டாளிகளுடைய மூர்க்கமான தாக்குதல்களை எதிர்கொள்ளும் விசயத்தில் ஊசலாட்டங்களும் சமரச

போக்கும் இன்னும் காணப்படுகின்றன. காங்கிரஸ் கட்சியும், பாஜகவின் அதே வர்க்க நலன்களைத்தான் பிரதிபலிக்கின்றன. இருப்பினும், முக்கிய மதச்சார்பற்ற எதிர்க்கட்சியாக இருப்பதால், பாஜகவுக்கு எதிரான போராட்டத்திலும், மதச்சார்பற்ற சக்திகளுடைய பரந்த ஒற்றுமையிலும் அது பங்களிக்கும் நிலையில் உள்ளது. மதச்சார்பற்ற சக்திகளின் பரந்த ஒற்றுமைக்கான தேவையை மனதில் கொண்டே காங்கிரசின் மீதான சி.பி.ஐ(எம்) அணுகுமுறை தீர்மானிக்கப்படுகிறது. இருப்பினும், நமது கட்சி காங்கிரசுடன் அரசியல் கூட்டணி வைக்க முடியாது.

2.75 **பிராந்திய கட்சிகள்:** பிராந்திய கட்சிகளை மூன்று வகைகளாக பிரிக்கலாம். முதலாவது, பாஜகவை தொடர்ந்து எதிர்த்துவரும் கட்சிகள். அவை திமுக, சமாஜ்வாதி, ராஷ்ட்ரீய ஜனதா தளம், தேசியவாத காங்கிரஸ், ஆம் ஆத்மி, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா போன்ற கட்சிகள். இரண்டாவதாக, பாஜகவுடன் கூட்டணி வைத்து தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள ஐக்கிய ஜனதா தளம், தெலுங்கு தேசம், ஜே.டி (எஸ்), ஏஜிபி, ஜன சேனா மற்றும் சில சிறிய கட்சிகள். மாநிலங்களில் ஆட்சியில் இருந்தபோது பாஜகவையோ அல்லது ஒன்றிய அரசையோ எதிர்க்காத கட்சிகளான பிஜு ஜனதா தளம், அதிமுக, ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் போன்றவை மூன்றாவது வகைக் கட்சிகள். பி.ஆர்.எஸ் தொடக்கத்தில் ஒன்றிய அரசுக்கு ஆதரவளித்து வந்தது. ஆனால் தெலுங்கானாவில் பாஜகவின் அச்சுறுத்தலை உணர்ந்ததால் பின்னர் மாறியது. சமீபத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு இந்த மூன்று கட்சிகளும் தங்கள் அரசாங்கங்களை இழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

2.76 மேற்கு வங்கத்தில் உள்ள திரிணாமுல் காங்கிரஸ் கட்சி, கிரிமினல்-ஊழல்-அரசியல் கூட்டணியை அடிப்படையாகக் கொண்ட எதேச்சதிகாரமான கட்சி. கம்யூனிச எதிர்ப்புக் கொள்கையை கடுமையாகக் கடைப்பிடிக்கிறது. திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் பாஜக இடையில் இரு துருவ அரசியலை நிலை நாட்டுவதன் மூலம் சி.பி.ஐ(எம்) மற்றும் இடதுசாரிகளை ஓரங்கட்டுவதற்காக – பாஜகவிற்கு எதிரான தேர்தல் அரசியலை செய்கிறது.

2.77 இப்போது உருவாக்கப்பட்டுள்ள பரந்த அளவிலான எதிர்க் கட்சி ஒற்றுமையில், பாஜகவை எதிர்க்கும் பிராந்திய கட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன, வரும் நாட்களிலும் அந்த பங்கை தொடர்ந்து அக்கட்சிகள் ஆற்றும்.

2.78 ஜமாத்-இ-இஸ்லாமி மற்றும் எஸ்.டி.பி.ஐ (பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியாவின் அரசியல் பிரிவு) போன்ற முஸ்லீம் அடிப்படைவாத,தீவிரவாத அமைப்புகள் முஸ்லீம் மக்களிடையே தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்த வேலை செய்து வருகின்றன. இந்துத்துவ சக்திகளின் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு ஆளாகும் சிறுபான்மை சமூகம் அந்நியப்படுவதையும், அச்சம் கொள்வதையும் அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முயல்கின்றனர். கேரளாவில், சிறுபான்மையினர் மத்தியில் சி.பி.ஐ(எம்) செல்வாக்கை கட்டுப்படுத்த நமது கட்சியை குறி வைக்கிறார்கள். சிறுபான்மை வகுப்புவாதத்தை அதிகாரத்தில் இருக்கும் இந்துத்துவ வகுப்புவாத சக்திகளுடன் சமப்படுத்த முடியாது என்றாலும், தீவிர சிறுபான்மை மதவாத நடவடிக்கைகள் பெரும்பான்மை வகுப்புவாத சக்திகளை வலுப்படுத்துகின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இடதுசாரி, ஜனநாயக சக்திகள் சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதியாக பாதுகாத்து அவர்களை மதச்சார்பற்ற தளத்தில் அணிதிரட்டி அடிப்படைவாத சக்திகளை முறியடிக்க வேண்டும்.

## இந்துத்துவாவை எதிர்கொள்ள

2.79 இந்துத்துவாவையும், ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளின் பல்வேறு செயல்பாடுகளையும், செல்வாக்கையும் எதிர்கொள்வதற்கு, நமது கட்சி அரசியல், கருத்தியல், பண்பாடு, பொருளாதார மற்றும் சமூக தளங்களில் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராக வேண்டும். பாஜக-ஆர்எஸ்எஸ்-ஐ தேர்தல் போராட்டங்கள் மூலம் மட்டுமே தனிமைப்படுத்தவோ தோற்கடிக்கவோ முடியாது என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் இந்துத்துவ சக்திகள் தம்முடைய கருத்தியல் செல்வாக்குத்

தளத்தை கணிசமாக விரிவாக்கியுள்ளனர் என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு, இந்துத்துவாவை எதிர்கொள்ள விரிவான திட்டம் அவசியமாகும்.

2.80 இதற்காக, கட்சியும் வெகுஜன அமைப்புகளும் பின்வரும் பணிகளைச் செய்ய வேண்டும்:

அ) இந்துத்துவ சக்திகளின் தீய பிரச்சாரத்தையும், செயல்பாடுகளையும் அம்பலப்படுத்தக்கூடிய வகையில் பல் ஊடக (மல்ட்டி மீடியா) பிரச்சாரத்திற்கு பயன்படும் உள்ளடக்கங்களை உருவாக்க நமது அனைத்து அறிவு வளங்களையும் ஒருங்கிணைத்து செயல்பட வேண்டும்.

ஆ) பொருளாதாரக் கோரிக்கைகளுக்காகவும், மக்கள் பிரச்சனைகளுக்காவும் கட்டமைக்கப் படும் பிரச்சாரங்களிலும், போராட்டங்களிலும் இந்துத்துவ எதிர்ப்பு பிரச்சாரத்தையும், போராட்டங்களையும் ஒருங்கிணைக்க வேண்டும்.

இ) உழைக்கும் வர்க்கங்களிடமும், தொழிலாளி வர்க்க குடியிருப்பு பகுதிகளிலும் கட்சியும் தொழிற்சங்கங்களும் சமூக, பண்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் வகுப்புவாத எதிர்ப்புப் பணிகளை ஒழுங்கமைப்பதில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

ஈ) வரலாற்றை திருத்தவும், கல்வி முறைமையில் வகுப்புவாத அம்சங்களை திணிக்கவும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை எதிர்க்கவேண்டும்.

உ) அரசியல் நோக்கங்களுக்காக மதத்தை தவறாக பயன்படுத்துவதற்கும், மத நம்பிக்கைக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குவதற்கு, மத நம்பிக்கையாளர்களின் மத்தியில் வேலை செய்ய வேண்டும். திருவிழாக்கள், சமூகக் கூட்டங்கள் போன்றவற்றில் தலையீடு செய்து, அவற்றை வகுப்புவாத மயமாக்குவதை தடுக்க வேண்டும்.

ஊ) சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், மக்கள் அறிவியல் இயக்கங்களை ஊக்குவிப்பதும், மனுவாத – மூடநம்பிக்கை கருத்தாக்கங்களை எதிர்கொள்ளும் விதத்தில் மதச்சார்பற்ற, அறிவியல் சிந்தனையை முன்னெடுப்பதுடன், விரிவான பண்பாட்டு நடவடிக்கைகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பலத்தை அதிகரிக்க

2.81– 18ஆவது மக்களவைத் தேர்தல் முடிவுகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சுயேச்சையான பலத்தை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசரத் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டியிருக்கிறது. கட்சியின் வெகுஜன அடித்தளமும் செல்வாக்கும் வளரவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் காட்டியுள்ள நிலையில், இதை அடைய, பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்:

(1) நம்முடைய அடிப்படை வர்க்கங்களுக்கு இடையே கட்சியின் வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். கிராமப்புற பணக்காரர்கள் இடையே உள்ள கூட்டின் சுரண்டல் முறைக்கு எதிராக கிராமப்புற ஏழைகளின் போராட்டங்களில் உள்ள பலவீனங்கள் களையப்பட வேண்டும். கிராமப்புற மக்கள் இடையே உள்ள பிரச்சனைகள் மீது போராட்டங்களை எப்படி முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று துல்லியமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உற்பத்தி மற்றும் முக்கியமான தொழில்களில் அணி திரட்டப்பட்ட துறைகளின் தொழிலாளர்கள் மத்தியில் கட்சி தன் செல்வாக்கை விரிவுபடுத்த வேண்டியிருக்கிறது. மேலும் அமைப்புரீதியான தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களை அணிதிரட்டுவதற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கட்சி, தொழிலாளி–விவசாயி ஒற்றுமையை வளர்த்திடவும் மற்றும் அவர்கள் இடையே ஒருங்கிணைந்த முயற்சிகளை வளர்த்திடவும் கவனம் செலுத்த வேண்டும். அடிப்படை வர்க்கங்களுக்கு இடையே இந்துத்துவா எதிர்ப்புப் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும், அந்தப் போராட்டங்களுக்குப் பின்னால் அணிதிரள்பவர்களை அரசியல்மய

மாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(2) கட்சி, சுயேச்சையான அரசியல் பிரச்சாரத்திற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். கட்சியின் அரசியல் செயல்பாடுகளைச் சுற்றி மக்களை அணிதிரட்ட வேண்டும். தேர்தல் புரிந்துணர்வு அல்லது கூட்டணி என்ற பெயரில் நம்முடைய சுயேச்சையான அடையாளத்தையோ அல்லது நம்முடைய சுயேச்சையான நடவடிக்கைகளையோ குறைத்துக்கொள்ளக் கூடாது. ஆர்எஸ்எஸ்/இந்துத்துவா சக்திகளின் சித்தாந்தத்தையும், நடவடிக்கைகளையும் எதிர்த்து தோற்கடிக்கக்கூடிய விதத்தில் நம் சித்தாந்தம் மற்றும் பிரச்சாரத்திற்கு சிறப்புக் கவனம் கொடுத்திட வேண்டும்.

(3) களப் போராட்டங்களுக்காக வெகுஜன மற்றும் வர்க்கப் பிரச்சனைகளை எடுத்துக்கொள்வதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை அடிக்கோடிட்டுக் காட்ட வேண்டும். இதுதொடர்பாக நம்மிடையே காணப்படும் பின்னடைவை சரிசெய்திட வேண்டும். இதனை மையப்படுத்தி ஸ்தலக் குழுக்களையும், கிளைகளையும் உயர் கமிட்டிகள் ஒருங்கிணைத்திட வேண்டும். ஒரே மாதிரியான போராட்ட வடிவங்களுக்குப் பதிலாக, புதுமையான மற்றும் பல்வேறு வடிவங்களில் போராட்டங்களும் இயக்கங்களும் நடத்தப்பட வேண்டும்.

(4) கட்சி, சமூக மற்றும் சாதிய ஒடுக்குமுறை மற்றும் பாலினப் பாகுபாடு முதலான பிரச்சனைகள் மீது நேரடியாக பிரச்சாரங்களை மேற்கொண்டு, போராட்டங்களை நடத்திட வேண்டும். சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள், வர்க்கச் சுரண்டலுக்கு எதிரான போராட்டங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

(5) கட்சியின் அரசியல் மேடையும் கோரிக்கைகளும் இளைஞர்களின் பிரச்சனைகளில் கவனம் செலுத்த வேண்டும். ‘சோசலிசமே மாற்று’ என்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும் விதத்தில் பிரச்சாரம் அமைந்திட வேண்டும்.

(6) மேற்குவங்கம் மற்றும் திரிபுராவில் கட்சி மற்றும் இடதுசாரி இயக்கத்தை மீண்டும் கட்டமைத்தல் மற்றும் விரிவுபடுத்துதல் என்பது, கட்சியின் பலத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு அவசியமாகிறது. மேற்குவங்கத்தில், வெகுஜனப் போராட்டங்கள் மற்றும் இயக்கங்களை நடத்தும் அதே வேளையில், கிராமப்புற ஏழைகளிடையே பணியாற்றுவதற்கும் அவர்களை அணிதிரட்டுவதற்கும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும். வங்கத்தில், திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் பாஜக இரண்டையும் எதிர்க்கும் அதே சமயத்தில், பாஜகவுக்கு எதிரான அரசியல் மற்றும் கருத்தியல் போராட்டத்தில் கட்சி அதிக கவனம் செலுத்த வேண்டும். திரிபுராவில், கட்சி அடிமட்ட அமைப்பை வலுப்படுத்த வேண்டும், மேலும் பழங்குடி மக்களின் சிறப்புத் தேவைகள் மற்றும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் அதே சமயத்தில் உழைக்கும் மக்களை ஒன்றிணைக்கும் ஒரு திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

(7) கேரளா கட்சி வலுவான மக்கள் அடித்தளத்துடன் செயல்படும் மிகப்பெரிய தளமாகும். இடது ஜனநாயக முன்னணி அரசாங்கம் தன்னுடைய இரண்டாவது தொடர்ச்சியான ஆட்சிக்காலத்தில் ஒன்றிய அரசின் விரோத அணுகுமுறைக்கும் மாநிலத்தில் இயங்கும் அனைத்து கம்யூனிஸ்ட் விரோத சக்திகளின் தொடர்ந்த பிரச்சாரங்களையும் எதிர்கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அங்கு மக்களவைத் தேர்தல் முடிவுகள் பாஜக-வை எதிர்த்து முறியடிப்பதில் நம்முடைய அரசியல் மற்றும் சித்தாந்த வேலைகளில் உள்ள பலவீனங்களைக் காட்டியிருக்கின்றன. இவை களையப்பட வேண்டும். இடது ஜனநாயக முன்னணி அரசாங்கம் தீவிரமாக, வறுமையை ஒழிக்கவும், அனைவருக்கும் வீடு வழங்கவும் உறுதிபூண்டுள்ளது. ஒன்றிய அரசாங்கத்தின் பாரபட்சமான அணுகுமுறை காரணமாக மாநிலம் நிதிநெருக்கடியை எதிர்கொண்டபோதிலும், இடது ஜனநாயக முன்னணி அரசாங்கம் ஏழைகள் மற்றும் உழைக்கும் மக்களுக்கான நலத்திட்டங்களுக்கான செலவினங்களுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது.

## இடது ஒற்றுமை

2.82 மக்களவைத் தேர்தலில் பரந்த ஒற்றுமையை உருவாக்குவதில் மும்முரமாக இருந்ததால், இந்த காலகட்டத்தில் ஒன்றுபட்ட இடதுசாரி நடவடிக்கைகளில் ஒரு மந்தநிலை ஏற்பட்டது. காசாவில் இஸ்ரேல் முன்னெடுத்த ஆக்கிரமிப்புப் போருக்கு எதிர்ப்பு தெரிவிக்க இடதுசாரிக் கட்சிகள் இரண்டு முறை கூட்டாக அறைகூவல் விடுத்தன. இடதுசாரிகளின் மாற்றுக் கொள்கைகளை முன்னிறுத்துவதற்கு இடதுசாரிகளின் ஒற்றுமையும், ஒருங்கிணைந்த செயல்பாடுகளுக்கு ஒரு புதிய உந்துதலும் தேவை. தேசிய அரசியலில் இடதுசாரிகளின் தலையீட்டை அதிகரிப்பது மோடி அரசாங்கத்தின் தீயபிளவுவாதக் கொள்கைகளுக்கு எதிராக ஒன்றுபட்ட போராட்டங்களை வலுப்பெறச் செய்யும்.

## இடது ஜனநாயக மாற்று

2.83 முப்பதாண்டுகளுக்கும் மேலாக மத்தியில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் பின்பற்றப்பட்ட நவீனதாராளமய, பெருமுதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ சார்பு கொள்கைகளும், கடந்த பத்தாண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட அபாயகரமான கார்ப்பரேட்-வகுப்புவாத-எதேச்சதிகார வலதுசாரி திருப்பத்திற்கு பின்னரும், தற்போதைய முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ முறைமைக்கு ஒரே உண்மையான மாற்று இடது -ஜனநாயக மாற்றுதான் என்பது தெளிவாகியுள்ளது. தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், கைவினைஞர்கள், சிறு வணிகர்கள், நடுத்தர வர்க்கம், அறிவுஜீவிகளின் நலன்களை பாதுகாக்கக் கூடிய இடது ஜனநாயக முன்னணியை உருவாக்க சி.பி.ஐ(எம்) பாடுபடும். மாற்றுக் கொள்கைகளுக்கான தொடர்ச்சியான வெகுஜன,வர்க்கப் போராட்டங்கள் மூலம் ஒரு வலுவான இடது ஜனநாயக முன்னணி உருவாவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

2.84 இடது ஜனநாயக வேலைத்திட்டம் பின்வரும் கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும்:

***1. அரசியலமைப்பின்படியான ஜனநாயகம், மதச்சார்பின்மை கூட்டாட்சியை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள். இதற்காக:***

☛ மதமும், அரசியலும் கலக்காமல் இருப்பதை அரசியல் சாசன ரீதியாக உறுதி செய்தல்.

☛ஜனநாயக உரிமைகளை, குடிமைச் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தும் அனைத்து அம்சங்களையும், சட்டங்களையும் நீக்குதல்.

☛ மத்திய-மாநில உறவுகளை மறுசீரமைத்தல், வலுவான வகையில் ஜனநாயகத்தை பரவலாக்கல்.

***2. தற்சார்பும், மக்கள் சார்பும் கொண்ட வளர்ச்சிப் பாதை:***

☛ சர்வதேச நிதி மூலதனத்தின் ஓட்டத்தை கடும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல்; சுரங்கங்கள், இயற்கை எண்ணெய் வளங்களை தேசியமயமாக்குதல்; திட்டமிட்ட, சமச்சீரான வளர்ச்சியை எட்டுதல்.

☛ பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்; ஏகபோகங்களைக் கட்டுப்படுத்துதல், பொதுத் துறையின் மேம்பாடு; செல்வ வளங்களை மறுபங்கீடு செய்யும் வகையில் நிதிக்கொள்கை, வரிக் கொள்கைகள்.

☛ முழுமையான நிலச்சீர்திருத்தமும், விவசாய உறவுகளில் ஜனநாயக மாற்றமும்; அனைத்து பயிர்களுக்கும் லாபகரமான குறைந்தபட்ச ஆதரவு விலையை சட்டப்பூர்வமாக வழங்க வேண்டும்; விவசாயிகளை கடனிலிருந்து விடுவிப்பது; விவசாயத் தொழிலாளர்களுக்கான ஊதியம், சமூகப் பாதுகாப்பு தொடர்பான மத்திய சட்டம்; கூட்டுறவுப் பண்ணை உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் வழியாக கூட்டுத்

தலையீட்டின் அடிப்படையில் விவசாயத்தை மேம்படுத்துதல்.

*3. உழைக்கும் மக்களின் உரிமைகள்:*

☛வாழ்வுரிமை, வருமானமிகு வேலைவாய்ப்பு, நியாயமான கூலி, வீட்டுவசதி மற்றும் சமூகப் பாதுகாப்புக்கான உரிமை; இரகசிய வாக்கெடுப்பு மூலம் தொழிற்சங்கங்களை அங்கீகரித்தல்; நிர்வாகத்தில் தொழிலாளர்களின் பிரதிநிதித்துவம் வழங்குதல், நான்கு தொழிலாளர் சட்ட தொகுப்புகளை ரத்து செய்தல்,

☛ உணவு உள்ளிட்டு அனைத்து அத்தியாவசியப் பொருட்களுக்கான பொது விநியோக முறையை பரவலாக்கி விரிவுபடுத்துதல்.

☛அனைவருக்குமான முதியோர் ஓய்வூதியம்.

*4. கல்வி மற்றும் கலாச்சாரம்:*

☛ கல்வி உரிமையை உறுதி செய்தல், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தை கல்விக்கு ஒதுக்குதல்; பொதுக் கல்வி முறையை விரிவுபடுத்தி வலுப்படுத்த வேண்டும்; ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி (ஐ.சி.டி.எஸ்) அனைவருக்கும் விரிவு செய்தல்.

☛ அரசு நிதியுதவியுடன் அனைவருக்கும் பொது சுகாதார ஏற்பாடு; அத்தியாவசிய மருந்துகளின் விலையை குறைக்க வேண்டும்

☛ மதச்சார்பற்ற,ஜனநாயக பண்பாட்டை ஊக்குவித்தல்; அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து மொழிகளுக்கும் சமத்துவம்.

*5. சமூக நீதி:*

☛ சாதிய அமைப்பையும், அனைத்து சாதிய ஒடுக்குமுறைகளையும் ஒழிக்க வேண்டும்; தலித்துகள், ஆதிவாசிகள் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

☛ அனைத்து துறைகளிலும் பெண்களுக்கு சம உரிமை; சம வேலைக்கு சம ஊதியம், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீது கடுமையான நடவடிக்கைகள்.

☛ மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை உறுதிப்படுத்துதல், பாலியல் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

*6. தேர்தல் சீர்திருத்தங்கள் மற்றும் சுற்றுச்சூழல்:*

☛ உயர்மட்ட ஊழலை ஒழிக்க உறுதியான நடவடிக்கைகள்; தேர்தல் சீர்திருத்தங்கள், பகுதி பட்டியல் முறையுடன் கூடிய விகிதாசார பிரதிநிதித்துவ முறையை அறிமுகப்படுத்துதல்.

☛ சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், நச்சு வாயுக்களின் உமிழ்வைக் குறைத்தல்; புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவித்தல்; அனைவருக்கும் ஆற்றல் சமத்துவத்தை (energy equality) உறுதிசெய்தல்.

*7.வெளியுறவுக் கொள்கை:*

☛ஏகாதிபத்திய மேலாதிக்க எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்ட சுயேட்சையான வெளியுறவுக் கொள்கை; அமெரிக்காவுடனான அனைத்து ராணுவ மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்களையும் திரும்பப் பெறுதல்.

# அரசியல் நிலைப்பாடு

2.85 சுமார் பதினொரு ஆண்டு கால மோடி அரசாங்கத்தின் ஆட்சியில் வலதுசாரி, மதவெறி, எதேச்சதிகார சக்திகள் நவீன பாசிச குணங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வந்திருப்பதைக் காட்டுகிறது. மோடி அரசாங்கம் இந்துத்துவா சக்திகள் மற்றும் பெரும் முதலாளிகளின் கூட்டணியைப் பிரதிபலிக்கிறது. எனவே, நமது பிரதான கடமை என்பது ஆர்எஸ்எஸ்/பாஜக மற்றும் அதற்கு அடித்தளமாக இருக்கும் இந்துத்துவா/கார்ப்பரேட் கள்ளப்பிணைப்பை எதிர்த்துப் போராடி முறியடிப்பதேயாகும்.

2.86 பாஜக மற்றும் இந்துத்துவா சக்திகளைத் தனிமைப்படுத்தி தோற்கடிக்க, இந்துத்துவா சித்தாந்தத்திற்கும், மதவெறி சக்திகளின் செயல்பாடுகளுக்கும் எதிரான தொடர்ச்சியான போராட்டம் அவசியம். இந்துத்துவா மதவெறிக்கு எதிராக அனைத்து மதச்சார்பற்ற சக்திகளையும் பரந்த அளவில் அணிதிரட்டுவதற்கு கட்சி திட்டமிட்ட உறுதியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

2.87 இந்துத்துவா நவீன தாராளமய ஆட்சிக்கு எதிரான போராட்டங்களின் வெற்றிக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சுயேச்சையான பலத்தின் வளர்ச்சி மற்றும் இடதுசாரி சக்திகளின் வளர்ச்சி அவசியத் தேவையாகும். மேலும் இந்துத்துவா மதவெறிக்கு எதிரான போராட்டத்துடன் நவீன தாராளமயக் கொள்கைகளுக்கு எதிரான போராட்டத்தையும் இணைக்க வேண்டியதும் அவசியத் தேவையாகும்.

2.88 மோடி அரசாங்கம் மற்றும் பாஜக–விற்கு எதிரான போராட்டத்தை உழைக்கும் மக்களை ஒட்டச்சுரண்டிவரும் மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்களையும் வாழ்க்கை நிலைமைகளையும் கடுமையாகப் பாதித்திடும் கார்ப்பரேட் ஆதரவு மற்றும் நவீன தாராளமயக் கொள்கைகளுக்கு எதிரான வர்க்க மற்றும் வெகுஜனப் போராட்டங்களுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். கூட்டுக் களவாணி முதலாளித்துவம், தேசிய சொத்துக்களைக் கொள்ளையடித்தல் மற்றும் மிகப்பெரிய அளவில் தனியார்மயம் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டங்களில் கட்சி முன்னணியில் இருந்திட வேண்டும்.

2.89 மார்க்சிஸ்ட் கட்சி, நாடாளுமன்றத்தில் ‘இந்தியா’ அணி சேர்க்கையில் உள்ள கட்சிகளுடன் ஒத்துழைப்பு நல்கியும் மற்றும் நாடாளுமன்றத்திற்கு வெளியே ஒப்புக்கொள்ளப்பட்ட பிரச்சனைகளுடனும் ஒத்துழைத்தும் கட்சி செயல்படும். ஜனநாயகத்திற்கு எதிராக நடைபெற்றுவரும் எதேச்சதிகார தாக்குதல்கள், ஆட்சிக்கு எதிராக கருத்துக் கூறுபவர்களை நசுக்கிடவும் மற்றும் எதிர்க்கட்சியினர்மீதும் கொடுங்கோன்மைமிக்க சட்டங்களைப் பயன்படுத்துதல் மற்றும் அரசமைப்புச்சட்டத்தையும் அரசின் நிறுவனங்களையும் சீர்குலைத்திடும் முயற்சிகளுக்கு எதிராக, அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளுடன் மார்க்சிஸ்ட் கட்சி கைகோர்த்திடும்.

2.90 பாஜக–வை உறுதியுடன் எதிர்த்திடும் பிராந்தியக் கட்சிகளுடன் மார்க்சிஸ்ட் கட்சி ஒத்துழைத்திடும். அங்கெல்லாம் மக்களுக்கு நன்மை பயக்கும் எந்தவொரு கொள்கையையும் கட்சி ஆதரிக்கும். ஆனால் அதே சமயத்தில் உழைக்கும் மக்களைக் கடுமையாகப் பாதித்திடும் கொள்கைகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்டும்.

2.91 கட்சி, வர்க்க மற்றும் வெகுஜன ஸ்தாபனங்களின் கூட்டு மேடைகள் மற்றும் கூட்டு நடவடிக்கைகளை ஆதரித்திடும். முதலாளித்துவ கட்சிகளின் பின்னே உள்ள வெகுஜன மக்களை ஈர்த்திட ஒன்றுபட்ட நடவடிக்கைகளுக்கான அனைத்து முயற்சிகளையும் கட்சி மேற்கொள்ளும்.

2.92 கட்சியின் சுயேச்சையான பலத்தை வளர்ப்பதற்கு முன்னுரிமை அளித்திடும் அதே சமயத்தில், இடதுசாரி ஒற்றுமையை மீட்டெடுத்து வலுப்படுத்துவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். ஒன்றுபட்ட இடதுசாரிக்கட்சிகளின் பிரச்சாரம் மற்றும்

போராட்டங்கள் இடதுசாரிகளின் மாற்றுக்கொள்கைகளை உயர்த்திப்பிடித்திட வேண்டும். ஓர் இடதுசாரி மற்றும் ஜனநாயக மேடை மற்றும் திட்டத்துடன் அணிதிரளும் விதத்தில் அனைத்து இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகளையும் அவற்றில் செயல்படும் வெகுஜன ஸ்தாபனங்கள் மற்றும் சமூக இயக்கங்களையும் அணிதிரட்டவும் கட்சி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

2.93 மேலே கூறப்பட்டுள்ள அரசியல் நிலைபாட்டின் அடிப்படையில் பாஜக-விற்கு எதிரான வாக்குகளை மிக அதிகபட்சமாக குவிக்கும் விதத்தில் பொருத்தமான தேர்தல் உத்திகளைப் பின்பற்றிட வேண்டும்.

## கடமைகள்

2.94 1. கட்சி நவீன தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகள், இந்துத்துவா மதவெறி மற்றும் ஜனநாயகத்தின் மீதான எதேச்சதிகாரத் தாக்குதல்களுக்கு எதிராக தன்னுடைய பிரச்சாரங்களையும் போராட்டங்களையும் கட்சி முடுக்கிவிட வேண்டும்.

2, வாழ்வாதாரப் பிரச்சனைகள், நிலம், உணவு, ஊதியம், வீட்டு மனைகள், சமூகப் பாதுகாப்புப் பயன்பாடுகள் மற்றும் வேலைவாய்ப்புகள் மீது கிராமப்புற ஏழை மக்கள், உழைக்கும் வர்க்கம் மற்றும் நகர்ப்புற ஏழைகள் மேற்கொண்டுவரும் போராட்டங்களை வளர்த்தெடுத்து, தீவிரப்படுத்திட வேண்டும்.

3. இந்துத்துவா மதவெறிக்கு எதிராக அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளின் விரிவான ஒற்றுமையைக் கட்ட கட்சி முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

4. ஜனநாயகம், ஜனநாயக உரிமைகள் மற்றும் குடிமை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உறுதியான நிலைபாட்டை கட்சி மேற்கொண்டிட வேண்டும். மேலும் ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கருத்து கூறுபவர்களை நசுக்கிட மேற்கொள்ளப்படும் எதேச்சதிகாரத் தாக்குதல்களுக்கு எதிராகவும், ஒன்றிய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் புலனாய்வு முகமைகளைத் துஷ்பிரயோகம் செய்வதையும்; மற்றும் அரசமைப்புச்சட்ட அமைப்புகளை நாசமாக்கிவருவதையும் எதிர்த்து பரந்த அளவில் ஒற்றுமையை உருவாக்க ஒத்துழைத்திட வேண்டும்.

5. அனைத்து விதமான சாதிய ஒடுக்குமுறை மற்றும் பாகுபாடுகளுக்கு எதிராகவும் போராட்டங்களைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். பெண்கள், தலித்துகள், பழங்குடியினர் மற்றும் மதச் சிறுபான்மையினர் உரிமைகளுக்கான போராட்டங்களையும் ஆதரித்திட வேண்டும். மேலும் பழங்குடியினர் பகுதிகளில் பணியாற்றுவதில் கட்சி சிறப்புக் கவனம் செலுத்திட வேண்டும்.

6. இந்திய மக்கள் மத்தியில் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வை அதிகரித்திட வேலை செய்திட வேண்டும்; மற்றும் மோடி அரசாங்கத்தின் அமெரிக்க ஆதரவு வெளிநாட்டுக் கொள்கை மற்றும் அமெரிக்காவுடனான ராணுவ சூழ்ச்சிக் கூட்டணிக்கு எதிராக வெகுஜனக் கருத்தை அணிதிரட்டவும் கட்சி வேலை செய்திட வேண்டும்.

7. மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஆதரவாகவும், மக்களை அணிதிரட்ட வேண்டும். கேரளாவில் இடது ஜனநாயக முன்னணி அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கும், மக்கள் நலக் கொள்கைகளை அமல்படுத்துவதற்கான அதன் முயற்சிகளை ஆதரிக்கவும் மக்களைத் திரட்ட வேண்டும்.

8. இடது ஜனநாயக முன்னணியைக் கட்டி எழுப்பவும், இடது ஜனநாயக முன்னணியே மாற்று என்பதை முன்னிறுத்தவும் கட்சி பாடுபட வேண்டும். இது, இந்தியாவின் நிலைமைகளுக்குப் பொருந்திப்போகும் விதத்தில் “சோசலிசமே மாற்று” (“Socialism is the alternative”) என்ற பிரச்சாரத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

# எழுவோம், சவால்களை முறியடிப்போம் !

2.95 மேற்கண்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு, கட்சியின் சொந்த பலத்தை பெருமளவில் வளர்ப்பது முற்றிலும் தேவையானதாகும்.

**❖ அரசியல், சித்தாந்த, பண்பாடு மற்றும் அமைப்பு ரீதியாக, ஆர்.எஸ்.எஸ்-பாஜகவை கட்சி எதிர்கொள்ள வேண்டும்.**

**❖ நவ-தாராளமய அமைப்பின் கீழ் நடைபெறும் சுரண்டலுக்கு எதிராக தொழிலாளர்கள், விவசாயிகள், கிராமப்புற தொழிலாளர்கள் என உழைக்கும் மக்களின் அனைத்து பிரிவினரின் போராட்டத்தை கட்சி உறுதியோடு முன்னெடுக்க வேண்டும்.**

**❖ உண்மையான மாற்றினை மக்கள் முன் வைக்க கட்சி அனைத்து இடதுசாரி ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்ட வேண்டும்.**

2.96 ஒட்டுமொத்த கட்சியும் இந்தத் தீர்மானத்தின் அரசியல், சித்தாந்த சாரத்தை இந்திய மக்களிடம் எடுத்துச் சென்றிடுவோம்! மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றிய ஒரு ஸ்தாபனமாக ஒரு வலுவான அகில இந்திய கட்சியைக் கட்டியெழுப்பிடும் இலக்கை நோக்கி முன்னேறுவோம்! கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பெருமைமிகு மரபுகளின் அடிப்படையில் எதிர்வரும் சவால்களை முறியடிக்க நிச்சயமாக வீறுகொண்டு எழுவோம்.

# அரசியல் தீர்மானம் வரைவின் மீது திருத்தங்களை அனுப்புவதற்கான நடைமுறை

1. அனைத்து திருத்தங்களும் பாரா எண் / வரி எண்ணைக் குறிப்பிட வேண்டும்.
2. திருத்தத்தை முன்மொழியும் சம்பந்தப்பட்ட தோழர் / கிளை மற்றும் கமிட்டி குறிப்பிடப்பட வேண்டும்.
3. அனைத்து திருத்தங்களும் மார்ச் 5, 2025 க்குள் அனுப்பப்பட வேண்டும்.
4. மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும் திருத்தங்கள் டெக்ஸ்ட் அல்லது வேர்ட் கோப்புகளாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். ஆங்கிலம் அல்லாத பிற மொழிகளில் அனுப்புபவர்கள் பிடிஎப் கோப்புகளை அனுப்ப வேண்டும்.
5. “வரைவு அரசியல் தீர்மானத்திற்கான திருத்தங்கள்” (AMENDMENTS TO THE DRAFT POLITICAL RESOLUTION) மின்னஞ்சலின் பொருளில் குறிப்பிடப்பட்டு **pol-24@cpim.org** க்கு அனுப்பப்படலாம்.
6. தபால் / கூரியர் மூலம் அனுப்பப்படும் திருத்தங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்:

COMMUNIST PARTY OF INDIA (MARXIST), CENTRAL COMMITTEE,
A.K. GOPALAN BHAVAN,
27-29 BHAI VIR SINGH MARG, NEW DELHI 110 001.

7. அஞ்சல் உறையில் ‘வரைவு அரசியல் தீர்மானத்திற்கான திருத்தங்கள்’ (AMENDMENTS TO THE DRAFT POLITICAL RESOLUTION) என்று குறிக்கப்பட வேண்டும்.
8. திருத்தங்கள் பின்வரும் வடிவத்தில் அனுப்பப்பட வேண்டும்:

| வ.எ | பாரா எண் | வரி எண் | திருத்தம் | முன்மொழிந்தவர் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |
| 8. | | | | |

உழைக்கும் மக்களின் போர்வாள்
ஊடக உலகில் உண்மையின் பேரொளி

தீக்கதிர் நாளிதழ்

படியுங்கள்!

ஆண்டுச் சந்தா
ரூ.2000

அரையாண்டுச் சந்தா
ரூ.1050

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
ஆங்கில வார இதழ்

PEOPLE'S DEMOCRACY

சந்தாதாரர் ஆவீர்!

ஆண்டுச் சந்தா
ரூ.500

இலக்கிய மாத இதழ்

செம்மலர்

படியுங்கள்!

ஆண்டுச் சந்தா
ரூ.270

தத்துவ மாத இதழ்

மார்க்சிஸ்ட்

படியுங்கள்!

ஆண்டுச் சந்தா
ரூ.160